முஸ்லிம் டைஜஸ்ட்

# MUSLIM Digest

உலகளாவிய தகவல் மஞ்சரி



மணிமேகலைப் பிரசுரம்

இலங்கைத் தமிழ்மணி

## மானா மக்கீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் டைஜஸ்ட்

## உலகளாவிய தகவல் மஞ்சரி

தொகுப்பாசிரியர்
இலங்கைத் தமிழ்மணி
**மானா மக்கீன்**

பதிப்பாசிரியர்:
'இலக்கியச் சிந்தனாமணி'
**லேனா தமிழ்வாணன்,** எம்.ஏ.,

மணிமேகலைப் பிரசுரம்
தபால் பெட்டி எண் : 1447,
4, தணிகாசலம் சாலை,
தி.நகர், சென்னை – 600 017.
தொலைபேசி எண் : 4342926
தொலை நகல் : 044 – 434 6082

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் பதிப்பு : முதலாம் பாகம் – மார்ச், 1996

எம்.எம். (மானா) மக்கீன்
B 54– 1/2 – N.H.S. Colombo - 10
SRILANKA

முகப்பும் உட்பக்க அமைப்புகளும்
ஓவியர் : "ஜமால்" (சென்னை)

விலை : ரூ. 24.00 (இருபத்து நான்கு ரூபாய்)

50/-

லேசர் வடிவமைப்பு : ஏகம் கம்ப்யூட்டர்ஸ்
78, எல்லீஸ் ரோடு,
சென்னை – 2.
தொலைபேசி : 84 85 99

அச்சிட்டோர் : ஸ்ரீ முருகன் ஆப்செட்
27, பி.வி. கோயில் தெரு,
சென்னை – 4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓரிரு வார்த்தைகள் ...



என் தந்தையின் அன்புச் சீடர் இலங்கை ஜனாப் மானா மக்கீன் அவர்களின் 'முஸ்லிம் டைஜஸ்ட்' வெளியீடு குறித்து எனக்குப் பெருமிதம்; பூரிப்பு.

ஓர் எழுத்தாளன் எழுத்துக் குழந்தையைப் பெற மட்டும் கணக்குப் பார்க்கவே கூடாது.

அதுவும் 'மானா' போன்ற ஜனரஞ்சக எழுத்தாளர்கள் கணக்கு வழக்கின்றி எழுதிக் குவிக்க வேண்டும். எதையும் சுவைபடச் சொல்லும் ஆற்றல் உள்ள இந்நூலாசிரியருக்கு இந்த வேண்டுகோள் வெகுவாகப் பொருந்தும்.

அல்ஹாஜ் குலாம் ரசூல் அவர்கள் பற்றிய 'பேனா முனையில் அரை நூற்றாண்டு' நூல் வெளியீட்டு விழாவிற்காக திருச்சியில் கூடிய முஸ்லிம் அன்பர்கள் அனைவர் மத்தியிலும் ஓர் அன்பு அறிவிப்பைச் செய்தேன். மணிமேகலைப் பிரசுரம் இனித் தொடர்ந்து முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிடும் என்று. அதன் முதல் கட்டமாக இந்நூல் வெளிவருகிறது. இது தொடரும்.

தற்சமயம் தமிழகத்தில் 'மானா'வின் வளர்ச்சி பிரகாசமாக இருக்கிறது. அவரது வெற்றிக்கு வாழ்த்துக்கள்.

29/02/96

சென்னை - 17.

அன்பன்,

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1996, மார்ச் 3-ந்தேதி அன்று, தஞ்சாவூர், அய்யம் பேட்டை பி.ஏ.டிரஸ்ட் ஏற்பாட்டில் சக்கராப் பள்ளியில் நிகழ்ந்த 17-ஆவது திருக்-குர்ஆன் மாநாட்டின் மகிமைமிகு மேடையில், **மணிமேகலைப் பிரசுரம்** சார்பில், பதிப்பாசிரியர் **'இலக்கியச் சிந்தனாமணி' திரு. லேனா தமிழ்வாணன்** எம்.ஏ. அவர்கள் வேண்டுகோளுக்கு அமைய 'மனிதநேய மாமணி' இலங்கைத் தொழில் அதிபர், வள்ளல் **அல்ஹாஜ் ஹாஸிம் உமர்** அவர்களால் இந்நூல் வெளியிடப்பட்டது.*

தவறுகள், எழுத்துப்பிழைகள் இருக்கக் கண்டால் சுட்டிக்காட்டத் தவறாதீர்கள். இரண்டாம் பதிப்பில் திருத்தக் காத்திருக்கிறோம். நன்றி.

**இங்கும் இந்நூல் பெறலாம்:**

- **காஜியார் புக் டிப்போ,**
  **முஸ்லிம் தெரு,**
  **எம்.சாவடி, தஞ்சாவூர்.**
- **அனஸ் புத்தக நிலையம்,**
  **81, அங்கப்பன் தெரு,**
  **சென்னை - 600 001.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது, ஒரு மதத்தின் சார்பான
நூல் அல்ல.
உலகில் தனியிடம் வகிக்கும்
ஒரு சிறப்பான சமூகத்தின்
குறிப்புகள் சில பல அடங்கிய
தகவல் மஞ்சரி
பக்கங்கள் அனைவருக்கும்
திறந்த வண்ணம் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்.

'அருளாளனும், அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்' என்பதை உச்சரிக்காமல் எந்த உண்மை முஸ்லிமின் நல்ல காரியமும் நடக்கக்கூடாது. நடக்க முடியாது.

அது, இந்த முஸ்லிம் டைஜஸ்டுக்கும் விதிவிலக்கல்ல.

114 அத்தியாயங்கள் கொண்ட அல்-குர்ஆனில் 113 இடங்களில் "பஸ்மலா" எனும் "பிஸ்மில்லாஹ்" ஆட்சி புரிகிறது.

112 இடங்களில் அத்தியாயங்களின் தலைப்பிலும் -

ஒரேயொரு அத்தியாயத்தில் மட்டும் - அதாவது, 27ம் அத்தியாயம் 30ம் வசனத்தில் - இடைநடுவில் ஓரிடத்திலும் அது நிரந்தர இடம் பெற்றுள்ளது. 9-ம் அத்தியாயத் தலைப்பில் மட்டும் அது இல்லை.

இந்த 'பிஸ்மில்லாஹ்வில், "அல்லாஹ்-ரஹ்மான்-ரஹீம்" என மூன்று பெயர்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

இதில் அர்-ரஹ்மானுக்கும் அர்-ரஹீமுக்கும் அற்புதமான சிறப்பு உள்ளது.

அல்லாஹ் என்னும் சிருஷ்டிகர்த்தா: அர்ரஹ்மான் (அருளாளன்).

அர்ரஹீம் - அன்புடையோன்.

இறைவனது 99 நாமங்களிலும் இந்த இருபெயர்கள் மட்டுமே "பிஸ்மில்லாஹ்"வில் சேர்க்கப்பட்டுள்ளன.

இதன் காரணம் என்னவாக இருக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது நம்மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் முதிய மூதறிஞர் மௌலானா மௌலவி, 'பிறை' எம்.அப்துல் வஹாப் பி.எ. அவர்களது ஒரு குறிப்பு இதற்குப் பதில் தரும்.

''பிஸ்மில்லாஹில் ஜப்பாரில் கஹ்ஹார்'' - அடக்கியாளும் கோபமுடையோனின் திருநாமத்தால் என திருமறை தொடங்கப் படவில்லை. படைத்த நாயன் தன் பலத்தைக் காட்ட விரும்பவில்லை. மாறாக, தன் கிருபையை தன் கருணையை சுட்டிக்காட்டுகிறான். அதனால் தான் 'பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்' - அருளாளனும் அன்புடையோனுமாகிய ஆண்டவனின் திருநாமத்தால் எனத் துவங்குகிறது அல்லாஹ்வின் அருள் மறை.

சுருக்கமான விளக்கம் : இறைவனிடம் கடுமையைவிட, கோபத்தைவிட, அடக்கியாளும் தன்மையைவிட, அருளும், அன்பும், இரக்கமும், ஈகையும், பொறுமையும் மிகவாகக் குடிகொண்டுள்ளன என்பதற்கு ஒரு சான்றே அர்ரஹ்மானும் அர்ரஹீமும்.

அதனால்தான் எம் உடலிலிருந்து நாம் விடும் ஒவ்வொரு உயிர்மூச்சிலும் ''பிஸ்மி'' இரண்டறக் கலந்து நிற்கவேண்டும் எனப் பெருமானார் (ஸல்) அவர்கள் விரும்பினார்கள்.

ஆகவே - இலைமறைத்த கனிகளாக உள்ள இஸ்லாமிய கலை, கலாசார தகவல்களைப் பகிர்ந்துகொள்ள பிஸ்மி சொல்லி ஆரம்பிக்கின்றேன்.

இது ஒரு சிறு முயற்சி. மர்ஹூம் எம்மாரெம் (அப்துற்றஹீம்), அவர்களும், வாழ்ந்து கொண்டிருக்கும் கலைமாமணி மணவை (முஸ்தபா) அவர்களும் தங்களது 'இஸ்லாமியக் கலைக் களஞ்சிய' ங்களில் ஒருதுளி அளவே நிறைவேற்ற முடிந்தது.

நான் எம்மாத்திரம்? ஏதோ... அங்கும் .,. இங்கும்... எங்கும்!

அல்ஹம்துலில்லாஹ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




* நல்லதே நினைப்போம்
* நல்லதே செய்வோம்
* நல்லதே கூறுவோம்
* நல்லதே நடக்கும்.

- இந்த நான்கு வரிகளில் நிறையப்பிடிப்பு எனக்கு. அதற்காக எல்லாம் வல்லவனை வணங்கி நிற்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கஅபா' கண்களில் ...

அது, 'கஅபத்துல்லாஹ்' என்பதன் சுருக்கம். 'சதுரம்' என்பது தமிழ். கருங்கற்களாலான வெற்றுக் கட்டடம். ஒரு புறத்தில் 'ஹஜரூல் அஸ்வத்' கருமை நிறக்கல். மேற்புறம் அல்-குர்ஆன் மணிமொழிகள் பொறித்த பட்டுக் கம்பளம். அதை 'கிஸ்வா' என்பர். ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்துப் போர்த்துவர். வருடம் பூராவும் வேலை நடக்கும். ஒரு தனித் தொழிற்கூடமே உண்டு.

கஅபா உட்பகுதியில் மூன்று சந்தன மரத் தூண்கள் உள்ள செய்தி ஒரு சிலருக்கே தெரியும்.

அதுபோல, 286 கிலோ சுத்தத் தங்கம் இரு கதவுகள் அமைக்கவும் செலவாகியுள்ளது பலருக்குத் தெரியாதது.

இன்னொன்றையும் அறியாதவர்கள் உண்டு.

அதற்கு ''மஸ்ஜிதுல் ஹராம்'' என்றும் பெயர் உண்டு.

திடுக்கிட்டு விடவேண்டாம். ''மஸ்ஜிதுல் ஹராம்'' தான்.

அந்தச் சொல்லுக்கு 'தடுக்கப்பட்டது' என்றே கேள்விப்பட்டதனால் நமக்கு அழைக்கத் தயக்கம் வரும். அங்கே அழைக்கிறார்கள்.

ஆனால், கஅபாவில் சில காரியங்கள் கண்டிப்பாகத் தடுக்கப்பட்டுள்ளன. அவற்றை அங்கே செய்ய முடியாது. ஆகவே 'மஸ்ஜிதுல் ஹராம்' என்பதும் சரியே.

மேலும், அதற்கு, 'கண்ணியத்திற்குரியது என்றும் ஒரு பொருள் இருக்கிறது.

சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன் விஸ்தீரணம் செய்யப்பட்ட இங்கே, இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் வரையில் ஒரே சமயத்தில் வணங்கலாமாம்.

அந்த வகையில் உலக வணக்கத்தலங்களுள் கஅபாவுக்கே முதன்மை இடம்.

இப்படி, பல பெருமைகளுக்குரிய இறைவனது இல்லம் நோக்கி இந்தச் சாமான்யனின் இறைவணக்கம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி வாசல்கள் - ஒரு பறவைப்பார்வை!

இப்பொழுது உலகளாவியரீதியில் நாடுதோறும், நாள்தோறும் பள்ளிவாசல்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றன.

மூன்று ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்கா - மொரோக்கோ, கஸபலங்காவில் கடல் அலைகளைத் தழுவியவாறு கட்டி முடிக்கப்பட்ட பள்ளிவாசல் உலகின் மூன்றாவது பெரிய பள்ளிவாசல் எனச்சொல்கிறார்கள். அதன் நவீன அமைப்புகளைப் புரிய மாதக் கணக்காகுமாம்!

ஒரே நேரத்தில் இருபதாயிரம் பேர் உள்ளிலும், எண்பதாயிரம்பேர் வெளிப்பகுதியிலும் தொழ முடியுமாம்!

172 மீட்டர் உயர மினாராவும் பூகம்பம் ஏற்பட்டால் பாதிக்காத தூண்களும் அதன் விசேட அம்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை சமாதான நீதிபதி, ஆன்மீக அறிஞர், அல்ஹாஜ் மௌலவி சலாஹுத்தீன் பாரி (கண்டி மௌலானா) அவர்கள், பல நாடுகளையும் பல தடவை சுற்றி வந்தவர். செல்லும் இடங்களில் பள்ளிவாசல்கள் எத்தனை என்கின்ற புள்ளி விவரத்தையும் திரட்டி வரும் பழக்கம் கொண்டவர். அவருடைய தகவல் ஒன்றின்படி உலகில் நாற்பத்தி ஐந்து லட்சம் இறையில்லங்கள் இலங்கிக் கொண்டிருக்கின்றனவாம்!

இப்படியான லட்சத்தில் எங்கே அதிகம் என்று நான் ஆராய்ந்ததில் 'துருக்கி' என விடை கிடைத்தது!


ஸ்ரீநகர் ஜிம்ஆ மஸ்ஜித்

அங்கே எங்கும் மஸ்ஜித்கள் மயம்! ஆண்டுக்கு 150 என்ற கணக்கில் கட்டப்பட்டு வருகின்றன! பள்ளிவாசல்களின் முக்கியத்துவம் குறித்து மக்களை விழிப்புணர்வு படுத்த 'மஸ்ஜித் வாரம்' அனுஷ்டிக்கப்படுகிறது! (காதைக் கிட்ட கொண்டு வாருங்கள் கண்ணூறு பட்டு விடும்! இஸ்தம்புல் நகரில் மட்டும் ஒரு பழைய தகவலின்படி 444! இப்பொழுது இன்னும் அதிகம் பெருகியிருக்கலாம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்து ஒரு பெரு நகரை எடுத்துக்கொண்டால் அங்குள்ள அறுபத்து நான்கு தெருக்களில் அறுபத்து நான்காம்! ஊர்ப்பெயரை சிலர் தெரிந்திருக்கலாம் - காயல்பட்டணமே!.

இதேபோல, இலங்கையின் கிழக்கில் 'காத்தநகர்' என்கிற காத்தான்குடி இருக்கிறது, இங்கே மொத்தம் முப்பதியிரண்டு!




கொழும்பின் பிரபல வர்த்தக வட்டாரமான இரண்டாம் குறுக்குத் தெருவிலும், மூன்றாம் குறுக்குத் தெருவிலும் உள்ள பள்ளிகளோடு இந்திய முஸ்லிம்களின் சம்பந்தமுண்டு.

'சம்மாங்கோட்டுப்பள்ளி' என இரண்டாம் குறுக்குத் தெரு பள்ளிவாசல் இன்றும் அழைக்கப்பட்டு தமிழகத்து முஸ்லிம்களை - குறிப்பாக காயல் ப்பட்டண வாசிகளை - தினமும் நினைப்பூட்டுகிறது.

ஒருகாலத்தில் காயல், பல்லாக்குக் குடும்பத்தோடு பின்னிப் பிணைந்து நின்ற பள்ளி நிர்வாகம் இன்றைக்கும் விட்டுப் போகவில்லை. ஆனால், தொண்டி, நம்புதாளை, தேவிப்பட்டணம் வர்த்தகப் பெருமக்களும் இப்பள்ளிப் பரிபாலனத்தில் முக்கியப்பங்கு வகிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் குறுக்குத் தெருவில் அமைந்திருப்பதோ "மேமன் ஹனபிப்பள்ளி"! காலஞ்சென்ற பெரியார் மௌலானா ஷா அப்துல் அலீம் சித்தீக் 1925 லேயே நிறுவியது! இன்று முக்கால் நூற்றாண்டை நோக்கி முதுமைநடை பயின்று கொண்டிருக்கிறது. அத்தோடு இப்பள்ளிக்கும் பள்ளப்பட்டிக்கும் ஒரு நெருங்கிய தொடர்புண்டு!

அந்தப் பள்ளப்பட்டி மண்ணின் புகழ் பெற்ற "மணிமொழி மௌலானா" ஹாஃபிஸ் எம்.ஜே. கலீலுர் ரஹ்மான் அவர்கள் இங்குதான் பத்து ஆண்டுகளுக்கு மேலாக மெம்பரில் நின்று கம்பீரக் குரல் ஒலித்தார். அவரைத் தொடர்ந்து திருப்பத்தூர் அப்ஸலுல் உலமா ஹாஜி பீ.கே.எம் அப்துல் காதிர் அவர்களும் பங்களிப்புச் செய்தார்.

இவ்விரு தமிழ்நாட்டு உலமாக்களாலும் மேமன் சமூக மக்கள் மிக்க பெருமைப்பட்டனர். இன்று அவர்களது இடத்தை நிரப்ப தமிழகத்தார் யாருமில்லை!

இன்றைக்கு இந்தியாவைப் பொறுத்த வரையில், தலைநகர் டில்லியில் இருக்கிற ஜாமிஆ மஸ்ஜிதின் வரலாற்றுப் பெருமைக்கு ஈடும் இல்லை., இணையுமில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் வல்லவனுக்காக ஓர் இறையில்லத்தையும், இதயத்தில் பதிந்துவிட்ட இல்லத்தரசிக்காக (மும்தாஜ்) ஒரு தாஜ்மஹாலையும் உருவாக்கிய ஷாஜஹான், தான் அமைத்த 'ஷாஜஹானா பாத்' (பழைய டெல்லி) நகரில் கட்டுவித்த பள்ளிவாசல் இது.

நமது காயல்வாசிகளும், நீடூர்-நெய்வாசல் மாணிக்கங்களும் தொழில் வித்தகர்களாகத் திகழும் ஹாங்காங்கிலும் கண்ணைக்கவரும் பள்ளிவாசல் உண்டு. இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் சீனத்தின் ஆதிக்கத்திற்குள் அந்தத்தீவு போகும்பொழுது இந்த எழிலில் எந்தவித மாசும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பது நமது துஆக்களாக வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிக்கிழமை!

**- - - நாட்களின் நாயகம்**

வெள்ளிக்கிழமை நாட்களுக்கு நாயகமானது!

ஏழை எளியவர்களுக்கு அது பெருநாளாகவும், ஹஜ்ஜாகவும் கொள்ளத்தக்கது!

வெள்ளிக்கிழமை நபிபெருமான் (ஸல்) அவர்கள் மீது அதிக 'ஸலவாத்' ஓதுவதும், தானதர்மங்கள் செய்வதும், இரவிலோ, பகலிலோ அல்-கஹ்பு' ஸூறாவை ஓதுவதும், குளித்து, நல்லாடை அணிந்து, 'அத்தர்', 'சுர்மா'த்தடவி நேரகாலத்துடன் அமைதியாக மஸ்ஜிதுக்குச் சென்று, 'தஹிய்யத்', தொழுது, தூண்களில், சுவரில் சாயாமல் அமர்ந்து கொள்வதும் விரும்பத்தக்கது.

குத்பாப்பிரசங்கம் நிகழும் போது கண்டிப்பாக எதுவும் பேசலாகாது.

ஜும்ஆவின் பிந்திய 'ஸுன்னத்' விசேடமானது.

இந்த ஆலோசனைகளை எனக்கு வழங்கியவர் பாசமிகு 'கண்டி மௌலானா' அல்ஹாஜ்., மௌலவி எச்.சலாஹுத்தீன் பாரி, அனைத்திலங்கை சமாதான நீதவான் (ஜே.பி.)

இன்னொரு தகவலையும் சொல்லட்டுமா?
மூஸா (அலை) அவர்கள் சபூராவையும் -
நபி(ஸல்) அவர்கள் கதீஜா, ஆயிஷா(ரலி) ஆகியோரையும் -
சுலைமான் (அலை) பல்கீஸையும் -
ஆதம் (அலை) ஹவ்வா(அலை) அவர்களையும்
கரம்பற்றியது மணம் புரிந்தது வெள்ளிக்கிழமை அன்றே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலிமா - கிறிஸ்துவ மன்னர் நாணயத்தில்!

✵ எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆட்சி புரிந்த ஒஃப்பான் என்னும் கிறிஸ்தவ மன்னர் தனது நாணயத்தில் கலிமாவைப் பொறித்திருந்தார்!

✵ ஒன்பதாம் நூற்றாண்டில் அயர்லாந்திலுள்ள ஒரு சிலுவையின் மீதும் கலிமா பொறிக்கப்பட்டிருந்தது!

## விக்கிரமாதித்தன் கதை எழுதியவர் ஒரு முஸ்லிம்!

ஆராய்ச்சி அறிஞர் மயிலைல சீனி வெங்கடசாமி தனது ''பத்தொன்பதாம் நூற் றாண்டின் தமிழ் இலக்கியம்'' என்கின்ற நூலிலே பக்கம் 170-ல் சொல்வது இப்படி:

'1871-ல் அச்சுவாகனமேறிய விக்கிரமாதித்தன் கதை முகம்மது இபுறாஉறிம் சாயபு என்கின்ற தமிழ் முஸ்லிம் எழுதியது'

-இந்த வகையில் இயற்றமிழில் கதைக்காவியம் படைத்தளித்த முதல் உரைநடை நூலாசிரியர் ஒரு தமிழ் முஸ்லிம் என்பதை அறிந்து அதிசயப்பட வேண்டும். இந்த முகம்மது இபுறாஉறிம் சாயபு என்பவர் மண்டபம் மரைக்காயர் குடும்பத்தைச் சார்ந்தவர் எனச் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அஸர்த் தொழுகை ஒரு நோய் நிவாரணி!

மனிதனின் உடலாரோக்கியத்துக்கு அஸர்த் தொழுகை மிகவும் துணை செய்கிறது. இது உண்மை.

அஸர்த் தொழுகையை நிறைவேற்றுவதில் விசேட கவனம் செலுத்துமாறு அல் குர்ஆன் கூறுகிறது.

ஐங்காலத் தொழுகைகளுக்கும் நடுவில் அமைந்துள்ள (அஸர்த்) தொழுகையை கிரமமாகப் பேணி நிறைவேற்றுங்கள். அல்லாஹ்வை வணங்குவதில் மிக்க உள்ளச்சத்தோடு நில்லுங்கள். (2:238)

ஸூறத்துல் அஸ்ர் எனப்படும் 103ம் அத்தியாயத்தின் ஆரம்பமே வல் அஸ்ரி என்று சத்தியத்துடன் ஆரம்பமாகிறது. இங்கேயும் அஸ்ர் எனப்படுவது அஸர்த் தொழுகை என்று விளக்கம் கூறப்படுகிறது.

எல்லாத் தொழுகைகளையும் பேணித் தொழுகின்ற முஸ்லிம்களுக்கு, அஸர்த் தொழுகையின் முக்கியத்துவம் பெரிதாகத் தென்படுவதில்லை. ஆகவே அதன் விசேட தன்மையும் உணரப்படுவதில்லை.

மூளையின் மத்தியமண்டலத்தின் பிரதானமான செயற்பாடுகட்கும் அஸர்த் தொழுகைக்கும் நிறைய சம்பந்தமுண்டு.

மூளையில் இரு வகையான திரவங்கள் சுரக்கின்றன. ஒன்று Cotisone எனப்படுவது மற்றது Adrienaline எனப்படுவது. அவசர நிலைகளில் இவ்விரு திரவங்களின் செயற்பாடு மூளையைப் பெரிதும் தாக்குகின்றன. மூளையின் துடிப்பில், இவ்விரு திரவங்களுக்கும் தனித்தனி தாக்கங்களுண்டு.

இங்கே நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, Adrienaline என்பதையே, நாடித் துடிப்பின் வேகம், இரத்த நாளங்களின் கட்டுப்பாடு, உமிழ்நீர் சுரத்தல், இரத்த அழுத்தம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வை, இரத்தத்தில் செவ்வணுக்களை உருவாக்கல், இரத்தப் பெருக்கைத் தணித்தற்காக இரத்தம் உறையச் செய்தல் ஆகியவற்றுக்கு இத்திரவத்தின் தொழிற்பாடு மிகவும் முக்கியமாகும். தேவையான போது உடல் உறுதியாகவும் தெம்புடனும் இருக்கவும் அப்பால் இளைப்பாறும்போது உடல் சமநிலை பெறவும் இத்திரவம் மிகவும் பிரதானமாகும்.

அடிக்கடி பயத்தால் பாதிக்கப்படுதலும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தலும் சில வேளை சில நோய்களை உருவாக்கக் கூடும். இதற்கு Psychosomatic எனப்படுகிறது. மேலே கூறப்பட்ட நிலைகளும் இத்தகைய நோய்களுடன் சம்பந்தப்படுகின்றன.

இவ்வளவு முக்கியமான Adrienaline திரவம் உச்சக் கட்ட அளவில் செயற்படும் வேளையிலேயே அஸர்த்தொழுகை நிறைவேற்றப்படு கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸர்த் தொழுகை மனிதனுக்கு ஆறுதலைக் கொடுக்கிறது. இந்த ஆறுதல் மூளையின் Hippocampus எனும் பகுதிக்கு பெரும் ஊக்கமளிக்கிறது. இதன் பயனால் Parasympathetic System எனப்படும் தொகுதி ஊக்குவிக்கப்படுகிறது. Sympathetic System எனும் தொகுதி கட்டுப்படுத்தப்படுகிறது. இது நிகழ்வது மூளை மண்டலத்தின் இயக்கம் உச்சக் கட்டத்திலிருக்கும்போது - அதாவது அஸர்த் தொழுகையின் நேரத்திலேதான்.

- எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் சில ஆண்டுகளுக்கு முன்னால் ஓர் அனைத்துலகக் கருத்தரங்கில் ''அல்-குர் ஆனில் மருத்துவ உண்மைகள்'' என்பது பற்றி ஆராயப்பட்டது. அதில், டாக்டர் ஸஹைர் கராமி என்பவர் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரையிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களே இதுவரை நீங்கள் படித்தது.

## 1242 ஆண்டுகளைக் கடந்த மீஸான்!



ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த பல மீஸான்கள் இலங் கையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உறிஜ்ரி 337 - கி.பி. 948ல் கொழும்பில் நாட்டப்பட்ட ஒன்று.

உறிஜ்ரி 729 - கி.பி. 1328ல் திருகோணமலையில் கண்டெடுத்த ஒன்று.

மூன்றாவதாக காலிமாநகரில் கண்டெடுக்கப்பட்ட ஒன்று. இது, முன் இரண்டையும் விட வயதில் கூடிவிட்டது.

அதில், 'ஹிஜ்ரி 137.09.08 (கி.பி.754) என்ற தேதியும் அசன மரிக்கார் என்ற பெயரும் தமிழில். ஆம், இனிய இன்பத்தமிழில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக முஸ்லிம் உம்மத்

★ உலக முஸ்லிம்களின் மொத்த ஜனத்தொகை 1160 மில்லியன். பெரும்பான்மையின முஸ்லிம்கள் - 824 மில்லியன் சிறுபான்மையின முஸ்லிம்கள் – 336 மில்லியன்

★ உலக ஜனத்தொகையில் முஸ்லிம்களின் வீதம் - 23.2 பெரும் பான்மையின முஸ்லிம்களின் வீதம் - 15.3 சிறுபான்மையின முஸ்லிம்களின் வீதம் – 7.

★ உலக ஜனத்தொகையில் ஐவரில் ஒருவர் முஸ்லிம்.

★ உலக ஜனத்தொகையில் 15 பேரில் ஒருவர் சிறுபான்மையின முஸ்லிம்.

★ இன்னும் 10 வருடங்களில் உலக ஜனத்தொகையில் முஸ்லிம்களின் வீதம் - 26.85% என அமையும்.

★ 2000ம் ஆண்டளவில் உலகிலுள்ள நால்வரில் ஒருவர் முஸ்லிம். 12 பேரில் ஒருவர் சிறுபான்மையின முஸ்லிம்.

1985ம் ஆண்டின் WORLD MUSLIM GAZETTEER புள்ளிவிபரங்களின்படி உலக முஸ்லிம் ஜனத்தொகை 1200 மில்லியனாகும். தற்போதைய உலக முஸ்லிம்களின் ஜனத்தொகை 130 கோடிகளுக்கும் (1300 மில்லியன்) அதிகமென சில புதிய ஆய்வுகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மத நல்லிணக்கம் - மனித நேயத்திற்கு

திரு சுப்ரமணிய அய்யர்கள்

மதுரை - பெரிய குளம்.

ஐந்தாம் வகுப்புப் படித்துக்கொண்டிருக்கிறான் அந்த முஸ்லிம் சிறுவன். ஏனோ ஊரில் படிக்கப் பிடிக்கவில்லை. சென்னையில் மாமா வீட்டில் அடைக்கலம். அப்புறம் அவருடைய நோட்டுப்புத்தகக் கடையில் வேலை.

ஒருநாள் திடுதிப்பென்று அவன் படித்த பள்ளிக்கூடத்தலைமை ஆசிரியர் வருகிறார்.

படிக்கவேண்டிய ஒரு அறிவுள்ள பிள்ளை இப்படி கடையில் வேலைக்குச் சேர்ந்து விட்டானே என்ற வருத்தத்தில் அவ்வளவு தூரம் வந்திருக்கிறார். அவர் ஒரு பிராமணர்.

''நீ கூர்மையான அறிவுள்ளவன். சுறுசுறுப்பான சுபாவம் உள்ளவன். உன் வாழ்க்கை இந்தக் கடைக்குள் முடங்கிவிடக்கூடாது'' என்று பொருமுகிறார்.

ஓர் ஆலோசனை நடக்கிறது. அதன்படி ஈ.எஸ்.எல்.சி. அரசாங்கப் பொதுத்தேர்வு எழுத வைப்பது என முடிவாகிறது. பையன் தனியாக ஆசிரியரிடம் பாடம் பயில சம்மதிக்கிறான். ஆசிரியா அவனோடு இன்னொரு தளித் சமூகப் பையனையும் சேர்த்துப் பயிற்றுவிக்கிறார். இருவரும் தேர்வு எழுதுகிறார்கள்.

ஆசிரியரின் முயற்சி வீண்போகவில்லை. சிறந்த மதிப்பெண் பெறுகின்றனர்.

அப்புறம், பெரியகுளத்திலேயே கல்வியைத் தொடர ஆரம்பித்து கல்லூரி மாணவனான். தந்தை பெரியார்-அறிஞர் அண்ணா அரசியல் அவனைக் கவர்ந்தது. அப்புறம் அந்த இளைஞன் ராஜபாட்டையில் நடக்கத்தொடங்கினான். மாணவர் இயக்கத்தில் இணைத்துக் கொண்டான். இந்த எதிர்ப்பில் சிறை போனான்.

பிற்காலத்தில், எம்.ஜி.ஆர். அரசின் அமைச்சரவையில் வக்பு - நீர்ப்பாசன அமைச்சராகப் பதவியேற்கிறார் அந்த கா.ராஜா முகமது என்ற மாணவன்!

அதேபோல, சுப்ரமணிய அய்யர் என அவரது ஆசானும் அடையாளம் காணப்படுகிறார்!

அய்யர் கற்றுக்கொடுத்த மற்றொரு மாணவனான, தாழ்த்தப்பட்ட சமூகத்துப் பழனிச்சாமியும் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படுகிறார்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையில் ஒரு மணியான தகவல் உண்டு:**

- ★ பள்ளிவாசல்
- ★ பௌத்த கோயில்
- ★ கிறிஸ்தவ ஆலயம்

மூன்று வழிபாட்டுத்தலங்களும் அருகருகே அமைந்துள்ள சில ஊர்களில் ஓர் ஊர்: பம்மன.

அங்கே, பள்ளிவாசலுக்கு அருகில் பௌத்த விஹாரை. இரண்டையும் ஒரு வேலிக்கம்பி பிரித்துக்காட்டுகிறது. விஹாரைக்கு எதிர்ப்புறத்தில் கிறிஸ்தவ ஆலயம்.

இதை நீங்கள் அச்சில் பார்க்கையிலுங்கூட மதநல்லிணக்கம் அங்கே கொடி கட்டிப் பறக்கிறது. பறக்கட்டும் தொடர்ந்து!

கால் நூற்றாண்டுக்கு முந்தி தமிழகத்தில் எப்படிப்பட்ட மனிதநேயமும், மதநல்லிணக்கமும் பேணப்பட்டன என்பதற்கு வேறென்ன சாட்சியம் வேண்டும்? இப்பொழுது மட்டும் எங்கிருந்து தீயசக்திகள் தோன்றின?

இப்படி, அறிமுகமில்லா ஒரு சுப்ரமணிய அய்யர் மத நல்லிணக்கம் மனிதநேயம் காட்டினார் என்றால், அதே பெயரில் அனைவரும் அறிந்த 'பாட்டுக்கொரு புலவராகிய எட்டயபுரத்துக்காரர் எத்தனையோ அடிகள் உயரப்பாய்ந்து மனிதநேயம் காட்டினார்.

சுமார் 76 ஆண்டுகளுக்கு முன்னால் - (1920 - 21).

'சுதேசமித்திரன்' நாளிதழில் துணை ஆசிரியராக இருந்த காரணத்தால் சென்னையில் வசிப்பு.

ஒரு தடவை, மெரீனாவில் திரு வி.கல்யாணசுந்தர முதலியார் என்ற பெருமகனாரின் பேச்சு நிகழ்ச்சி (இவர், பெண்ணுரிமைக்காக பேச்சையும் மூச்சையும் செலவழித்தது இன்றையப் பெண்களுக்குத் தெரியுமா?) பாட்டுப்பாடி கூட்டத்தைச் சேர்ப்பது அன்றைய வழக்கம். பாட்டுக்காரரான பாரதியார் பல பாடல்களை (சினிமா கீதமல்ல)

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெண்களுக்கு ஸலாம்**

கூறலாமா?

கூறலாமே!

முஹம்மது (ஸல்-அம்) அவர்கள் ஒருமுறை பெண்கள் குழுமியிருந்த ஓர் இடத்தின் பக்கம் சென்ற பொழுது அவர்களுக்கு ஸலாம் கூறியுள்ளார்கள்.

இத்தகவல், ''ரியாமுஸ் ஸாலிஉறீன்'' கிதாபில்.

**வீணையை விரும்பிய ஔரங்கசீப்!**

ஆலம்கீர் ஔரங்க சீப்பைப் பிறர் எப்படிக் கருதினாலும் நாம் பொருட் படுத்தக் கூடாது.

அந்த மன்னன் மிகவாக விரும்பிய இசைக்கருவி வீணை என்பது உண்மை யிலும் உண்மை!

வீணை வாத்தியக் கலைஞர்களுக்கு இது சமர்ப்பணம்!

கடற்கரைக்காற்றில் கரைத்துக்கொண்டிருந்தபொழுது அன்று நிறைய நிறைய முஸ்லிம் சமூகப் பெருமக்கள் கூட்டம் கூட்டமாக வந்திருப்பதை உணர்ந்தார். அவர்கள் வி.க. பேச்சைக் கேட்க வந்தவர்களல்லா். ஏதோ ஒரு முஸ்லிம் திருநாள்.

'பாட்டுக்கொரு புலவர்' உடனே உணர்ச்சிமேலிட்டவராக உச்சக் குரலெடுத்து மாபெரும் சக்தியான 'அல்லாஹ்'வைப் புகழத்தொடங்கிவிட்டார்!

★ அல்லா, அல்லா, அல்லா'

★ பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடியண்டங்கள்
எல்லாத் திசையிலுமோ ரெல்லையில்லா வெளிவானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன்
சொல்லாலும் மனத்தாலுந் தொடரொணாத
பெருஞ்சோதி! (அல்லா அல்லா)

★ கல்லாதவராயினும் உண்மை சொல்லாதவராயினும்
பொல்லாதவராயினும் தவமில்லாதவராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாதவராயினும்
எல்லாரும் வந்தேத்துமளவில் யம பயங்கெடச்
செய்பவன் (அல்லா, அல்லா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலைச் செவியுற்ற முஸ்லிம்கள் மட்டுமல்ல, இந்து மக்களும் உணர்ச்சிவசப்பட்டுப் போனார்கள்.

அன்றைய தமிழகத்தில் எத்தகைய சகோதரத்துவமும், எப்படிப்பட்ட மனிதநேயம் - மதநல்லிணக்கமும் காணப்பட்டன என்பதற்கு இந்த இரு சுப்ரமணிய அய்யர்களே காலா காலத்திற்குப் போதும்!

அப்படியானால் இப்பொழுது மட்டும் எங்கிருந்து தீயசக்திகள் தோன்றின? எந்த (வட) புலத்திலிருந்து எவர் வந்தார்கள் இதைச் சின்னாபின்னமாக்க?

- அபிமானிகளே, அலைகடலுக்கு அப்பால் உள்ள 'பேனா முனையில்' (கவனிக்கவும், யுத்த முனை அல்ல!) இருக்கும் நான் இப்படி கேள்விகளைக் கேட்காமல் இந்த எழுத்துத்தகவல்களை நிறைவு செய்ய இயலவில்லை! இங்குள்ள படத்தில் முன்னைய தமிழக அமைச்சரும் அவரது ஆசானும்).



**ஒற்றுமை ஓங்க ஒரு முயற்சி**

*இப்படத்தை ஒரு தமிழ் வார இதழில் பார்த்த நினைவு வருகிறதா!*

*கலசமும் பிறையும், நட்சத்திரமும் மனித நேயம் காட்டுகின்றன. மனிதர் தான் புரிந்து கொள்ள வேண்டும். கடலூர் - கார மணிக்குப்பம் ஊர் பள்ளிவாசலில் இப்படி அமைக்கப்பட்டிருப்ப தாகத் தகவல்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொற்கோயிலுக்கு அடிக்கல் நாட்டியவர் நம்மவர்!

இந்தியாவிலேயே பணக்கார மாநிலம் பஞ்சாப். சீக்கியர்கள் வாழுமிடம். தலையில் டர்பனும் தாடியும் உடைய சீக்கியர்கள் உலகெங்கும் பரந்திருக்கிறார்கள். 'காலிஸ்தான்' எனத் தனிநாடு கேட்டுப் பல உயிர்கள் பலியாகிவிட்டன.

அவர்களுடைய புனித கோயில் 'பொற்கோயி' லாக அமிர்தசரஸ் என்ற நகரிலுள்ளது.

இந்தப் பொற்கோயிலைப் பற்றிய ஒரு சுவையான தகவல்!

அந்தப் பொற்கோயில் கட்டடப்பட முடிவான பொழுது அதற்கு அடிக்கல் நாட்டியவர் ஒரு முஸ்லிம் துறவியாகும். (ஃபக்கீர்).

இத்தகவலை தைரியமாக வெளியிட்டவர் மறைந்த திரு.பர்னாலா, ஒரு சீக்கியர்: ஒரு சமயம் தமிழ்நாட்டின் ஆளுநர்.

## குழந்தைகள் பெயரில் கவனம் வேண்டும்!

★ பாஸிக் - கெட்டவன்
★ மஜ்னூன் - பைத்தியக்காரன்
★ ஷபீஹா - மடப்பெண்
★ ஜுனூப் - மாதவிலக்குக்காரி
★ மிக்னஉஷா - தும்புத்தடி

இப்படியெல்லாம் நம்ம குழந்தைகளுக்கு பெயர் இருந்தால் எப்படி? இருக்கவே செய்கிறது: நூற்றுக்கணக்கில் ஒதுக்க வேண்டிய பெயர்கள் இருக்கின்றன. அழகையும், நாகரீகத்தையும் கவனிக்காமல் கருத்தைப் புரிந்து கலிமாச் சொல்லிச் சூட்டுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முஸ்லிம் பெண்களுக்காக
முதலாவது விளையாட்டுப் போட்டி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகின் முதலாவது இஸ்லாமிய பெண்களுக்கான மாபெரும் விளையாட்டுப் போட்டி 1993ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13லிருந்து 19ம் திகதி வரை தெஹ்ரான் நகரில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியை ஈரான் ஜனாதிபதி ஹாஷிமி ரப்சன்ஜானி அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

மிகவும் கோலாகலமாக நடைபெற்ற இப்போட்டியில் அஸர்பைஜான், துருக்மேனிஸ்தான், தாஜிகிஸ்தான், கிர்கிஸ்தான், பஹ்ரைன், பங்களாதேஷ், பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிரியா, ஈரான் இஸ்லாமியக் குடியரசு போன்ற நாடுகளைச் சேர்ந்த 407 வீராங்கனைகள் பங்குபற்றினர்.

போட்டியின் ஆரம்ப நிகழ்ச்சிகளின்போது எடுக்கப்பட்ட சில படங்களையே| கணடீர்கள

முஸ்லிம் பெண்களும் முறைப்படி, ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள இது பச்சைக் கொடியாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முந்திச் செல்வோர்

ஒவ்வொரு சமூகத்திலும் ஒருவர் சுவர்க்கத்திற்கு முந்திச் செல்வார்கள்.

* அறபுகளில் முதன்மை முஹம்மது (ஸல்) அவர்கள்.
* பாரசீகர்களில் முதல் வர் ஸல் மான் (ரலி) அவர்கள்.
* ரோமர்களில் முதல்வர் ஸுஹைப் (ரலி) அவர்கள்.
* அபி ஸீனியர்களில் முதல்வர் பிலால் (ரலி) அவர்கள்.

## ஒரு ரூபாய்க்கு 4 ஆடுகள்!

மாமன்னர் அக்பர் பிறந்த அமரக்கோட்டையில் ஒரு ரூபாய்க்கு 4 ஆடுகள் விற்பனையாகின! இந்தச் செய்தி ஹுமாயூன் எழுதிய 'ஹுமாயூன் நாமா'வில் உள்ளது.

## மாபெரும் உண்மை!

மனிதன் வளர வளர அவனுடன் இரண்டு ஆசைகள் வளர்கின்றன. ஒன்று, செல்வத்தின் மீது ஆசை. மற்றொன்று, நீண்ட ஆயுளின் மீது ஆசை!

- முஹம்மது நபி (ஸல்-அம்)

## கிப்லாக் கடிகாரம்

உலகில் நீங்கள் எந்த நாட்டுக்குப் பயணமானாலும் திசையையும் தொழும் (கிப்லா), தொழுகை நேரத்தையும் அங்கேயே கஷ்டமின்றி தெரிந்து கொள்ளலாம்.

புகழ்பெற்ற கெஸியோ நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு கடிகாரம் இதற்கு உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள், பல்கு நாட்டின் அரசராக இருந்தபோது, ஒரு முறை, தன் பணியாளர்களோடு, வனம் ஒன்றில் கூடாரம் அடித்துத் தங்கியிருந்தார்கள். அழகாக, அலங்கரிக்கப் பட்டிருந்த அக்கூடாரம் தங்க முளைகளால் பூமியில் பதிக்கப் பட்டிருந்தது.

அவ்வழியே சென்ற ஒரு துறவி கூடாரத்தின் அலங்காரத்தைக் கண்டு, ஆத்திரமடைந்து, மன்னரின் படாடோபத்தைப் பழித்துக் கடுமையாகப் பேசிவிட்டார். தூய உள்ளம் கொண்ட இப்ராஹீம் இப்னு அத்ஹம் அவர்கள், துறவியின் சுடுசொல்லுக்கு பதில் ஏதும் சொல்லவில்லை.

மறுநாள் பொழுது புலர்ந்ததும், கூடாரத்தை அப்படியே விட்டுவிட்டுப் பிரயாணத்தைத் தொடர்ந்தார் மன்னர். அந்த ஏழைத் துறவியும் மன்னரின் பரிவாரங்களுடனேயே புறப்பட்டுவிட்டார்.

பாதிவழியில் கண்கலங்கி, பரிதவித்து நின்றுவிட்டார் துறவி. ''ஏன், என்ன நடந்தது?'' என்று பதறினார் மன்னர். ''என் தகரக் குவளையை அந்தக் கூடாரத்திலேயே வைத்துவிட்டு வந்துவிட்டேன்'' என்று அங்கலாய்த்தார் அத் துறவி.

அதைக் கேட்டு, புன்முறுவல் பூத்தார் மன்னர். ''தோழரே! நீர் கண்டு ஆத்திரப்பட்ட அந்தத் தங்க முளைகளையும், கூடாரத்தோடு அங்கேயே விட்டு வந்த நான் கவலைப்படவில்லை. அதன் நினைவே என் நெஞ்சில் இல்லை. ஆனால் ஒரு தகரக் குவளைக்காக நீர் பரி தவிக்கிறீர். அந்தத் தங்க முளைகளை மண்ணில் பதித்தேனே தவிர, என் மனத்தில் அல்ல'' என்றார் அந்த அரச ஞானி, நிதானமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தர் முன்னறிவிப்பு!

* உருவமற்ற பிரம்மத்தை உருவமின்றியே வழிபடும் முறையாகிய உண்மைச் சமயத்தைத் தெளிவாகவும் ஆற்றல் மிக்கதாகவும் செய்யும் காலம் விரைவில் வரும் என்று நான் நம்புகிறேன் - பக்கம் 24

* ஆணோ, பெண்ணோ, யாரையும் வேதாந்திகள் தாங்கள் வழிபடும் பொருளாகக் கொண்டதே இல்லை.. ஒரு பறவையோ ஒரு புழுவோ எப்படி வழிபடும் பொருளாக முடியாதோ அப்படியேதான் மனிதனும்.. ஒரு மனிதன் தலைவனாவது, அவனைப் பிறர் வழிபடுவது, அவன் நம்மைக் காப்பாற்றுவது போன்றவை வேதாந்தம் ஏற்றுக் கொள்ளாத கொள்கைகள், வேதாந்தத்தில் இவற்றுக்கு இடமே இல்லை. பக்கம் 215.

* நம் ஒவ்வொருவரிலும் இறைவன் இருக்கிறான் என்ற அழிவற்ற தத்துவமே வேதாந்தத்தின் கொள்கை. கடவுள் மேகத்தின்மீது உட்கார்ந்திருப்பதா! இது மிகப்பெரும் கடவுள் நிந்தையல்லவா! வெறும் உலகாயதம் அல்லவா! இதுவா மதம்! ஆப்பிரிக்க காட்டுமிராண்டிகளின் மதமான கூத்தும் பாட்டும் மருந்தும் மாயமும் போன்ற பொருளற்ற மதத்தைவிட இது எந்த விதத்திலும் உயர்ந்ததல்ல- பக்கம் 217.

- "வேதாந்தச் சொற்பொழிவுகள்" என்ற சுவாமி விவேகானந்தரது நூலில் காணப்படுபவை. சென்னை, ஸ்ரீ ராமகிருஷ்ண மட வெளியீடு 24, 215, 217ம் பக்கங்களைப் புரட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துருக்கித் தொப்பிப் போராளி

இந்த இருபதாம் நூற்றாண்டு இறுதிப் பொழுதுகளில் பல ரூபங்களில் பல போராளிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆரம்பத்தில் (1905) துருக்கித் தொப்பி அணிய முடியாதிருந்ததற்காக போராடிய மாவீரர்களும் உண்டு. அதுவும் எங்கே? நீதிமன்றத்திற் குள்ளேயே! இடம்! இலங்கை!

சரித்திரத்தைச் சரியாகத் தந்துவிடுகிறேன்.

அப்பொழுது ஆங்கிலேயர் ஆண்டகாலம்.

எங்கும் எதிலும் வெள்ளையர். பிரதம நீதிபதியாக ஸேர் சார்ல்ஸ் லேயார்ட். நீதிமன்றத்தில் தொழில் புரிந்துகொண்டிருந்தவர் ஒரு எம்.சி.அப்துல்காதர். அவரே முதலாவது முஸ்லிம் சட்டத்தரணியுங் கூட (அட்வகேட்)!

1905 - மே 2ந் தேதி ஸேர் லேயார்டுடன் நேருக்குநேர் மோதல் மர்ஹூம் அப்துல்காதருக்கு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தலையில் இருக்கிற துருக்கித் தொப்பியைக் கழற்றிவிட்டு வழக்காடுக'' என கட்டளை பிறப்பிக்கப்பட்டது தான் காரணம்.

''நீர்அதை அணிந்து இந்த நீதிமன்றத்தை அவமதிக்கிறீர்'' என்று 'வெள்ளைத்தோல்' வெகுள -

''அப்படியல்ல. தொப்பி முஸ்லிம்களின் கலாசாரப் பண்பாட்டு உடையின் ஒருபகுதி. அதை அணிந்துதான் உங்கள் நீதிமன்றத்தைக் கௌரவிக்கிறேன்'' என இவர் முழங்க-

''முடியாது. உம்மை உள்ளே விட மாட்டேன்'' என்று அந்த பிரதம நீதிபதி கட்டளையிட -

கொழும்பு அல்லோலப்பட்டது.

'துருக்கித்தொப்பிப் போராளிகள்' உருவானார்கள்.

ஒரு போருக்குக் காரியம் நடப்பதுபோல நடவடிக்கைகள் அமைந்தன.

ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் என்கிற 38வயது கொழும்புக் கல்விச் சேவைச்சங்கச் செயலர், பத்திரிக்கையாளர், எழுத்தாளர், 'தளபதி' யாகக் காரியமாற்றினார். அவர், 1905 - டிசம்பர் 31ல் கூட்டிய ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் கொழும்பை கிடுகிடுக்கச் செய்தது. 1906 - மார்ச் 16 வரையில் நடந்த 'உரிமை முழக்கம்' இங்கிலாந்து மன்னனைத் தடுமாறச் செய்தது. சேர் லேயார்ட் மிகவும் அவமானப்பட்டுப்போனார். தலைகுனிந்தார். பணிந்தார். சட்டத்தரணி அப்துல்காதரோ நிமிர்ந்த தலையினராக அதே துருக்கித்தொப்பியுடன் நீதிமன்றத்திற்குள் நுழைந்தார்.

அவர் பிறந்த **யாழ்ப்பாணத்து மண்ணுக்குச்** சிறப்புச் செய்தார். என்றைக்கும் இலங்கை முஸ்லிம் சமுதாயம் பெருமைப்படக்கூடிய நிகழ்வாயிற்று அந்தத் 'தொப்பிப் போராட்டம்'!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பதும் நடக்கச் செய்வதும்




திருச்சி பன்னூலாசிரியர் குலாம் ரசூல் ஹாஜியார் 52களில் நடத்திய 'ஷாஜஹான்' இதழ்களில் இப்படியான சிந்தனைச் சித்திரங்கள் கருத்தைக் கவர்ந்தன. ஓவியர்கள் பஞ்சம் இருந்த ஒரு காலத்திலேயே இப்படிப் படங்கள் வந்தன. ஆனால் இன்று எந்தக் கார்ட்டூன்களை வரையச் சொன்னாலும் வரையக்கூடியவர்கள் இருக்கிறார்கள். முஸ்லிம் இதழ்கள்தாம் பயன்படுத்தாமலிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நபி (ஸல்) அவர்களது எச்சரிக்கை!

முஹாஜிரீன்களே, ஐந்து விடயங்களைப்பற்றி உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் அவற்றால் சோதிக்கப்பட்டு அவை உங்கள் மத்தியில் ஏற்பட்டுவிடக் கூடாது என்று அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

எந்தவொரு சமூகத்திலேனும் ஸினா - விபச்சாரம் சாதாரணமாக நடக்கும் ஒன்றாக ஆகிவிட்டால் அவர்களின் மூதாதையர்களின் காலத்தில் காணப்படாத நோய்கள் அவர்களிடம் பரவும்.

எந்தவொரு சமூகமும் அளவை நிறுவையில் மோசடி செய்தால் அவர்கள் பஞ்சம், வாழ்க்கைச் செலவுகளை சமாளிக்க முடியாமை, அரசாங்கத்தின் கொடுமை என்பவற்றுக்கு ஆளாக்கப்படுவார்கள்.

எந்த சமூகத்தவரேனும் தங்கள் சொத்துக்குரிய ஸகாத்தை கொடுக்காவிட்டால் அவர்களுக்கு மழை இரட்சிக்கப்படமாட்டாது. ஆடு,மாடு போன்ற மிருகங்கள் இல்லா விட்டால் அவர்கள் வாழுமிடங்களில் மழையே பெய்யாது.

எந்த ஒரு சமூகத்தவரேனும் அல்லாஹ்வினதும் அவனது ரஸூலினதும் கட்டுப்பாடுகளை மீறி நடந்தால் அவர்கள் மீது அந்நிய சமூகங்களை சேர்ந்த எதிரிகள் தூண்டிவிடப்படுவார்கள். அந்த எதிரிகள் இவர்களின் சொத்துக்களில் பலதை அபகரித்துக் கொள்வார்கள்.

எந்தவொரு சமூகத்தையும் சேர்ந்த தலைவர்களேனும் அல்லாஹ்வின் கிதாபின் - அல்குர்ஆனின் அடிப்படையில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கத் தவறினால் அந்த சமூகத்தவர்களுக்கிடையில் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு சீரழிவார்கள்.

*அறிவிப்பவர்: இப்னு உமர் (ரழி)*

*ஆதாரம் : இப்னுமாஜா, பைஹகி, அல்-பஸ்ஸார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அனைத்துலக தெனாலிராமன்!

ஒரு தெனாலிராமன் இந்திய நாட்டில் இருப்பது போல அனைத்துலகுக்கும் சொந்தமாக முல்லா நஸ்ருத்தீன்.

பலநாட்டவரும் தங்கள் நாட்டவர் எனக் கூறிக் கொள்கின்றனர்.

என்ன பிரயோஜனம்? துருக்கிக்குத்தான் அவர் சொந்தம்.

'ஹோஜாக் கதைகள்' என அவருடைய நகைச்சுவை கலந்த குட்டிக்கதைகள் பல நூறு ஆண்டுகளாகப் புழக்கத்தில் உள்ளன.

'ஹோஜா' என்பதும், 'முல்லா' என்பதும் கிட்டத்தட்ட ஒரே அர்த்தத்தையே வழங்கும்.

அன்றைய துருக்கியில், அல்-குர்ஆனையும், ஷரீயத் சட்டங்களையும் அறிந்தோரை 'ஹோஜா' என்ற பட்டத்தால் அழைத்தனர். 'கவுக்' என்ற ஒரு தலைப்பாகையையும் அப்பட்டத்திற்குரிய கௌரவச் சின்னமாக அளித்தனர். இவர்கள் பெரும்பாலும் கதீப்களாகவும், தகராறுகளைத் தீர்த்துவைக்கும் காஜிகளாகவும் கடமையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருக்கியிடமிருந்து எதையுமே ஏற்காத கிரேக்கம் இவருடைய கதைகளை மட்டும் ஏற்றுக்கொண்டுள்ளது.

ரஷ்யாவோ ஒரு வீரப்பிரதாபனாகப் போற்றுகிறது. அங்கே முதலாளி வர்க்கத்தினரை விமர்சிக்க இவர் கதைகள் உதவுகின்றன ஒரு திரைப்படம் கூட தயாரித்திருக்கிறார்கள்.

அவரது குட்டிக் கதைகளில் ஆழ்ந்த ஆன்மீகமும், அறிவுசார்ந்த நிகழ்வுகளும் உள்ளதாக அனைவரதும் கணிப்பு.

இங்கும் சில தரப்பட்டுள்ளன. இவற்றுக்கு வயது அறுநூறுக்கும் மேலே, மேலே!

## பழைய பிறை

''இளம் பிறையின் போது பழைய பிறையை என்ன செய்வார்கள்?'' என்று சிலர் ஒரு சமயம் கேலியாக ஹோஜா நஸ்ருத்தீனிடம் கேட்க-

''பழைய பிறையை வெட்டி நட்சத்திரமாக்கிக் கொள்வார்கள்'' என்று வெகு சாதாரணமாக அவரது பதில் கிடைத்தது!

## இறைச்சி யாருக்குச் சொந்தம்

ஹோஜா கோழி இறைச்சிப் பொரியலைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, ஒருவன் அவ்வழியாக வந்தான். தனக்கும் ஓர் இறைச்சித் துண்டு தரும்படி கேட்டான்.

''இது எனக்குச் சொந்தமானதல்ல. என் மனைவிக்குச் சொந்தமானது. எனவே, உனக்குத் தர இயலாது இருக்கின்றது'' என்றார் ஹோஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் சாப்பிடுகின்றீர்களே?"

"என்னால் என்ன செய்ய முடியும்? இவற்றைச் சாப்பிடும்படி என் மனைவியல்லவா கட்டளை இட்டிருக்கிறாள்" என்று ஹோஜா மிகவும் வருத்தத்துடன் கூறினார்.

## பிறப்பும் இறப்பும்

ஒரு சமயம் டிமோர் லேங் என்பவன், "மக்கள் பிறப்பதும் இறப்பதும் எப்பொழுது முற்றுப் பெறும்" என்று ஹோஜாவிடம் கேட்டான்.

"என்று சுவர்க்கமும், நரகமும் நிறையுமோ அன்று நின்றுவிடும்" என்றார் ஹோஜா.

## திருடனிலும் குற்றம் உண்டு

ஒரு சமயம் ஹோஜாவின் கழுதை திருட்டுப் போயிற்று. மறுநாள் காலையில் இதைப் பற்றித் தமது நண்பர்களிடம் தெரிவித்தார். அவர்கள் எல்லோரும் அவரைக் குறை கூறத் தொடங்கினார்கள். 'நீர் ஏன் கழுதையின் இருப்பிடத்திற்குப் பூட்டுப் போட்டு வைக்கவில்லை' என்றான் ஒருவன். 'திருடன் வந்த பொழுது நீர் ஏன் எழுந்திருக்கவில்லை?' என்றான் மற்றவன். இவை அனைத்தையும் கேட்டுச் சலிப்புற்ற ஹோஜா, 'அந்தத் திருடனிலும் சிறிதளவாவது குற்றம் உண்டு என்பதை யாராவது ஒப்புக் கொள்ளுகின்றீர்களா?" என்று பரிதாபமாகக் கேட்டார்.

## முன் யோசனை!

முல்லா திருமண வீட்டிற்குள் நுழைவதற்கு முன் தன் கையில் கொண்டு வந்திருந்த பையில் தான் அணிந்திருந்த செருப்புகளைப் போட்டார். பிறகு கையில் பையைப் பிடித்தபடி விருந்தில் அமர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர் ஒருவர், "முல்லா! பையில் என்ன வைத்திருக் கின்றீர்கள்? புத்தகமா? என்ன தலைப்பு? எங்கே வாங்கினீர்கள்?" என்று கேட்டார்.

"ஆமாம். புத்தகம் தான். முன்யோசனை என்ற பெயர். செருப்புக் கடையில் வாங்கினேன்" என்று பதில் தந்தார் முல்லா.

## எப்பொழுது தண்டனை தருவது?

வேலைக்காரச் சிறுவனிடம், "இந்தப் பானையை எடுத்துக்கொண்டு ஆற்றுக்குப்போய் தண்ணீர் கொண்டு வா. தவறிக் கீழே போட்டு உடைத்து விட்டாயானால் கடுந் தண்டனை கிடைக்கும்" என்று சொல்லி அவன் தலையில் ஓங்கிக் குட்டினார் முல்லா.

அவனும் அழுதுகொண்டே பானையை எடுத்துக் கொண்டு சென்றான்.

இதைப் பார்த்த நண்பர் ஒருவர், "பானையை உடைத்து விட்டு வந்தால்தானே நீ அவனை அடிக்கணும். எதற்காக வீணாக முன்னமேயே ஏன் அடித்தீர்?" என்று கேட்டார்.

அதற்கு முல்லா, "பானை உடைந்த பிறகு அவனைத் தண்டித்து என்ன பயன். முன்னரே தண்டித்தால் பயபக்தியுடன் பானையை உடைக்காமல் கொண்டு வருவான்" என்று பதில் சொன்னார்.

## முல்லா மறைந்தது ஏன்?

தன் வீட்டிற்குள் திருடன் நுழைவதைப் பார்த்த முல்லா அங்கிருந்த பீரோவின் பின்னால் பதுங்கிக் கொண்டார். வீடுமுழுவதும் சல்லடை போட்டுத் தேடியும் திருடனுக்கு ஒரு பொருளும் கிடைக்கவில்லை.

கடைசியில் ஒளிந்து கொண்டிருந்த முல்லாவைக் கண்டுவிட்ட திருடன் "பீரோவுக்குப் பின்னால் என்ன செய்கிறாய்?" என்று கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு முல்லா, ''நீ என் வீட்டிலிருந்து திருடிக் கொண்டு போவதற்கு என்னிடம் ஒரு பொருளும் இல்லை. அதற்காக உன்னைப் பார்க்க வெட்கப்பட்டு இங்கே மறைந்து கொண்டேன்'' என்றார்.

## சட்டை விழுந்த சத்தம்

முல்லாவின் மனைவி அடுக்களையில் வேலையாக இருந்தாள்.

மாடிப்படியில் ஏதோ விழுந்து உருண்ட சத்தம் கேட்டது.

உள்ளிருந்த அவள் ''ஏங்க! என்ன கீழே விழுந்தது?'' என்று குரல் கொடுத்தாள்.

''வேறொன்றுமில்லை. என் சட்டைதான் கீழே விழுந்தது'' என்றார் முல்லா.

''என்ன! சட்டை விழுந்ததா அவ்வளவு சத்தம் கேட்டது?'' என்று ஐயத்துடன் வினவினாள் மனைவி.

''சட்டைக்குள் நான் இருந்தேன். அவ்வளவுதான்'' என்று பதில் தந்தார் முல்லா.



## கண்ணழகியர் எப்படி இருப்பர்?

'ஹூருல் ஈன்கள்' - இப்படி அடிக்கடி நம் பெண்மணிகள் பேசிக் கொள்வர். (ஆண்கள் பேச மாட்டார்களா என்பீர்கள். அவர்களும் தான்!)

அவர்களை அடையாளம் காண்பது எப்படி?

- கருவிழி அழகாய்க்கறுத்திருக்கும்!
- நல்ல, பெரிய கண்கள்!
- வெண்ணிற மேனி!
- வெண்முத்துப் பற்கள்!
- அன்னார் இசையும் பொழிவர்.
- அவர்களுக்கு மஹர்: சுப்பராவில் விழும் சோற்றுப் பருக்கைகள்.,
- அன்பு காட்டுவது அவர்களது தனிப்பெரும் சொத்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எங்க குடும்பம் பெரிசு

இருபதாம் நூற்றாண்டு இஸ்லாமிய சமுதாயம் எந்த வகையிலும் மறக்க முடியாத ஒரு பெயர் சதாம் உசேன். இது அச்சுக்குப் போகும் நேரத்திலும் ஈராக்கின் அதிபதி. அவர் நல்லவரா, கெட்டவரா என்பதற்குரிய ஆய்வை எடுத்துக் கொள்ளாமல் அவர் ஒரு மறக்க முடியாத மனிதர் என்பதை இங்கே அடித்துச் சொல்லும் கடமை நமக்குண்டு. அவரைப்பற்றி காலம் சொல்லட்டும். இன்ஷா அல்லாஹ்.

இங்கே 1991ம் ஆண்டில் கிளிக்கான அவரது குடும்பப்படம். இதில் ஸோபாவில் அமர்ந்திருக்கும் சதாம் தம்பதிகளை விட அதிமுக்கியமான புள்ளி பின் வரிசையில் நடுநாயகனாக நிற்கும் மூத்த மகன் உதய் தான்! 1995 ஆகஸ்டில் அவன் உள் நாட்டில் பிரச்சினைக்குரியவன். உலக நாடுகளில் பரபரப்பை உண்டு பண்ணியவன். அவனது வலது புறத்தில் இளைய சகோதரி ராணாவும், இடது புறத்தில் மூத்த சகோதரி ரக்தாவும் (மூத்த மகளான இவர் கைகளில் சதாமின் முதல் பேரன் அலி) நிற்கின்றனர். வரிசையில் இடமிருந்து வலமாக நிற்கும் இரு ஆடவர்களும் சதாமின் மருமக்கள். இன்று அவர்களையும் அருமை மகள்மாரையும் இழந்த நிலை. ஜோர்தான் மன்னர் ஹு~சைன் தான் (அமெரிக்காவிடம் இருந்து கேட்டு) சரியான விவரம் செல்ல முடியும். ஹிஜ்ரி 1416 – 17 ஆகிய 1996ல் இவர்களால் முஸ்லிம் உலகுக்கு என்ன செய்தி கிடைக்குமோ?

எல்லாமே நல்ல செய்தியாக அமைவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENGLISH - க்கு

## வெட்கம், கூச்சம் இல்லை !

ஆங்கிலம் இப்படி உலகளாவிய மொழியாக வளர்ந்திருப்பதற்குக் காரணம் - அது, வெட்கம், கூச்சம் இல்லாமல் தன் மொழி வளத்தை அதிகரிக்கும். கடன் வாங்கும். காப்பி அடிக்கும். இதன்கீழ் தரப்பட்டிருப்பவை அறபியிலிருந்து. இப்படி பல நூறு:

ஜபலுத்தாரிக் - தாரிக்கின் மலை - GIBRALTER

தமருல் ஹிந்த் - இந்தியாவின் பேரீச்சை(புளி) - TAMARIND

அமீருல் பஹ்ர் - கடலின் அதிபதி - ADMIRAL

அல்குவாரிஸ்மியின் கணிதம் - ALGORISM

தரஃப் அல் கார் - குகையின் முனை - TRAFFALGAR

| | | | | |
|---|---|---|---|---|
| அல்ஜிப்ரு | - | அல்ஜீப்ரா | - | ALGEBRA |
| ஷகர் | - | சீனி (சக்கரை) | - | SUGAR |
| கீராத் | - | காரட் (நிறை) | - | CARA |
| தஃப்ரீக் | - | போக்குவரத்து | - | TRAFFIC |
| அர்ள் | - | பூமி | - | EARTH |
| ஸஃப்ரான் | - | குங்குமப் பூ | - | SAFFRON |
| குத்ன் | - | பருத்தி | - | COTTON |
| மிஸ்க் | - | கஸ்தூரி | - | MUSK |
| ரிஸ்ம் | - | காகிதக் கட்டு | - | REAM |
| மக்ஸன் | - | சஞ்சிகை | - | MAGAZINE |
| மன்ஸனின் | - | இயந்திரி | - | MECHANIC |
| அத்லஸ் | - | திசைகாட்டி | - | ATLAS |
| தீனார் | - | டாலர் | - | DOLLAR |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| காம்ஃபூர் | - | கற்பூரம் | - | CAMPHOR |
| லைமூன் | - | எலுமிச்சை | - | LEMON |
| தஃரீஃப் | - | கட்டணம் (வரி) | - | TARIFF |
| ஹபல் | - | கேபிள் | - | CABLE |
| தூஃபான் | - | புயல் | - | TYPHOON |
| முஅஸ்ஸம் | - | பருவக்காற்று | - | MONSOON |
| அல்கலி | - | சுண்ணம் | - | ALKALI |
| அல் இன்பிக் | - | பாத்திரக்குழாய்கள் | - | ALEMBIC |

## கருவளர்ச்சிக்குக் கருந்திரைகள் மூன்று!

முதலாவது திரைக்கு 'எக்டோடெர்ம்' (ECTODERM) என்ற பெயர்.

- இது, தோல், ரோமம், நகம், மூச்சு, நரம்புகள் என்பன உருவாக உதவுகிறது.

இரண்டாவது திரைக்கு 'மெசோடெர்ம்' (Mesoderm) எனப்பெயர்.

- இது, எலும்பு, இருதயம், சிறுநீரகம், சதை, இரத்தக் குழாய்கள் என்பன உருவாக உதவுகின்றது.

- மூன்றாவது 'என்டோடெர்ம்' (Entoderm) எனப்பெயர்.

- இது, மூட்டுக்களுக்குத் தேவையான திரவம், வயிறு, நுரையீரல், சிறுநீர்ப்பை மற்றும் சில உட்புற உறுப்புகள் உருவாக உதவுகிறது.

அறிவியல் உலகம் இதனை ஆய்ந்தறிந்தது **இன்றுதான்!**

இறைமறையான அல்-குர்ஆனோ அன்றே அருளிவிட்டது.

இப்படி:

*"உங்கள் அன்னையரின் வயிற்றில் ஒன்றன்பின் ஒன்றான மூன்று இருள் (திரை) களுக்குள் வைத்து உங்களைப் படைக்கிறான்..."–(39:6 ன் ஒருபகுதி).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது மூத்த சஞ்சிகை

# முஸ்லிம் முரசு

(மாத வெளியீடு)

| மலர் 1 | சென்னை, ஆகஸ்டு 1948 | இதழ் 2 |
|---|---|---|

ஆம். 'முஸ்லிம் முரசு' தான் மூத்தது. அதாவது, இப்பொழுது வந்து கொண்டிருக்கும் முஸ்லிம் மாத இதழ்களில் மூப்பானது.

அது 1948 ஜூலையில் வெளியாயிற்று.

'அன்பும் இன்பமும் அறிவும் ஆற்றலும் பண்பும் புகழும் இன்ப வாழ்வும் இனிது விளங்க முரசு முழங்கவே''

- என ஆடிப்பாடும் பாடலும், ஸ்ரீவைகுண்டம் மண்ணினைச் சார்ந்தவரும், இலங்கையின் மிகப் பிரபல எழுத்தாளராகத் திகழ்ந்தவருமான வ.மி.ஷம்சுத்தீன் அவர்களை கௌரவ ஆசிரியாராகக் கொண்ட தகவலும் 3ம் பக்கத்துத் தலையங்கத்தின் உயரே காணப்படுகிறது.

இங்கே பார்ப்பது இரண்டாம் இதழின் முதல் பக்கத்தை. பேரறிஞர் அண்ணாவும், திருச்சிப் பன்னூலாசிரியரும் (ஹாஜி குலாம் ரசூல்) தங்கள் கைவண்ணங்களைக் காட்டியிருப்பதைக் காண முடிகிறது.

ஆரம்பகாலத்தில் அதன் ஆசிரியராக எஸ்.ஏ.ஷுக்கூர். பின்பு 'மில்லத்' செய்யது முஹம்மது ஹசன். '95 வரையில் மர்ஹூம் ஆளூர் ஜலால். இப்பொழுது கௌரவ ஆசிரியராக கவிஞர் சடையன் அமானுல்லா!

ஐம்பதை அடைய இன்னும் ஈராண்டுகளே உள்ள 'முஸ்லிம் முரசு' மிக்க அவதானத்துடன் நடைபோட்டால் சாதனை புரிந்துவிட முடியும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஹாஜ்ஜா– ஹாஜியானி

அல்–ஹாஜ், ஹாஜி என்ற மிக இலேசாக ஆண்களை அழைக்கும் நாம், பெண்களை 'ஹாஜ்ஜா' என்று கூப்பிட்டிருக்கிறோமா?

பெரும்பாலும் 'உறாஜி யானி' 'ஹாஜியா' என்று தான் சொல்கிறோம். ஆனால், இலங்கையில் 'ஹாஜ்ஜா', என்றும் சிலர் அழைக்கின்றனர்.

## முத்தான மூன்றுகள்

❋ மூன்று விடயங்களை எப்போதும் அற்பமாக மதிக்கக் கூடாது: கடன் - கடமை - நோய்.

❋ மூன்று காரியங்கள் நன்மைகளைப் பெருக்கும் இரக்கம் – கொடை – பிரார்த்தனை.

❋ மூன்று காரியங்கள் யாரையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்காது: பிறப்பு – இறப்பு – நேரம்

❋ மூன்று பொருட்கள் சகோதரர்களிடையே பகைமையை வளர்க்கும்: பெண் - பொன் – மண்.

## அசுத்தத் தண்ணீர்

நாய், பன்றி, வேட்டையாடுபடியான நாற்கால் மிருகங்கள் வாய்பட்ட எச்சில் தண்ணீர் அசுத்தமாகும். இது போலவே பூனை, எலி அல்லது மற்றொரு பிராணியைத் தின்றவுடன் குடித்து மிஞ்சிய எச்சிற் தண்ணீரும் அசுத்தமாகும். ஒரு மனிதன் மது அருந்தியவுடனே பருகி மீதம் வைத்த தண்ணீரும் அசுத்தமே.

## மனிதனின் மதிப்பு இப்படி:

மனிதனின் மதிப்பு அவனிடம் இருக்கும் தங்கமும், வெள்ளியுமல்ல. அவன் நேர்மையும், சக்தியுமே அவன் மதிப்பாகும். நேர்மையால் எத்தனையோ அடிமைகள் புகழ் பெறறனர். நேர்மையில்லா எத்தனையோ அரசர்கள் தம் அடிமைகளைவிட இழிந்தவர்களாயினர்

– ஜுனிபி (ரஹ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சில சில தீவிரங்கள் பற்பல நேரங்களில் படுபாதகங்களைச் செய்கின்றன.

என்னைப்பொறுத்தவரையில் இந்த மதத்தீவிரம் இருக்கிறதே அதைப்போல ஒரு கொடிய 'ஏ.கே.47' வேறொன்றுமேயில்லை என்று அடித்துச்சொல்வேன்.

ஓர் அதிசயமான செய்தியை இதழொன்றில் பார்த்தேன். அதை அப்படியே தருகிறேன்.

வட இந்தியாவில் காசி இருக்கிறது. அது இருக்கும் இடத்தை பெனாரஸ் என்பார்கள். வாரணாசி என்றும் சொல்லுவார்கள். அங்குள்ள விசுவநாதர் 'சைவர்' என்பதால் தமிழ்நாட்டு சைவ மக்களுக்கும் முக்கியமான திருத்தலம்.

இதுபோல மதுரா என்றொரு இடமும் வட இந்தியாவில் உள்ளது. அங்கே கிருஷ்ணா ஜன்மஸ்தான் ஆலயம் உண்டு.

இந்த இரண்டோடும் பள்ளிவாசல்கள் முக்கிய இடம்பெறுகின்றன.

அதாவது, மொகலாய மன்னர்கள் கட்டிய மாபெரும் மஸ்ஜித்கள் அருகருகே உள்ளன.

காசி நகர மக்களில் 20 சதவிகிதம் உள்ள முஸ்லிம்கள் வெள்ளிக்கிழமைகளில் ஜும் ஆவில் கலந்துகொள்ள, திங்கள்கிழமைகளில் இந்துக்கள் பிரார்த்தனைகளில் பங்கு பெற்ற அந்த இருநாட்களிலும் காசி மாநகர் ஒரு புதுக்கோலம் பெற்றுவிடுகிறது.

மதுராவில் அமைந்துள்ள இரு வணக்கஸ்தலங்களிலும் ஒரு பொதுவான அதிசயம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டுக்கும் ஒரேயொரு வாசல் தான்! அப்படி அந்தக் காலத்திலேயே அமைப்பு. அந்த ஒரே வாசலை உபயோகித்துத்தான் ஓர் இந்துவும் கோயிலுக்குச் செல்லவேண்டும். ஒரு முஸ்லிமும் பள்ளிக்குப்போகவேண்டும்.

இருந்தாலும் மதவெறி இல்லாத இந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்களைப்போல நேசம் உள்ள நெஞ்சத்துடன் இறைவனை வழிபட வாசலுக்குள் நுழைந்து போகிறார்கள்.

அரசியல்வாதிகளும் அதிதீவிர மதவாதிகளுந்தான் அயோத்தி பிரச்சினைக்குப் பிறகு மதுரா, வாரணாசி (காசி) யைக் கையிலெடுப்போம் என்கிறார்கள்.

*இறைவனே காப்பு!.*

**ஆசான்களே ஒரு வார்த்தை**

மக்களுக்கு கல்வி புகட்டும் பணியை ஏற்றோரின்பொறுப்பு மகத்தானது. கடமைகளும் அதிகம். ஆகவே, தங்கள் நடத்தையிலும், செயல்களிலும் குற்றம் குறைகள் இல்லாதபடி அவர்கள் பார்த்துக் கொள்வார்களாக.

-இமாம் கஸ்ஸாலி (ரஉற்)

**இதைப் பரீட்சியுங்கள்**

ஒரு மனிதனது அறிவாற்றல் அதிகரிக்க, அதிகரிக்க அவன் பேசும் வார்த்தைகளும் குறைந்து கொண்டே போகுமாம்!

நீங்கள் எப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**துபையின் 'சகோதரி'**

ஷார்ஜா - கேள்விப்பட்டிருப்பீர்கள். துபையிலிருந்து காரில் 'பறந்தால்' பதினைந்தே நிமிடங்களில் சென்றடைந்து விடலாம். இந்த நகரை துபையின் 'சகோதரி' (Dubai's Sister city) என்பார்கள்!
இங்கே, 'ஷார்ஜா சௌக்' கண்ணையும் கருத்தையும் கவர்ந்திழுக்கும் இடம்., இஸ்லாமியக் கட்டடக் கலையின் அற்புதத்தை உலகுக்கு உணர்த்துவது. [காதோடு ஒரு செய்தி: இங்கே 220 பள்ளிவாசல்கள் இருக்கிறதாமே!]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஒரு குட்டித் துபை' தமிழகத்தில்

வளைகுடாவின் நடுநாயகமாக, நாகரிகமாகத் துலங்கிக் கொண்டிருக்கிற துபை(துபா)யை முதன் முதலாக கண்டவர்கள் நம் தமிழகத்துக்காரர்கள் தான்! லெப்பைக்குடிகாட்டின் இளைஞர்கள் தான்!

இப்படியொரு தகவலை வேடிக்கைக்கு 'முஸ்லிம் குரல்' ஆசிரியர் ஹாஜி கனி சிஷ்தி என்னிடம் தந்தாலும் உண்மையும் இல்லாமலில்லை.

இரண்டாயிரம் பேருக்கு மேல் தற்சமயம் அங்கே! சென்றால் சந்திப்பது அவர்களாகவே இருப்பர். பலமிக்க ஒரு சமுதாய சங்கம் (தீன் இயக்கம்) 1975லிருந்து இயங்கிக் கொண்டிருக்கிறது.

தினமும் யாராவது அங்கும் இங்கும் பயணத்திலிருப்பார்கள்.

ஊர்க்காரர்களே தபால் சேவகர்களும்!

கடிதங்களை அங்கே சேகரித்து இங்கும், இங்கே சேகரித்து அங்கும் சேர்ப்பித்து விடுகிறார்கள்! ஊர்த்தாக்கல் இல்லையே என்ற கவலையே கிடையாது. அஞ்சல் துறையினர் முகத்தில் கரி.

இந்தக் 'குட்டித்துபை' எங்கே உள்ளதென்றால் திருச்சி - சென்னை நெடுஞ்சாலை என்.ஹெச் 45லிருந்து 3.கி.மீ தூரம் கிழக்கில் திருச்சி தென் ஆற்காடு எல்லையான வெள்ளாற்றின் தென்கரையில்.



**பாங்கு தாரா**

அக்காலத்தில் ஒட்டகத்திலே [illegible] பாலைவனப் பயணத்தில் தங்கி, தூங்கிக் கொண்டிருக்கையில் அவர்களை [illegible] எழுப்ப கொட்டப்படும் முரசுக்குப் 'பாங்கு தாரா'.

இதையே சற்று மாறுதலாக ஒலிக்கச் செய்தார் அல்லாமா இக்பால். அவருடைய கவிதை நூலுக்குச் சூட்டப்பட்ட பெயர் 'பாங்கா-தாரா'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குர்ஆன் தமிழாக்கத்தின் முதல்வர்



எதிர்ப்பக்கம் செல்லுங்கள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என் வாழ்நாளில் நான் பெற்ற பேறு, சென்னை மாநகராட்சியிலும், தமிழக சட்டப் பேரவையிலும் , இந்திய நாடாளுமன்றத்திலும் நான் வசித்த பதவிகள் அல்ல. பெருமைக்குரிய என் தந்தையாருக்கு நான் ஓர் 'எழுதுகர' மாகப் பயன்பட்டேன் என்ற அம்சம்தான். திருக்குர்ஆனை தமிழில் என் தந்தையார் சொல்லச் சொல்ல அந்தப் புனித வசனங்களையெல்லாம் நான் 20 முறை நல்ல அழகிய தமிழில் எழுதிய காரணத்தினால் தான் என் தமிழ் எழுத்தும் சிறந்தது. என் தலை எழுத்தும் சிறந்தது''

இப்படியொரு வாக்கு மூலத்தை அந்த அறுபத்தொன்பது தனயன் அளித்ததை கடந்தாண்டில் (1995) கலைவாணர் அரங்கில் பலர் காதாரக் கேட்டனர்.

யார் தந்தை? யார் தனயன்?

தந்தையாரின் அருமையான நிழற்படத்தை இங்கு பார்க்கும் பொழுதே யாரெனப் புரிந்துவிடும்.

பதினேழு வயதில் 'பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்'தில் சேர்ந்து பத்தாண்டுகள் கற்று 'பாகவி' பெற்றவர் (1906)

ஒரு ஜெர்மன் தொழில் மேதையுடன் தண்டையார் பேட்டையில் சாயத் தொழிற்சாலை நிறுவியதும் உண்டு.

கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் எல்லாம் அரசியலுக்கும் இழுத்து வந்தன.

'இயற்கை மதம்' என எழுதிய நூலுக்கு ஈ.வெ.ரா.பெரியார் முன்னுரை. உருது, ஆங்கிலத்திலும் வந்தது. காயிதே அஃலம் ஜின்னாஹ் பாராட்டுக் கடிதம் எழுதி மெய்சிலிர்க்கச் செய்தார்.

தமிழில் திருக்குர்ஆனுக்கு உரை காண வேண்டும் என்ற தணியாததாகம். 'இஸ்லாமிய நூற் பிரசுரச் சங்கம்' உதயம், 1926 பெப்ரவரி 19, ஜும்ஆவுக்குப் பின் பணி ஆரம்பம். மூன்று ஆண்டுகளில் முதல் பாகம் வெளியான பொழுது பாராட்டாத நெஞ்சங்களில்லை.

அப்புறம் இருபது ஆண்டுகளுக்குப் பிறகு இரு தொகுதிகளாக திருக்குர்ஆனின் முழுத் தமிழாக்கமும் வெளியாகி அப்பணியில் முதலாமவராக இவரை ஆக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாமே சூட்டிய பெயர்கள்:**

செவ்வந்தி - ஆறுநூல் - வைரூடி - ஒட்டு - புஷ்பராகம் - பத்மராகம் - பூனைக்கண் - தொறவல் - ஊரல்.

- இப்படிப் பெயர்கள் இந்திய - இலங்கை மாணிக்க வியாபாரிகளிடம் பல ஆண்டுகளாகப் புழக்கத்தில்.

தமிழ்பேசும் முஸ்லிம்களினால் மாணிக்கங்களுக்கு சூட்டப்பட்ட இவை, அவர்களுடனேயே உலகமெல்லாம் பயணம் செய்து கொண்டிருக்கிறது!



*முன்பக்க தொடர்ச்சி*

கண் திருஷ்டி படாதபடி பதினான்கு பிள்ளைகளுக்குத் தந்தையானவர்.

கி.பி. 1955 ஜூன் 23 - ஹிஜ்ரி 1374, துல்கஅதா 3, வியாழக்கிழமை காரைக்காலில் காலமாகி அங்கேயே நல்லடக்கம் பெற்றார். வயதோ எழுபத்தொன்பது.

## இப்படி உருப்படியாகச் செய்தால் உலகப்புகழ்!

உலகக் குத்துச்சண்டை வீரர் முஹம்மதலிக்கு அப்போது வயது 12. 60 டாலர் விலையில் ஒரு புத்தம் புதிய சைக்கிளை அவர் வாங்கினார். ஹாய்யாக ஓடியாடித் திரிந்தார்.

அவரது அதிர்ஷ்டம் ஒருநாள் அது திருட்டுப் போய்விட்டது.

எங்கெல்லாமோ அதனைத் தேடினார். கிடைக்கவில்லை. ஆத்திரத்துடன் வீட்டின் வெளி வாசற்படிக்கு வந்த அவர், ''அதனைத் திருடியவன் மட்டும் எனது கையிற் சிக்கினால் அவனை நொறுக்கி விடுவேன்'' என்று கத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் போய்க் கொண்டிருந்த ஒரு போலீசாரது காதில் அது விழுந்தது.

''தம்பி கவலைப்படாதே. முதலில் குத்துச்சண்டையைப்படி. பின்னர் சண்டைக்குப் புறப்படு'' என்றார்.

அலியின் மனத்தில் இது ஆழப் பதிந்து விட்டது. குத்துச் சண்டையைக் கற்றார். அவருடன் மோதிய எத்தனையோ பேரை நொறுக்கினார். உலகக் குத்துச்சண்டை வீரராகவும் மாறினார்.

அன்று சைக்கிள் ஒன்று காணாமல் போகாதிருந்தால் ஒரு மாபெரும் மனிதரைப் பார்க்கத் தவறியிருக்கும் உலகம்.

## மறை காட்டும் எட்டு சுவர்க்கங்கள்

## பிரவேசிக்கும் உரிமையாளர்கள்

- தாருல் ஜலால் - நபிமார்கள், ரஸூல்மார்கள். ஷுஹதாக்கள், கொடையாளிகள்
- தாருஸ்ஸலாம் - முறைப்படி தொழுதவர்கள்
- ஜன்னத்துல் மஃவா - ஜக்காத் கொடுத்தவர்கள்
- ஜன்னத்துல் குல்து - நன்மையை ஏவி, தீமைகளைத் தடுத்த தியாகிகள்.
- ஜன்னத்துள் னயீம் - மனோ இச்சையை அடக்கிய உத்தம சீலர்கள்
- தாருல் கரார் - ஹஜ்ஜு உம்ரா நிறைவு பெற செய்தவர்கள்
- ஜன்னத்துல் ஃபிர்தௌஸ் - இஸ்லாத்திற்காக போரிட்ட அறப்போர் வீரர்கள்.
- ஜன்னத்துல் அத்னு - பெருமானார்(ஸல்) அவர்களின் சொல், செயல்படி நடந்த நல்லடியார்கள்.

நன்றி: தித்திக்கும் அறிவமுதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அதான் அழைப்பு எப்படி அமையவேண்டும்?

'அதான் கூறும்பொழுது உமது சக்திக்கு மீறி சப்த மிடுவதால் உங்களது அடிவயிறு பிளந்து விடுமோ என அஞ்சு கிறேன். ஆகவே அலட்டிக் கொள்ளாமல் இயற்கையாகக் கூறுவீராக!

-திருமதீனத்து மஸ்ஜி துந்நபவிய்யின் முஅத்தின் ஹள்ரத் அபூமஹ்தூம் முஃா என்பாரிடம் உமர் ரலியல்லாஹ் அன்ஹு அவர்கள் உரைத்தது. சம்பந்தப்பட்டவர்களுக்குச் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்களுக்கு ? இன்சூரன்ஸ் ஆகுமானதா

1992 அக்டோபர் 30 முதல் நவம்பர் 2வரை உத்தரப் பிரதேசம் ஆஜம்காட் நகரில் நடைபெற்ற அகில இந்திய ஃபிக்ஹு அகாடமி கருத்தரங்கக் கூட்டத்தில் இன்சூரன்ஸ் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு மார்க்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பொதுவாக இன்சூரன்ஸ் திட்டத்தில் வட்டி, சூதாட்டம் இரண்டுமே கலந்து உள்ளது. இவையிரண்டும் மார்க்கத்தில் தடை செய்யப்பட்டவைகளாகையால் இன்சூரன்ஸ் செய்வது கூடாது என்பது இஸ்லாமிய ஷரீஅத்தின் சட்டமாகும். ஆயினும் -

இன்றைய இந்தியாவில் தொடர்ந்து நடைபெற்று வரும் கலவரங்களில், முஸ்லிம்களுக்கு அடிக்கடி உயிர்ச்சேதம், பொருட் சேதம், வணிகப் பொருட்கள், வணிக மையங்கள் நாசப்படுத்தப் பட்டு வருவது கண்கூடு, பாதுகாப்பற்ற நிலையும், நிரந்தர அச்சமும் முஸ்லிம் கள் இடையே தொடர்ந்து வருவது அனைவரும் அறிந்த ஒன்றே!

ஆகவே சில நிர்ப்பந்த நிலைகளில் விலக்கப்பட்ட காரியங் களும் ஆகுமாகிவிடும் என்ற விதிவிலக்கின் அடிப்படையிலும் ஒவ்வொரு முஸ்லிமும் தம் உயிர் - பொருள் - உடமைகளை - பாதுகாப்பதும் மார்க்க ரீதியான கட்டாயக் கடமை என்னும் அடிப்படையிலும்-

இன்றைய இந்தியச் சூழ்நிலையில், ஆயுள் இன்சூரன்ஸ், பொருட்கள் மீது இன்சூரன்ஸ் செய்து கொள்வது இஸ்லாமிய ஷரீஅத் சட்டப்படி அனுமதிக்கப்படுகிறது.

தகவல்:

மவ்லவி எம்.எஸ்.உமர் பாரூக் தாவூதி,

ஈரோடு-5.

நன்றி : மணிச்சுடர் 1, 2 - 1 - 93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரியம் ஆகாத நாகூர்

நாகூர் வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் ஊர். பல புலவர்கள் அங்கே வாழ்ந்திருக்கிறார்கள். 'புலவர் கோட்டை' என்ற சிறப்புப் பெயர் பெற்றது.

நான்காவது தமிழ்ச்சங்கம் தோன்றுவதற்கு பாண்டித்துரைத் தேவர் அவர்களைத் தூண்டிய குலாம் காதிர் நாவலர் அவர்கள் வாழ்ந்த ஊர். →

### தஞ்சையில் ஒரு 'சுவன ஊர்தி'!

தஞ்சை மாவட்டம் பல அரிய சேவைகளை முந்திக்கொண்டு செய்துவிடும். 'சுவன ஊர்தி' அதிலொன்று.

தஞ்சாவூர் மருத்துவமனைகளில் முஸ்லிம் மக்களில் எவருக்காவது எதிர்பாராத இழப்பு (இறப்பு) ஏற்பட்டு விட்டால் ஒருசில பொழுதுகளில் ஊருக்கு எடுத்துச்செல்ல அந்த ஊர்தி தயார் நிலையில்.

ஆற்றங்கரை ஜும்ஆ மஸ்ஜிதுக்கு தகவல் சொன்னால் சரி.

மாவட்ட முஸ்லிம் லீக் தலைவர் ஹாஜி எம்.எ.குலாம் மைதீன் அவர்களுக்கு லீக்கினரும் கொடையாளர்களும் வழங்கிய ஒட்டு மொத்த ஆதரவினால் இது சாத்தியம்.

வெளியூருக்குச் சென்ற தஞ்சைக்காரர் இறைவனது அழைப்பை ஏற்று விட்டாலும் சொந்த ஊர் மண்ணில் துயில் கொள்ளவும் ஊர்தி உதவி செய்யும்.

இந்த ஜனாஸா வாகனத்தின் தேவை அதிகமாகிவிட, புருணை வாழ் தமிழகத்தவரின் உதவியுடன் 'ஆம்புலன்ஸ் வேன்' என்ற நோயாளர் ஊர்தி ஒன்றும் கிடைத்துள்ளது.

சமுதாயத் தலைவர் சிராஜுல் மில்லத் முன்னிலையில் 19.1.95 அய்யம்பேட்டை, கனி நகர் முப்பெரும் விழாவில் அறிமுகம் செய்யப்பட்டது.

இவ்வாறு தகவல் அளித்தவர், என் எழுத்துக்களின் மிக நெருங்கிய அபிமானி, அய்யம்பேட்டை ஆலிமான் ஆர்.எம்.ஜியாவுத்தீன், பிற மாவட்டங்களிலும் இப்படியான சேவை உண்டா? இல்லையேல் திட்டம் ஒன்று தீட்டலாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதோடு, 400 ஆண்டுகளுக்கு முன்பே ஓர் அறநெறிச் செல்வராகத் தமிழகத்திலே உலாவந்த சாஹுல் ஹமீது என்ற பெரியவர் அவர்கள் அடங்கப்பட்டிருக்கிற திருத்தலம்.

ஆண்டுதோறும் இலட்சோபலட்சம் - மக்கள் அதுவும் அனைத்து சமுதாய மக்களும் - சந்தித்துக் கொள்கிற இடம்.

இருந்தாலும் இன்னும் நகரியம் ஆகவில்லை!

தமிழக சட்ட மன்றத்தில் 1985-86ம் ஆண்டுகளில், சிராஜுல் மில்லத், குரல் எழுப்பியும் - அதற்கு அன்றைய அமைச்சர் ப.உ.சண்முகம் சாதகமான பதில் சொல்லியும் - அப்புறம் புதிய தமிழக அரசு வந்தும் - தொடர்ந்து 'ஜெ' ஜெயம் பெற்றும்- இப்பொழுது தேர்தலுக்கு நாள் பார்த்து அரசு ஆசனத்தில் புதிய முகங்கள் அமரத் துடித்துக் கொண்டும் -

ஆண்டுகள் அதிவேகமாக!

நகரியம் மட்டும் இன்னும் நத்தையிலும் நத்தையாக!

**கண் பார்வையில்லை - ஆனால் கல்வி அமைச்சர்!**

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னால் எகிப்தில் ஒரு பேராசிரியர் கல்வி அமைச்சராகக் கடமை புரிந்திருக்கிறார்.

ஆனால், கண்பார்வையற்ற நிலையில்!

அவரது ஆய்வுகளுக்கு உதவி செய்த ஒருவரே அவருக்குக் 'கண்'களாகவும் வாழ்க்கைத் துணைவியுமானார்!

**முன்னோடி மருத்துவர்**

குருதிச் சுற்றோட்டம் பற்றிச் சரியான தகவலை வில்லியம் ஹாத்வி என்பவர் கண்டுபிடித்துக் கூறுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இப்னு அல்-நாஃபிஸ் என்ற மருத்துவர் கூறிவிட்டார்!

**ஷோக்கான போக்கு:**

- ஆற்றுநீர் வாதம் போக்கும்
- அருவிநீர் பித்தம் போக்கும்
- சோற்றுநீர் இரண்டும் போக்கும்.

நான் எப்பொழுதோ எங்கேயோ கேட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருமை பெருமையான கடிதம்

புனித மதீனமாநகரிலே முதன்முதலாக இஸ்லாத்தின் ஆட்சி முறையை ஸ்தாபன ரீதியாக நிறுவிய இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் அரசாங்க மதத்தலைவரென்ற முறையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அழைத்து அரேபியாவின் அயலிலிருந்த நாடுகளின் அரசர்களுக்கு விசேஷ தூதர்கள் மூலம் நிருபங்களை அனுப்பினார்கள். பாரசீக சக்கரவர்த்திக்கும் கொன்ஸ்டான்டிநோபிலில் இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோமர்களின் மன்னன் ஹர்கி யூலஸுக்கும் அபிஸீனியாவை ஆண்ட நஜ்ஜாஷிக்கும் எகிப்தை ஆண்ட கிப்திகளின் அரசர் 'மகூகஸ்ஸுக்கும் நிருபங்கள்' அனுப்பப்பட்டன. இவற்றில் மகூகஸ்ஸுக்கு அனுப்பப்பட்ட அசல் கடிதம் எகிப்தில் அஹ்மிம் நகரிலுள்ள கொப்ட் பிரதேர்ஸ் நூல் நிலையத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறது.

கூபி அறபு எழுத்துக்களில் எழுதப்பட்ட இக்கடிதத்தையே இங்கு காண்கிறீர்கள். தற்காலம் நாம் வாசிக்கும் அறபி இலக்கணக் குறிப்புகளோடு இது அமைந்திருக்கவில்லை. பெருமானாரின் பெயர் பொறிக்கப்பட்ட முத்திரை கடைசியில் காணப்படுகிறது. தமிழாக்கத்தையும் தந்துள்ளேன்.

*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால். அல்லாஹ்வுடைய தூதர் அப்துல்லாவுடைய மகன் முஹம்மத் கிப்திகளின் அரசராகிய மகூகஸ்ஸுக்கு எழுதியது:-*

*நேரான வழியைப் பின்பற்றுவோருக்கு சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக! பின்னர் நீர் அறிந்துகொள்ளும்!*

*நான் உம்மை இஸ்லாத்தின் பால் அழைக்கிறேன். நீர் அதனைத் தழுவினால், சாந்தியையும் சமாதானத்தையும் அடைவீர். அன்றி (இதுவரையில் கிறிஸ்துவ மதத்தைத் தழுவியிருந்ததற்காகவும், பின்னர் இஸ்லாத்தைத் தழுவியதற்காகவுமாக) இருமடங்கு நற்கூலிகளை அல்லாஹ் உமக்குத் தந்தருளுவான். நீர் புறக்கணித்தால் கிப்திகள் யாவருமே (திடுக்கிட்டு) வருந்தும்படியான துன்பம் உமக்கு ஏற்படும்.*

*வேதத்தையுடையவர்களே! நீங்களும் நாமும் சம்மதித்துள்ள ஒரு விஷயத்தின் பால் வாருங்கள். அ:தாவது ''அல்லாஹ்வைத் தவிர மற்றெவரையும் வணங்கோம். நாம் அவனுக்கு யாதொன்றையும் இணையாக்கோம்; நம்மில் எவரும் அல்லாஹ்வையன்றி எவரையும் தெய்வமாகக் கொள்ளோம். இதனை நீங்கள் புறக்கணிப்பதாயின் நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள்தாம் என்று நீங்கள் சாட்சி கூறுவீர்களாக!*

**முத்திரை**

''அல்லாஹ்வின் தூதர் முஹம்மத்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுபு
க்தணி
ணிவகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறபு எழுத்தணி அணிவகுப்பு

முன் 4 பக்கங்களிலும் இருப்பது அறபு எழுத்தணிக்கலையின் கைவண்ணம.

இலங்கை இறக்குமதி!

இன்று அறபு எழுத்தணியின் சிறப்பு ஸ்டிக்கர்களிலே.

புரிகிறதா? இல்லத்து வாயிலிலே, கல்லாப்பெட்டிக்கு மேலே, பயணிக்கும் வாகனங்களிலே அழகழகான பிஸ்மில்லாக்கள், லாஹிலாக்கள், முகம்மது ரஸூல்லாஹி, அஸ்ஸலாமு அலைக்கும் ஆகியவை பல.

எழுத்தணிக் கலை அறபு மொழியில் நல்ல வளர்ச்சியும் புகழும் அடைந்துள்ளது.

அதே நேரத்தில் ஆங்கிலத்திலோ பிற ஐரோப்பிய மொழிகளிலோ அபூர்வத்திலும் அபூர்வம்.

அறபு எழுத்தணியை முதன் முதலில் பார்க்கும் பிற சமூகத்தினர் குழம்பிப் போவார்கள். ஆனால் முஸ்லிம்கள் கண்களிலே ஒற்றிக் கொள்வார்கள். அது அவர்களுக்குப் புரியும்.

ஆங்கிலத்தில் CALLIGRAPHY என அழைக்கப்படுகிற இந்த வார்த்தை KALLIGRAPHIA என்ற கிரேக்க மொழியின் தழுவல். கருத்து: 'அழகிய எழுத்து'

அறபு நாடுகள் முழுவதிலும் அதன் செல்வாக்கு அபரிமிதம். ஈரான் முன்னணியில். அந்த நாடு அத்தனை ஈடுபாடு காட்டுகிறது.

1455-ல் குடென்பார்க் அச்சுக்கலையை அறிமுகப்படுத்திய பிறகும் அறபுக்கள் தங்களது பல முக்கிய தஸ்தாவேஜுக்களை, மிகக் குறிப்பாக அல்-குர்ஆனை அழகழகாக எழுதிப் பாதுகாப்பதிலே தான் ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

ஆகவே, அச்சுக்கலையை நோக்கி மேற்கு நாடுகள் ஆலாய்ப் பறந்துவிட நம்ம அறபுக்கள் எழுத்தணிக்கலையை இப்பொழுதும் பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை 'இஃப்தார்' ஸ்பெசல்!

நோன்பு காலத்தில் ஒவ்வொரு அந்திப்பொழுதிலும் 'இஃப்தார்' சமயத்தில் விசேஷ உணவென்று சமைக்கும் பழக்கம் இலங்கையில், தென் பகுதி வெலிகமத்தில். இமாமுல் அரூஸ் போன்ற மகான்கள் கால்பதித்த இடம்!

விதவிதமான கிழங்கு வகைகள், 'வட்டக்காய்' என்கிற பூஷணி, வாழை, பசளிக்கீரை, கருவாடு (ஆமாம்! கருவாடு!) ஆகிய பல வகையறாக்களை ஒன்றாகச் சேர்த்து (அல்லது நான் செய்வதுபோலத் தொகுத்து!) ஒரே பானையில் ஓர் அவியல்! நன்றாக வெந்தபிறகு வீசும் வாசம் பெரும் வாசம்! அந்தத் 'தாளிச்சாவுடன்' அமுது உண்ணக்கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

இப்படி நோன்பு காலத்தில் உணவு உண்ணும் பழக்கம் இலங்கையில் வேறுபகுதிகளில் இல்லை என்பதும் கவனத்திற்குரியது.

வெறும் தாள்களில் மட்டுமல்ல அறபு எழுத்தணி, காசுகளிலே, கழுத்தில் தொங்கும் மாலைகளிலே, பீங்கான் வேலைப்பாடுகளிலே விளம்பரப் போஸ்டர்களிலே எல்லாம் உபயோகப்பட்டு கண்ணையும் கருத்தையும் கவர்ந்திருக்கின்றன.

அறபு எழுத்தணியைப் பாதுகாக்கவும் அபிவிருத்தி செய்யவுமென கெய்ரோவில் 1922 லேயே ஒரு கலைக்கூடம் திறக்கப்பட்டு செயல்படுகிறது.

'ஸ்கூல் ஒப் றோயல் ஸ்கிரிப்ட்ஸ்'' என்ற அதில், இக்கலையைக் கற்கவும் சிறந்த விற்பன்னர்களாகவும் திகழ ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

இன்று, அங்கே கற்றுத் தேர்ந்தவர்கள் ஆயிரமாயிரம்.

இந்தியாவில் இதன் வளர்ச்சி என்ன என்பதை என்னால் சொல்ல இயலாதிருப்பதற்காக வருந்துகிறேன்.

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடமாக – தமிழகத்தில் அறபு எழுத்தணி பற்றி என்ன ஆர்வம இருக்கிறது என்றே புரிந்து கொள்ள இயலவில்லை.

ஆனால், இலங்கையில், பாடசாலை மட்டத்திலும் அரசு நடத்தும் போட்டி வைபவங்களிலும் சிறந்த இடம் உண்டு.

இலங்கை அரசின் முஸ்லிம் விவகார திணைக்களம், ஆண்டுதோறும் நடத்தும் மீலாத் விழாப் போட்டிகளில் இதுவொரு அம்சம். பல ஆண்டுகள் தொடர்ந்து நிகழ்வுறுகிறது.

94 – ம் ஆண்டில் முறையே சிரேஷ்ட (சீனியர்) பிரிவிலும், கனிஷ்ட (ஜுனியர்) பிரிவிலும் முதற்பரிசைத் தட்டிக் கொண்டுபோன எம்.எ.சி.எம். ஸர்ஜுன், ஹனிபா எம். அஸ்வர் ஆகியோரது எழுத்தணித் திறமைகளையே ஆரம்பப்பக்கங்களில் பார்த்துப் பரவசமடைந்தீர்கள்.

ஏனைய ஓவியங்கள் ஈரான் நாட்டுக் கலைஞர்கள் கைவண்ணம். அவர்களது ஆற்றல் நகையிலும் தெரிகிறது. 'தூது' சஞ்சிகைக்கு நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறபுத் தமிழ்க்குர்ஆன்

தனித்தமிழில் அறிஞர் பெருமகனார் அப்துல்உறமீத் பாகவி போன்றோர் அல்-குர்ஆனை தமிழில் அளித்திடுவதற்கு முன்பேயே 19ம் நூற்றாண்டில் அறபுத்தமிழ்க் குர்ஆன் தயாராகிவிட்டது!

அந்தப் பெருமையை இலங்கையே பெற்றது.

தென்னிலங்கை, வேர்விலையில் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்த ஷெய்கு முஸ்தஃபா ஒலியுல்லா என்ற பெரியார் ''பத்ஹுர்றஹ்மான் பீ தர்ஜுமாஹ தப்ஸீருல் குர்ஆன்'' என்னும் தலைப்பில் (கி.பி 1873) ஹிஜ்ரி 1291 முஹரம் பிறை, 30 வியாழக்கிழமை அறபுத் தமிழ்க்குர்ஆன் வெளியிட்டு விட்டார்கள்.



திருக்குர் - ஆனைத் திருப்ப... திருப்ப...

- [illegible] - 3,23,671
- புள்ளிகள் - 1,50,681
- [illegible] - 115 முறை
- [illegible] - 115 முறை
- [illegible] - 115 முறை
- [illegible] - 115 முறை
- [illegible] - 88 முறை
- [illegible] - 88 முறை
- [illegible] - 50 முறை
- [illegible] - [illegible] முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அதென்ன நிகாஹ் கடுத்தம்?

அரசாங்கம் திருமணப் பதிவுகளை சட்டப்படி ஆககுவதறகும், அதற்கென அலுவலகங்களைத் திறப்பதற்கும் முன்பு முஸ்லிம்கள் தாங்களே தங்கள் திருமணங்களை 'கடுத்தம்' என்ற ஒரு முறைப்படி பதிவு செய்து கொள்கின்ற பழக்கம் இருந்தது!

எங்கே என்றால் இலங்கையிலே!

அரேபியருடன் நெருங்கிய தொடர்புடைய இடங்களாக வரலாறு சொல்லும் வேர்விலை (பேருவளை) மக்கொன (மக்கூன்) அளுத்கம (தர்ஹா நகர்) போன்ற ஊர்களிலும் அதனை அண்மிய பகுதிகளிலும் 'கடுத்தம்' கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

அவாகள் அதற்கு உபயோகித்த மொழி அறபுத் தமிழ்.

சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஒரு திருமணத்தின் 'கடுத்தப்பதி'யின் மூலப் பிரதியையும் தமிழ் வடிவத்தையும் இங்கு வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இதற்கு எனக்கு உதவியவர் இலங்கை, மக்கொன (மக்கூன்) ஊர் மௌலவியார் எம்.ஆர்.எம்.நிஸாம் பஹ்ஜி அவர்கள். அன்னார் பொக்கிசமாக 'தைலா' பெட்டியில் பாதுகாத்து வைத்திருப்பதற்குப் பாராட்டுகளும் உரித்தாகின்றன. இதோ அறபுத் தமிழில் உள்ள விவாகப் பதிவு :

## தமிழ் வடிவப் பதிவு இது :

ஹிஜ்ரத்து 1261 ஆம் வருஷம், ஜமாதுல் ஆகிர் மாதம் 14ஆம் திகதியாகிய வருஷம் 1845 ஆம் ஆண்டு, ஆனி மாதம் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் காலியால் வந்து கனேதன்னையில் இருக்கும் மஹல்லம் உஸ்மான் லெப்பை மரைக்கார் குமேஸ்தர் அவர்கள் கதீப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷெய்கு ஹஸனா லெப்பை ஆலிம் ஸாஹிப் அவர்களுக்கு, மக்கூனிலிருக்கும் அஹ்மது லெப்பை உடைய மகள் முத்து உம்மாவை பத்தொன்பதரைக் களஞ்சி பொன் மஹராக மஹல்லம் லெப்பைத் தம்பி லெப்பையூனுஸ் மஹல்லம் கதீப் உஸ்மான் லெப்பையும், சித்தீக் லெப்பை ஆவு லெவ்வை மரைக்கானும் சாட்சியாக, மக்கூன் மரைக்கார் லெப்பை அப்துல் காஸிம் லெப்பை வகீலாக நிகாஹு முடித்துக் கொடுத்து இதன் கீழ் கையொப்பம் வைத்தேன்.

- இதில் குறிப்பிடப்பட்டுள்ள கதீப் ஷெய்கு ஹஸனா லெப்பை ஆலிம் ஸாஹிப் என்னும் மணமகனார், பிற்காலத்தில் 'மகான் ஆலிம் ஸாஹிப் அப்பா' ஆனார். அளுத்கமை. தர்ஹா நகரில் அன்னாருக்கு தர்ஹா இருக்கிறது. அஷ் – ஷெய்கு ஹஸனுப்னு உஸ்மானுல் மஹ்தூமிய்யி (ரழி) என இன்றும் சங்கைப்படுத்தப்படுகிறார். →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றுமொரு முக்கியத் தகவல் :

திருமண அழைப்பிதழையும் கூட அறபுத் தமிழில் அனுப்பும் வழக்கமும் அன்று இலங்கை முஸ்லிம்களிடம் இருந்து வந்தது.

மூதறிஞர், கலாசூரி, அல்லாமா எம்.எம்.உவைஸ் பெருமகனார் பாதுகாத்து வைத்திருக்கும் மணமங்கள அழைப்பை இங்கே பெருமையுடன் வழங்குகின்றேன்.

இந்த அழைப்புக்கு வயதொன்றும் அப்படி அதிகமாகி விடவில்லை. 67 தான். (ஹிஜ்ரி 1348 – ஜமாதுல் அவ்வல், இரண்டு 1929 – 10–05)

அதுசரி! 'கடுத்தம்' பழங்கணக்கில் இருக்கட்டும். நம் திருமண அழைப்பிதழ்களை அறபுத் தமிழில் அடித்தால் பழமையில் ஒரு புதுமை கண்டதாக இருக்குமே. யோசிப்போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**'சிராஜுல் மில்லத்' சிறப்பு கிடைத்தது எப்படி?**

எந்த முஸ்லிம் இல்லத்திலும் யாருக்கும் தெரிந்த பெயர் 'சிராஜுல் மில்லத்'

அதற்குரியவர் ஆயிரமாயிரம் இதயங்களில்!

இருபது ஆண்டுகளுக்கு முன் - (1975 மே 25, ஹிஜ்ரி 1395 - ஜமாதுல் அவ்வல் பிறை 14)

அல்ஹாஜ் ஆ.கா. அப்துஸ்ஸமத் அவர்கள் தமிழ்மாநில முஸ்லிம் லீக் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு ஒரு வரவேற்பு பள்ளப்பட்டியில் ஏற்பாடு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது 'காயிதே மில்லத்' பட்டம் போல ஒரு சிறப்புப் பட்டம் வழங்க நகர லீகினர் தீர்மானித்தனர். பொரவச்சேரி மவ்லவி ஷாஹ் மு.முகம்மது இப்ராஹீம் பாகவி. ஷப்பீர் அலி ஹஜ்ரத், ஆர்.கே.பாகவி ஆகியோர் சேர்ந்து ஆலோசித்தார்கள். ஏழெட்டுப் பெயர்களைப் பரிசீலித்தார்கள். 'சிராஜுல் மில்லத்,' 'முனீருல் மில்லத்' இரண்டுக்கும் போட்டி! கடைசியில் வென்றது முதலாவது

அது உச்சரிக்க வசதி. அழகிய கருத்தும் உள்ளது - சமூக ஒளி

நல்லது. இப்பொழுது நிழற்படத்தை மீண்டுமொரு முறை பாருங்கள். தாடி இப்படி கவர்ச்சியை அள்ளிக் கொட்டினால் யார் தான் ஆசைப் படமாட்டார்கள்? படத்துக்கு வயதோ நான்கணித்த வரையில் 35! அப்படியானால், அந்த சமயத்தில் 'சிராஜுல் மில்லத்' திற்கு என்ன வயதிருக்கும்?

சும்மா இருந்தால் 'டைஜஸ்ட்'டை மேலும் தொடர்வதைக் கொஞ்சம் நிறுத்தி விட்டு பிறந்த நாளைத் தேடிப்பிடித்து வயதைக் கணக்கிடுங்கள். ஒரு தலைவருக்கு இதையாவது செய்யக்கூடாதா?

அண்ணார்' பற்றிப் பலர் அறியாத ஒரு தகவலும் என்னிடம் உண்டு.

அவர் 1952ல் திருச்சி ரசூல் – மதனீ ஆரம்பித்த அனாசார ஒழிப்பு இயக்க பிரசாரக் குழுவில் சென்னை பிரசாரகராக இருந்தார். அப்பொழுது அவரின் முகவரி 114, அங்கப்ப நாயக்கன் தெரு!

**தமிழன்பன் யோசனை**

அறபுப்பாடசாலைகளில் (மதரஸாக்கள்) தமிழ் இலக்கியத்தை அறிமுகப்படுத்த வேண்டும். மாணவர்களிடையே இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆசையை ஏற்படுத்த இதுதான் வழி. அத்தோடு திருமணம் போன்ற வைபவங்களில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களை அச்சிட்டு வழங்க வேண்டும்'

அருமை யான யோசனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஹர்ரம் புத்தாண்டில் நிகழ்ந்தவை

- நபி(ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் பயணம்
- ஆதம் (அலை) அவர்களின் பாவம் மன்னிக்கப்பட்டு ஆறுதல் பெற்றார்கள்.
- இத்ரீஸ் நபியவர்கள் சுவனம் புகுந்த நன்நாளும் இதுவே.
- நூஹ் நபியின் மரக்கலம், ஜூதி மலையில் ஒதுங்கியது.
- நபி இப்ராஹிம் (அலை) அவர்கள் பிறந்தார்கள்.
- நம்ரூதின் நெருப்புக் குண்டம் ஒழிந்தது.
- தாவூதி நபியின் தெளபா ஏற்கப்பட்டது.

**சிந்தியுங்கள்! இப்படி ஜனவரிக்கு என்ன மகிமை உண்டு?.**

## ஒரு கோடீஸ்வரக் கொடைவள்ளலின் சமாதி

அந்தக் கோடீஸ்வரக் கொடைவள்ளல் இறக்கு முன் கண்டிப்புடன் சொன்ன வார்த்தைகள்:

"என் அடக்க இடத்தில் நான் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். கட்டடம் எதுவும் கட்டாதீர்கள். நான் படுத்துறங்கும் மண்ணிலே நிறையச் செடி, கொடிகள், புல்பூண்டுகள் வளர வேண்டும். அதனை ஆடும் மாடும் உண்று பசி போக்கிக்கொள்ள வேண்டும். நான் மழையில் நனைய வேண்டும். வெயிலில் காய வேண்டும். என்னை மிக எளிமையாக இருக்க விட்டுவிடுங்கள்".

-இதன் உண்மை, பொய்யை அவர் இறந்து 350 ஆண்டுகளுக்குப் பிறகு இன்றும் காணலாம்.

கீழக்கரைக்குச் செல்லுங்கள். சீதக்காதிப் பெருமகனின் (சமாதி) கபுறடி எங்கே என்று கேளுங்கள்! காட்டுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பாவில் முஸ்லிம் சனத்தொகை (1982)

| நாடுகளின் பெயர் | முஸ்லிம்களின் தொகை | சனத்தொகைவீதம் |
|---|---|---|
| யூகோஸ்லேவியா | 4,825000 | 12.5% |
| பிரான்ஸ் | 2,500000 | 4.6% |
| அல்பேனியா | 2211000 | 75.0% |
| மே.ஜேர்மனி | 1,800000 | 29 % |
| பல்கேரியா | 1700000 | 19.3% |
| பிரித்தானியா | 1250000 | 2.2% |
| நெதர்லாந்து | 400000 | 2.8% |
| பெல்ஜியம் | 350000 | 6.3% |
| கிரீஸ் | 16000 | 1.6% |
| சைப்பிரஸ் | 155000 | 24.4% |
| ஸ்பெயின் | 120000 | 0.3% |
| இத்தாலி | 120000 | 0.2% |
| ஆஸ்திரியா | 80000 | 1.1% |
| சுவிட்சர்லாந்து | 70000 | 1.1% |
| ருமேனியா | 65000 | 0.3% |
| டென்மார்க் | 35000 | 0.7% |
| சுவீடன் | 30000 | 0.3% |
| போலந்து | 22000 | 0.06% |
| நோர்வே | 12000 | 0.4% |
| ஏனைய நாடுகள் | 31000 | |
| மொத்தம் | 15835000 | 3.2% |

தகவல்: ''இன்றைய உலகில் முஸ்லிம் சிறுபான்மையினர்'' அலி கதானி, முகம்மத் ஹுஸைன் அரிஸ், அமிர்கபீர்-1368(1989)

நன்றி : 'தூது'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 பக்கங்கள் بسم الله الرحمن الرحيم விலை -ரூ. 4.50

44- வது ஆண்டு MARUMALARCHI WEEKLY

# மறுமலர்ச்சி

வார இதழ்

கண்ணே கண்ணே என்றும்

பொன்னே பொன்னே என்றும்

திருச்சி பாலக்கரையிலிருந்து **'மறுமலர்ச்சி'** வார இதழ் வந்து கொண்டிருக்கிறது. பிரதம ஆசிரியர் 'பாஷா', நிர்வாக ஆசிரியர் எ.எம்.யூசுப் என 1951 ல் ஆரம்பிக்கப்பட்டு, 45 ஆவது ஆண்டு 'மறுமலர்ச்சியாக' நாவலர் (யூசுப்) பிள்ளைகள் எனப் பெயரெடுத்திருக்கிறத அவரது செல்வங்களால் முக்கியமாக ஹாஜி **ஓய்.செய்யித் முபாரக் ரஸ்வி பி.காம்** வெளியிடப்பட்டு வருகிறது.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் பத்தாவது ஆணடு மலராக 'இஸ்லாமிய கலைக் களஞ்சியம்' ஒன்று ஐநூறு பக்கங்களில் வெளியிட்டு வரலாறு படைத்துள்ளார்கள் மறுமலர்ச்சிக் குழுவினர்.

இப்படியொர முயற்சியை வேறெந்த இதழும் இன்னும் செய்யவில்லை. தொடர்ந்து செய்வதற்கு பொருளாதாரம் யாருக்கும் இடங்கொடுக்கவில்லை.

இரு அபூாவ தகவல்கள்

'மறுமலர்ச்சிக்கும் குட்டிதுபை' ஆகிய லெப்பை குடிக்காடுக்கும் இன்றும் ஒரு பாசப் பிணைப்பு உண்டு. அவ்வூர் வித்துவான் **மௌலவி ஹாஜி எ.கே.ஜமாலி** அவர்களே அதனைத் தோற்றுவித்தவர். நிறுவனர்.

இதுபோல கோவை **எ.எம்.ஹனீப்** (எழுத்தரசு) 1958 ல் இருந்து இன்றுவரை இணை ஆசிரியராகத் தொண்டாற்றி வருகிறார். இப்படி 38 ஆண்டுகள் ஒரே இதழில் எழுதிக்கொண்டிருக்கிற வேறு முஸ்லிம் எழுத்தாளர் எவருமிலர். பெருமைப்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலுச் செய்யும் ஹவுஸ்கள் ஒழிக்கப்பட வேண்டும்?

சித்தார்கோட்டை பிரபல டாக்டர் . அதையும்விட மேலாக மாபெரும் எழுத்தாளர், நல்ல பேச்சாளர் .அன்பருக்கு அன்பர். சையத் இப்ராஹிம் ஹாஜி (ஹிமானா சையத்) ஒன்றை அடித்துச் சொல்கிறார்கள்:

ஒலுச் செய்யும் உறவுஸ்கள் கண்டிப்பாக ஒழிக்கப்பட வேண்டும்!

அப்படியானால் மாற்று ஏற்பாடு?

பைப் வசதிகளுடன் கூடிய ஒலு இடங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டுமாம்.

காரணம் - அந்தளவுக்கு பராமரிப்பு மோசம். நோய்க் கிருமிகளின் ஆரம்பம் அங்குதான்.

நமக்கென்று உள்ள கண்ணே கண்ணான 'மணிச்சுடர்' நாளேட்டில் படித்தது. தவறியவர்கள் நூலகத்தில் பழைய இதழ்களைப் புரட்டி முழு விபரமும் தெரிந்து கொள்க.

## சமுதாயம் சுத்தத்திலிருந்து ரொம்ப தூரம்

இல்லம் ஒன்றிற்கு வைத்தியத்திற்காகச் சென்றிருந்தார் டாக்டர் எம்.எ.ரஸாக்.

அப்பொழுது ஒரு காட்சியைக் கண்டார்.

ஒரு தாய் தன் கைக்குழந்தையின் அசுத்த துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தாள் அருகில் கழுவி வைக்கப்பட்டிருக்கும் சமையல் பாத்திரங்களிலே சர்வ சாதாரணமாக அசுத்தம் தெளித்தது. அதை அவள் பொருட்படுத்தவில்லை.

''என்னம்மா இப்படிச் செய்கிறீர்களே?'' என்றார் மருத்துவர்.

''அதுக்கென்ன டாக்டர், நம்ம குழந்தை மலம் தானே? அதுவும் தாய்ப்பால் மட்டும் குடிக்கும் பச்சைப் பாலகனுடைய அசுத்தம் தானே?. பரவாயில்லை!'' என்று ஒரு மடக்கு மடக்கினாள் தாய்.

அந்தப் பெண்ணின் அறியாமையைக் கண்டு மனம் நொந்து போயிருக்கிறார் டாக்டர் ரஸாக்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இஸ்லாமியகட்டடக்கலைகைவண்ணத்திற்கு ஒரு சிறப்பான உதாரணத்தை இப்படத்தில் பார்க்கிறீர்கள்.

இடம்: ஃபெஸ். மொராக்கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உமிழ்நீர் - நமக்கு உடனடி மருந்து

உடம்பில் காயம் பட்டால் உமிழ்நீரைத் தடவுகிறோம்.

சில நாகரிகவாதிகள் முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள்.

அவர்கள் விஷயம் புரியாதவர்கள்.

பெரும்பாலான மிருகங்களுக்கு அதன் எச்சிலே மருந்து. அடிக்கடி நாவால் தடவிக் கொள்வதைப் பார்த்திருக்கிறோமே!

உமிழ் நீரில் உள்ள ஒரு ரசாயனப் பொருள் காயங்களைத் துரிதமாக ஆற்றும் சக்தி உள்ளவை.

அமெரிக்க அறிவியலாளர்களின் கண்டுபிடிப்பின்படி அவர்கள் யீஸ்டை (YEAST) புளிக்க வைப்பதன் மூலம் புரிந்து, எச்சிலிலும் அப்படியொரு சக்தி இருப்பதைத் தெரிவித்துள்ளனர்.

நமது உம்மி நபி (ஸல்) அவர்களோ, அன்று அந்த நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அலி (ரலி) அவர்களுக்கு கண் வேதனை ஏற்பட்டபோதும், அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களை தௌர் குகையில் பாம்பு கடித்த போதும் தங்களது உமிழ்நீரைத் தடவியே காயங்களைக் குணப்படுத்தினார்கள் என்பது வரலாறு.

### இதெல்லாம் தெரியுமா?

- ஜும்ஆ முதன் முதலாக தொழப்பட்டது மஸ்ஜிதுல் கூஃபாவில்.
- 'பிஸ்மில்லாஹ்' என வரும் சூராவின் பெயர்'' சூரத்துல் நம்லு 19ம் ஜுஸ்வு.
- திருக்குர்ஆனின் மிகச்சிறிய சூரா ''அல்-அஸ்ரு''. அதன் ஆயத்துக்கள் மூன்று. எழுத்துக்கள் எழுபத்து நான்கு. 103வது அத்தியாயம்.

### ஆற்காடு அல்ல ஆறு காடு!

அப்பொழுது, 1697ல், மாமன்னர் ஆலம்கீர் அவ்ரங்கசீபின் படைத்தளபதி ஜுல்பிகார் கான் செஞ்சி மீது படையெடுத்துக் கைப்பற்றினார். பாலாற்றங் கரையில் ஒரு நகரை நிர்மாணித்தார். அது ''ஆறு காடு'' எனப் பெயர் பெற்றது. தலை நகரானது (1697-1801). அதை ஆட்சி புரிந்தவர்கள் ஆற்காட்டு நவாப்கள் என்றழைக்கப் பட்டனர். அது ஆற்காடாகி விட்டது இப்பொழுது பலருக்குப் அர்த்தம் தெரியாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்று முக்கியம் பெற்ற ஓய்வு இடம்



சுமார் பத்தாண்டுகளுக்கு முறபட்ட நிழற்படம். இன்று இதன் தோற்றம் எப்படி என்பதை கண்டறிந்தவர்களே சொல்லலாம்.

ஆனால் அப்பொழுது நேரில் காணும் சந்தர்ப்பம் நூற்றுக்கு நூறு நம்மவர்களுக்குக் கிடைத்ததா என்பது சந்தேகமே. ஏனென்றால் உள் நுழைதல் அனுமதிக்கப்படவில்லை. இப்பொழுதோ பாக்கியம் உண்டு. பாத்திஹாவும் ஓதலாம்.

வரலாற்று முக்கயத்துவம் மிக்க அடக்கத்தலம். என்றால் புரியுமா?

"ஜன்னத் – உல் – முஅல்லா" என அழைக்கப்படும் இது, மிக மிக எளிமை.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உற்ற தோழர்கள், அவர்களுக்குப் பின் இஸ்லாமியத் தூதினைச் சுமந்தவர்கள், இங்கே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுள், அண்ணல் நபி (ஸல்) அவர்களது வளர்ச்சிக்கு முதல் வித்திட்ட, முதல் துணைவியார் கதீஜா நாயகி (ரலி) அவர்களும் அடக்கம்.

ஹஜ்ஜுக்கு நிய்யத்து வைத்திருப்பவர்கள் நின்று, பார்த்து, ஃபாத்திஹா ஓதி வாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஹர்ரம் பத்தாம் நாளில்...

நானே இறைவன் எனக்கூறி இறுமாப்புடன் வாழ்ந்த பிர் அவ்னும் அவனது தோழர்களும் மூழ்கடிக்கப்பட்டது இந்நாளில்

பிர்- அவ்னிடம் இருந்து மூஸா (அலை) அவர்களை காத்து அருளியது இந்நாளில்

நூஹ் நபி (அலி) அவர்களின் பசியை போக்க மண்ணும் கோதுமையாய் மாறி விளைந்தது இந்நாளில்

"குன்" என்னும் ஒரே சொல்லில் விண்ணையும் மண்ணையும் இறைவன் படைத்ததும் இந்நாளில்

ஆதம் (அலை) அவர்கள் மண்ணில் இறுங்கியது இந்நாளில்

ஆதம் (அலை) அவர்களும் ஹவ்வா (அலை) அவர்களும் சுவர்க்கம் சென்றதும் இந்நாளில்

ஆதம் (அலை) ஹவ்வா (அலை) இருவரும் அழுது அல்லாஹ்விடம் மன்னிப்பு பெற்றது இந்நாளில்

சுவர்க்கம் நரகம் சுற்றிப்பார்க்க இத்ரீஸ் (அலை) அவர்களை வானிற்கு உயர்த்தப்பட்டது இந்நாளில்

மீனால் விழுங்கப்பட்ட யூனுஸ் (அலை) அவர்கள் அதன் வயிற்றிலிருந்து வெளி வந்தும் இந்நாளில்

தாவூத் (அலை) அவர்களின் பாவ மன்னிப்பு இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் இந்நாளில்

சுலைமான் (அலை) அழகில்லா பெண்ணை மணக்கச் செய்து பின்னர் இறைவன் அப்பெண்ணுக்கு அழகிய உருவம் கொடுத்ததும் இந்நாளில்

இப்றாஹீம் (அலை) அவர்கள் பிறந்ததும் அவருக்கு (கலீல்) தோழர் எனும் அழகுப்பெயர் கொடுக்கப்பட்டதும் இந்நாளில்

நம்ரூத் என்னும் கொடியோன் இப்றாஹீம் (அலை) அவர்களை தீக்குண்டத்தில் தூக்கி எறிய இறைவன் பூம் பொழிலாக மாற்றி புன்முறுவலுடன் வரச் செய்ததும் இந்நாளில்

நெஞ்சை பிளக்கும் துயர சம்பவமாக கர்பலாவில் நிகழ்ந்த கொடுமையும் இந்நாளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் நீங்கள்?..

நான் தமிழகத்திற்கு வரும்போதெல்லாம் ஒரு கேள்வி: ''தாங்கள் சாயப்பா, ராவுத்தரா? மரைக்காரா அல்லது சோனகர் தானா?''

என் பதிலோ சிரிப்பு தான்!

பேச்சு, நடை, உடை, பாவனை அனைத்துமே நான்கும் கலந்த ஒரு கலவையாக இருக்கும்பொழுது எதைச்சொல்வது?

தமிழகச் சகோதரர்கள்கூட, ஒரு பகுதியினரை இன்னொரு பகுதியினர் சந்திக்கும் சமயத்திலும் இப்படி வினா எழுப்புவது என் காதுகளில் விழுந்திருக்கிறது!

## சாயபா? ராவுத்தரா? மரைக்காரா? சோனகரா?

சரித்திரத்தில் மிகத்தெளிவாக உள்ளபடி, இந்திய-இலங்கை அனைத்து முஸ்லிம்களும் அறபு வழி வந்த சோனகர்களே என்பதில் நான் தீவிர முடிவுகொண்டவன்.

• இருந்தாலும், ''நாம் அனைவருமே முஸ்லிம்'' என்பதே மிகச் சரியான பதிலாக அமையும்.

வம்ச அகம்பாவமும், ஊருக்கேற்றபடி இராவுத்தார்-லெப்பை- மரைக்காயர் பாகுபாடும், உறுதூபேசும் முஸ்லிம்களில் சாஹிப், தக்னி, கான் என்ற கிளைகளும் இருப்பதை தமிழக முக்கிய நகரங்களையும் கிராமங்களையும் சுற்றி வந்ததில் பார்த்திருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனோ 'சோனகர்' என்பதில் மட்டும் யாரும் உரிமை கொண்டா டாமல் இலங்கையராகிய எங்களுக்குத் தாரை வார்த்துவிட்டார்கள்! (உண்மையில் அதில்தான் உரிமையை விட்டுக்கொடுத்திருக்கக் கூடாது!).

மேலும், ஓர் அதிசயம் என்னவென்றால் உறுதூ முஸ்லிம் - தமிழ் முஸ்லிம் என்ற பாகுபாடு!

இதையும் உணர்ந்தபொழுது என்க்கு என்னவோபோல் ஆகிவிட்டது!

பெண் கொடுக்கல், வாங்கல்கூட அறவே கிடையாது என்பதையும், தமிழ் முஸ்லிம்களை உறுதூ வாலாக்கள் முஸ்லிம்களாகக் கருதுவதில்லை என்பதையும் கண்டும் கேட்டும் அதிர்ச்சியடைந்து போனேன்.

எனது மதிப்புக்குரிய பன்னூலாசிரியர் திருச்சி குலாம் ரசூல் ஹாஜி அரைநூற் றாண்டுக்கு முன் 'பால்யன்' சஞ்சிகையில் வழங்கியுள்ள தகவலின்படி, நாகூர், நாகப்பட்டினம், காரைக்கால் பிரதேசங்களில் பெருவாரியான முஸ்லிம் சகோதரர்களின் பெயரோடு 'மரைக்காயர்' ஒட்டிக் கொண்டுள்ளது. →

# நாம் செய்யக்கூடிய தேசியப்பணி

இந்திய மக்கள் மத்தியில் இந்திய சமய நூற்களின் சாரத்தையும் இந்து சமயச் சான்றோரின் போதனைகளையும் அகழ்ந்து எடுத்துக் கூறினால் அதுவே இஸ்லாமிய நெறி விளக்கம்.

இந்துமத வேதங்களில் ஒளிந்து கொண்டுள்ள உண்மை களை வெளிக் கொணர்ந்து, அவற்றை மக்களின் வாழ்விய லாக்குவது முஸ்லிம்கள் செய்யக் கூடிய மாபெரும் தேசியப் பணி.

மறுமலர்ச்சி பெற்ற மாரதத்தில் இருந்து தௌஹீதின்-வேதாந்தத்தின் தென்றல் அகிலமெங்கும் பரவும் காலம் விரைவில் வரும்.

– திருச்சி, 'தாருல் குர்ஆன் ஆசிரியர், பேராசிரியர் கே.எம். காதிர் முஹ்யுத்தீன் அவர்கள் நம்பிக்கை இது! காலம் பதில் சொல்வதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பட்டங்கூட, மேற்குறித்த இடங்களிலெல்லாம் அலைகடல் ஓசை அபரிதமிதமாகக் கேட்பதாலும், அந்த ஓசையைக் காதில் வாங்கிக் கொண்டு 'மரக்கலம்' எனும் கப்பல் வழி வர்த்தகமும், தொழிலும் புரிந்தவர்கள் முற்காலத்தில் வாழ்ந்ததாலும் அப்படி! 'ராயர்' எனக் கடைசியாக வருகிற வார்த்தைக்கு 'அதிபர்' எனவும் அர்த்தமிருக்கிறது. ஆகவே, கப்பல் அதிபதிகள்' என்பதைக் குறிக்க 'மரக்கல ராயர்கள்' என ஆயிற்று. அதுவே பின்னர் 'மரைக்காயர்கள்' என்று முடிந்தது. (மேற்கொண்டும் தெளிவுக்கு பேராசிரியர் மு.சாயபு மரைக்காயர் உதவி வேண்டும்! அத்தோடு, தூத்துக்குடி பக்கம் உள்ள கிறிஸ்தவப் பெருமக்களிடம் 'வில்லவராயர்' போன்றவர்களைக் காண்கின்றேன்!)

சரி. லெப்பைக்கு வருவோமே! 'லப்பைக்' என்பது அறபு. இதோ வந்துவிட்டேன் என்பது தமிழ். அதுவே மருவி 'லப்பை' என ஆகிவிட்டது.

'ராவுத்தர்' எனப்பட்டம் வந்ததும் இப்படியே!

'குதிரை வியாபாரிகள் - குதிரைக்காரர்கள்' ஆகியோருக்கு சோழரும், பாண்டியரும் வாழ்ந்த காலத்தில் வழங்கப்பட்ட பெயர்! பழங்கால குதிரை வியாபாரிகள் யாமே! அன்று உயர்ஜாதி அறபுக்குதிரைகளின் ஏகபோக இறக்குமதி (அறபுக்களின் வழியாக) நம்மிடம் இருந்தது.

கடைசியில் என்னவென்றால், வம்சவாரியிலே மருவி ஒருபகுதியினர் 'ராவுத்தர்' எனச் சொல்லிக் கொள்ளத்தலைப்பட்டு இன்றுவரையில் இருந்து வருகிறது. (அத்தோடு முஸ்லிமல்லாத ஒரு பிரிவினரின் வகுப்புப் பெயராகவும் அது இருக்கிறது என்பது பன்னூலாசிரியர் குலாம் ரசூல் அவர்கள் தகவல்! இது ஆய்வுக்குரியது).

மேலும், உருது முஸ்லிம்களில் 'தக்னி' இருக்கிறார்கள் என்று தந்தேனல்லவா, அது தெக்காணத்தைச் சார்ந்த முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகும்!.

இதைவிட ஒரு கேலிக் கூத்து இலங்கை வாழ் முஸ்லிம்களில் ஒரு பகுதியினரிடம்!

"தென் இந்தியக்காரர் எல்லோருமே சம்மான்! நாங்க சோனக வம்சம்! அவங்க எங்களுக்கு ஒரு படி கீழே தான்!"

- பாருங்கள்! இருபத்தெட்டு மைல் கடல் தூரத்திற்கு அப்பாலுள்ள சகோதரர்கள் லெப்பைகளையும் ராவுத்தர்களையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலுக்குச் செருப்பில்லையே!

நான் மனம் வருந்தக்கூடிய அளவில் எனக்கு எந்தக்குறையும் இருந்ததில்லை. ஆனால் காலில் போட செருப்பில்லையே என்ற வருத்தம் மட்டும் அடிக்கடி எழுந்து கொண்டிருந்தது. இதே வருத்தத்தோடு ஒரு நாள் கூபாவிலுள்ள பள்ளி வாசலில நுழைந்தேன். அங்கே காலில்லாத ஒருவனைக் கண்டேன். உடனே எனக்கு கால்களைத் தந்த "நாயனுக்கு நன்றி" செலுத்தி னேன். இமாம் சஅதி.ரஹ்.

சாயபுகளையும் தங்களோடு சரிசமமாக மதிப்பதேயில்லை! சம்மான்கள்! சம்மான்கள்!

நல்ல வேளை! மரைக்கார் தப்பி விட்டது! அவர்களைக் கொஞ்சப் பேர் சரிசமமாகப் பார்ப்பார்கள்!

அதே நேரத்தில், ஏற்கெனவே குறித்தபடி, தமிழக முஸ்லிம்கள் தங்களுக்குள்ளேயே பிரித்துப் பார்த்துக் கொள்கிறார்கள்!.

-இப்படி, சர்வசாதாரணமான, முக்கியமல்லாத நிலையில் அமைந்துபோன அடைமொழிப் பெயர்களை வைத்துக் கொண்டு, உயர்வு-தாழ்வு, தாரதம்மியம் கற்பித்து இருபதாம் நூற்றாண்டைக் கடந்து கொண்டிருக்கிறோம்! இன்னும் நான்காண்டுகளில் கணனி ஆட்சிபுரியப் போகும் 21க்குள் நுழைந்து விடுவோம்! (இன்ஷா அல்லாஹ்) அதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை!

சமத்துவம், சகோதரத்துவத்தில் நிலையான இடம் பிடித்தவர்கள் நாம்!

சாஹிப், இராவுத்தார், லெப்பை, மரைக்காயர் என்றெல்லாம் பெயருக்குப்பின்னால் ஓர் அழகுக்கு வைத்துக்கொள்வோம். ஆட்சேபணை இல்லை.

ஆனால், அதை வைத்து, நான் உயர்ந்தவன், நீ தாழ்ந்தவன் என்று நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நடைபோடுவது வெறும் பம்மாத்து!

நாம் உலகளாவிய முஸ்லிம் உம்மத்துக்கள்! கவனத்தில் வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயது 325



கீழக்கரை மேற்கில் இன்றைக்கும் இயங்கிக்கொண்டிருக்கும் ஆத்மஞான கூடம் அரூஸிய்யா தைக்கா ஹிஜ்ரீ 1082ல் (கி.பி.1671) உருவானது. 122 வருடங்களுக்கு முன் போர்த்துக்கீசியர்கள் தமிழகத்தை சூறையாடிய பொழுது அதுவும் சிதைந்தது. ஆனால் மறுபடியும் மஹான் ஸதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. புத்துயிர் அளித்தவரோ சிறந்த தமிழறிஞரும் குத்புமான தைக்கா சாஹிபு வலி அவர்கள். ஹிஜ்ரி 1220 (கி.பி.1805) அதன்பின் ஹிஜ்ரி 1265ல் (கி.பி.1848) இமாமுல் அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களால் விரிவுபடுத்தப்பட்டது.

இங்கே 1-வது ஜும்ரா முதல் தஹ்சீல் வகுப்பு வரை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இலங்கை, மலேஷியா மாணவர்களும் ஓதியிருக்கிறார்கள். புகழ்பெற்ற மஸ்தான் சாகிபும், சேகுனாப்புலவரும் இங்கேதான் அத்தியந்த நண்பர்களாக ஆகி இலக்கியவாதிகளானார்கள். இஸ்லாமிய இலக்கிய உலகின் சிகரத்தை எட்டிப்பார்த்தார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஸ்தான் ஸாஹிபு

பிறந்தது: குணங்குடி (ராமநாதபுரம் மாவட்டம்)

இயற்பெயர்: சுல்தான் அப்துல் காதிர்

காலம் : பத்தொன்பதாம் நூற்றாண்டு

கல்வி : கீழக்கரையில், அருஸீயா தைக்காவில் மார்க்க ஞானம்

உற்ற நண்பர்: ஷைகுனாப் புலவர்

தொழில் : திருச்சியில் அத்தர்கடை

தவம் : மதுரை சிக்கந்தர் மலையில் நாற்பது நாட்கள்

சீடர் : தாயுமானவருக்கு

பாடல்கள்: அல்லாஹ்வையும், முஹித்தீன் அப்துல்காதிர் ஜீலானியையும் போற்றி.

இறுதிக்காலம்: சென்னை ராயபுரம். மீளா உறக்கமும் அங்கே.

(அய்யாசாமி முதலியார் என்றொரு கவிஞர் இவர்மீது பதிற்றுப்பத்து அந்தாதியே பாடியிருக்கிறார்.)

### சுவனம் செல்ல
### துயார் நிலையில் பிராணிகள் பத்து!

- இப்ராஹீம் (அலை) அவர்களின் காளைக்கன்று
- இஸ்மாயில் (அலை) அவர்களின் ஆட்டுக்கடா
- சாலிஹ் (அலை) அவர்களின் ஒட்டகம்
- யூனுஸ் (அலை) அவர்களைச் சுமந்து சென்ற மீன்
- மூசா (அலை) அவர்களின் மாடு
- உஜைர் (அலை) அவர்களின் கழுதை
- சுலைமான் (அலை) அவர்களுடன் பேசிய எறும்பு
- பல்கீஸ் (அலை) அவர்களிடம் தூது சென்ற ஹுத்ஹுத் பறவை
- அஸ்ஹாபுல் கஹ்பு என்ற குகைவாசிகளின் நாய்
- நபி (ஸல்) அவர்களைச் சுமந்து சென்ற புராக் என்ற வாகனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிமணி உமருக்கு!

எத்தனையோ அறிவாலயங்கள், நினைவாலயங்கள் அவருக்கும் இவருக்கும்!

சிதம்பரனார் மாவட்டத்தில், எட்டையபுரத்தில் அறேபிய குறைசிக்குலத்தில் ஷெய்கு முகம்மது அலியார் திருக்குமாரராக 1632ல் (ஹிஜ்ரி 1052) பிறந்து 65 ஆண்டுகள் வாழ்ந்தார் அந்தத்தமிழ்க் கவிஞர். அவர் 'உறுது பாய்' அல்ல! 'தமிழ் பாய்'. இஸ்லாம் ஒரு கண்ணில், இன்பத்தமிழ் மற்றொரு கண்ணில்:

முப்பெரும் காண்டமுள்ள சீறாப்புராண காவியம் அவர் தமிழன்னைக்கு வழங்கிய செல்வம்.

புலவர் அவர்கள் உறங்கிக்கொண்டிருப்பது எட்டையபுரத்தில் ஜும்ஆப் பள்ளிவாசலை அடுத்து.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலி, மேலப்பாளையத்தில் 'உமறுப்புலவர் நினைவாலயக் குழு' ஒன்று கல்வத்து நாயகம் கலீபா ஜனாப் கே.எம். செய்யது அப்துல் காதிர் தலைமையில் இயங்கத்தொடங்கியது. தமிழக அரசுக்குக் கோரிக்கை செய்தார்கள் ஒரு நினைவுச்சின்னத்திற்கு!

அப்பொழுது மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் காலம். சும்மா சொல்லக்கூடாது, மதுரைமாநகர ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டில் ஒரு தீர்மானம், அப்புறம் எட்டையபுரத்தில் நினைவாலயத்திற்கு ஓர் அடிக்கல் நாட்டல் அனைத்தும் நடந்தன.

அதன்பின் உறக்கம்! கலைஞர் களத்திற்கு வந்துவிட்டதனால் அப்படியோ என்னவோ! 3.10.1990ல் அவருடைய கவனிப்புக்கு பாளைத்தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த எஸ். குருநாதன் மூலம் கோரிக்கை செய்தார்கள்.

ஊஹூம்! 1990, 29-30-31 தேதிகளில் கீழக்கரை இஸ்லாமிய இலக்கிய மாநாட்டிலும் நினைப்பூட்டிப் பார்த்தார்கள். பிரதம அதிதியாக வந்திருந்த கலைஞர் ஒப்புதல் வாக்குமூலம் வழங்குவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் காதுகளைத் தீட்டிக்காத்துக் கிடந்தார்கள். (இலங்கையிலிருந்து சென்றிருந்த நானும் அதிலொருவன்).

நடக்கவில்லை எதுவும்!

அது, இப்பொழுது 'ஜெ' காலம் வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நூல் வெளியாகும் காலத்தில் தமிழக அரசில் புதிய மாற்றங்களுக்கான மணியோசையும் கேட்கிறது!

நாம் செய்யக்கூடியது ஒன்றே இருக்கிறது.

கண்ணீரே காணிக்கை அந்த மாபெரும் புலவருக்கு!

## 'மத்ரஸா' வின் பின்னணி எது?

மதீனாப் பள்ளிவாசலில் ஆரம்பித்தது நபி (ஸல்) அவர்கள் அற போதங்கள்.

அவர்கள் கூறுவதையெல்லாம் தோழர்கள் மும்முறை உரைத்து மனனம் செய்வர்.

அல்-குர் ஆன் போதனைகளை உரைக்க அவர்கள் பல்வேறு கூட்டத்தினர் மத்தியிலும் செல்வதுண்டு.

பின்னர் உமர் (ரலி) அவர்களும் 'அஹ்லுல் இல்ம்' என்ற அறிஞர் பெருமக்களை போதனைக்காக அனுப்பினார்கள். அவர்கள் சென்ற இடங்கள் பள்ளி வாயில்களாக அமைந்தன.

மத்ரஸாக்களின் தோற்றுவாய் இதுவே! ''தரஸ'' என்ற சொல்லிலிருந்து பிறந்தது. 'கல்விக் கூடம்' என்பது தமிழாகலாம்.

## என்னருமைச் சிறிய மகனே!

'என்னருமைச் சிறிய மகனே! நரகிற்கும் உனக்கும் இடையே அதிகமான திரைகளை அல்லாஉற் அமைத்துள்ளான். ஆனால் நீ மொழிகின்ற ஒவ்வொரு தீயவார்த்தைகளும் அத்திரைகளைக் கீறிக்கிழித்து விடும். ஆகவே, நீ மறுமையில் எதனை அறுவடை செய்ய விரும்புகின்றாயோ அதனை இப்பூமியில் விதைத்து விடு'

பேரறிஞர்

லுக்மானுல் ஹக்கீம்.

(அருமைச் சிறிய மகனுக்கு மேலும் அவர்கள் கூறுகையில், 'அளவோடு பேசுக. பேச்சில் நிதானம் வேண்டும். மிதமிஞ்சி பேசுதல் கூடாது. அவசியமின்றி உரக்கப் பேசுதலும் ஆகாது. உரையாடலின் போது காட்டுக்கூச்சல் போடுவதால் உடலுக்கு ஆபத்து' என்றும் அறிவுரை பகர்ந்திருக்கிறார்கள். இது சிறிய மகனுக்கு மட்டுமல்ல, பல பெரிய மகன்களுக்கும் பொ... ந்தும்!)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைக்கால் முன்னோடி

* எதில்? எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன்.
* பால்யன் – வார இதழ் – 1944 – 47 எம்.எம்.அலி – உ. அ. ஹனிபா.
* சன்மார்க்க சங்கு – மாதமிருமுறை – 1946 – 47 எம்.எம்.அலி – கே.எஸ். ஜெய்னுலாப்தீன் – டி.எம்.எம்.அஹமத் (சாரண பாஸ்கரன்)
* வானொலி – மாத இதழ் – 1945 – 46 உ. முஹைறதீன் அப்துல் காதர்.
* இளம்பிறை – மாத இதழ் – 1946 – 48 எஸ்.எம்.ஒமர்.
* மின்னொளி – மாதமிருமுறை – 1946 – 47 எச்.எம்.எஸ். அப்துல்காதர் ஷாதலி
* முஸ்லிம் லீக் – வார இதழ் – 1947 – 48 ஏ.அப்துல் ஹை ஸாஹிப் – 'பாஷா' ஏ.எம்.யூசுப்.
* ஸ்டார் – மாதமிருமுறை – 1946 – 47 எம்.சமீது கமால்
* சாந்தி விகடன் – மாத இதழ் – 1959 –60 ஏ.எம்.அலி

இந்த எட்டு இதழ்களும் அந்த நாற்பதுகளில் (அரை நூற்றாண்டுக்கு முன்) சமுதாய மேம்பாட்டுக்காக காரைக்காலிலிருந்து வெளியாகியுள்ளன. ஆயுள் ஓரிரண்டு ஆண்டுகளே! அதன் பின் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் மீண்டும் பணி தொடர்ந்ததா எனப்புரியவில்லை. எப்படியோ ஒரு காரைக்கால் முன்னோடியாகத் திகழ்ந்திருக்கிறது முஸ்லிம் இதழியலுக்கு இன்று சென்னை அதை மிகக்கஷ்டத்துடன் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தினசரி – 'மணிச்சுடர்'

மாதமிருமுறை – 'சமரசம்'

மாத இதழ் – 'முஸ்லிம் முரசு' – 'லட்டு'

'முஸ்லிம் குரல்' – 'பிஸ்மி'

திருச்சி – திருநெல்வேலியும் மதுரையும் தன்பங்குக்கு இரண்டிரண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மறுமலர்ச்சி' வார இதழ். 'நர்கிஸ்' மாத இதழ். (திருச்சி)

'ஜமாஅத்துல் உலமா', 'ரஹ்மத்' இரண்டும் மாத இதழ்கள் (திருநெல்வேலி)

'குர்ஆனின் குரல்' 'மறைச்சுடர்' இரண்டும் மாத இதழ்கள் (மதுரை)

## இஸ்லாமியர் வைத்த பெயர் 'இந்து'

அமெரிக்க கலைக்களஞ்சியத்தில் இப்படி ஒரு சில வரிகள். முதலில் ஆங்கில வரிகளையே தந்து விடுகிறேன்.

* The use of the word "Hindu' to discribe a religion probably postedates the Muslim invasions of India which began 1001 A.D. The word itself is said to occur for the first time in a book of the 8th century A.D. The Muslim invaders whose Arabic name for India was "Hindustan' who first called the religion of the people of India "Hinduism' and its adherents Hindus - The Enchyclopedia Americana

இப்பொழுது தமிழாக்கம்:

'கி.பி.1001ல் முஸ்லிம்கள் இந்தியாவுக்குள் ஊடுருவிக் கொண்டிருந்த சமயத்தில் மதமொன்றுக்கு வியாக்கியானம் கொடுக்க முனைந்த பொழுது 'இந்து' என்ற வார்த்தையை உபயோகித்தனர். அது முதன் முதலில் எட்டாம் நூற்றாண்டு நூலொன்றில் இடம் பெற்றும் உள்ளது. 'இந்தியா' என்பதற்கு ஆளவந்த முஸ்லிம்கள் வழங்கிய அறபுப் பிரயோகம் 'ஹிந்துஸ்தான்'. அவர்களே இந்திய மக்களின் மதத்தை 'ஹிந்துஸ்தான்' (இந்து மதம்) என்று முதலில் கருதியதோடு அதனைப் பின்பற்றுபவர்களை 'இந்துக்கள்' எனவும் அழைத்தனர்.

இந்தக் குறிப்பில் இருந்து பெறமுடிகின்ற கருத்து:

'இந்துவில்லிருந்தே இந்தியா என்ற பெயர் பிறந்திருக்கிறது. அதற்கு முஸ்லிம்களே பின்னணி!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறபு மணமகனுக்குப் போதனை!

அங்கே அறபுக்கள் தங்கள் ஆண்மக்களுக்கு ஆறுவகை குணமுள்ள பெண்களை மணமுடித்துவிடாதே என்று சொல்வார்களாம்.

அந்த ஆறு வகையும் இவை-

- முனங்கிக்கொண்டும், முறைப்பாடுகள் செய்துகொண்டும் நோயாளிபோல் இருப்பவள்.
- புருஷனின் இதயம் நோகும் அளவுக்கு ஒவ்வொன்றையும் விவாதிப்பவள்
- அந்நிய ஆடவரைக்கண்டு ஆசிப்பவள்
- கண்ணால் காணும் அனைத்துப் பொருட்களிலும் ஆவல் கொள்பவள்.
- தன் அவயவங்களையும் கூந்தலையும் சிங்காரிப்பதிலேயே நேரம் செலவிடுபவள்.
- முகத்துக்கு நேராகக் கடுமையாகப் பேசி கவலைக்குள்ளாக்குபவள்.

## தெருப்புறமா? கொல்லைப்புறமா?

தமிழக முஸ்லிம்கள் சிலரிடம் ஒரு சங்கேதமொழியுண்டு. மிக நெருக்கமானவர்கள் திருமண சம்பந்தமாகப் பேசிக் கொண்டால் ''தெருப்புறமா? கொல்லைப் புறமா?'' என்று கேள்வி கேட்டுக் கொள்வார்கள். பக்கத்தில் உள்ள மூன்றாமவருக்கு ஒன்றும் புரியாது. ஒருசமயம் அது நீங்களாகவே இருந்துவிட்டால் தடுமாறிவிட வேண்டாம்.

'தெருப்புறமா' என்றால் தன் குடும்பத்தோடேயே பெண்ணை வைத்துக்கொள்பவரா என்பதை விசாரிப்பது!

'கொல்லைப்புறமா' எனறால், வீட்டுமாப்பிள்ளையாக வைத்துக்கொள்ளப் போகிறாரா என்று தெரிவது!

- ஒருசமயம், கலைமாமணி ஹாஜி கா.மு. ஷரீப் தந்த தகவல் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விண்ணகமும் மண்ணகமும் வந்துதித்த
அண்ணலான நபிமணிக்கு அருமையான பாத்திமா!
பெண்களுக்குக் கண்மணியாய்ப்
பெரியவர்க்கு விண்மணியாய்
பண்பிருக்கும் தன்மணியாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாருயர்த்தும் பாத்திமா!**
**கைசிவக்க மாவரைத்தும்**
**கண் சிவக்க அடுப்பெரித்தும்**
**மெய்சிலிர்க்க வீட்டுவேலை**
**மேவி செய்தீர் பாத்திமா**
**கடுங்குளிரால் நடுங்கு மேழை**
**கவலை போக்க**
**மண உடையை கொடையளித்துப்**
**பழைய ஆடை கொண்டு நின்றீர் பாத்திமா!**

- இப்படியே அந்தப்பாட்டை எத்தனை படித்தாலும் சரி கேட்டாலும் சரி உடம்புப் புல்லரித்துப்போய்விடும்!

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தம் புதல்வியார், மாநிலமே போற்றும் மங்கையர் மாணிக்கம் பீவி பாத்திமுத்து ஜொஹ்ரா (ரலி) அவர்கள் மீது பாடப்பட்டுள்ள பாடல்களுக்கோ கணக்கில்லை. ஆனால் இதற்கு ஈடாகுமா?

ஒரு பகுதியையே இங்கு தந்தேன். வானொலியில் ஒலிக்கும்பொழுது தமிழ்ச் சகோதரியர்களே உருகிப்போவதையும் கண்ட அனுபவம் உண்டு. அவர்கள் அத்தனை பேருக்கும் தெரியும், அது, 'இசைமுரசு', இறையருட் பாடகர் நாகூர் ஹாஜி ஈ.எம். ஹனிபாவின் வெண்கலக்குரலால் ஒலிக்கிறதென்று!

ஆனால் தெரியாத ஒரு முக்கிய தகவல் (முஸ்லிம் அபிமானிகள் உட்பட) அப்பாடலை இயற்றியவர் யார் என்பது?

வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரியிலும், திருச்சி ஜமால் முஹம்மத் கல்லூரியிலும் பேராசிரியராக - உத்தம பாளையம் கௌதியா கல்லூரியில் முதல்வராக இருந்தவரை அறிந்திருக்கிறீர்களா? அல்லது மறந்து விட்டீர்களா?

அவர் 'மதிநா' என்ற இலக்கிய சஞ்சிகையை நடத்திய பெருமைக்கும் உரியவர். அவர் வழங்கிய இலக்கியக் கட்டுரைகள் அனேகம். இணையற்ற எழுத்தாளர். தலைசிறந்த சொற்பொழிவாளர்.

இந்த ஆண்டு (1996) ஏப்ரல் 10-ல் எழுபத்தொன்று பூர்த்தி. கடந்தாண்டில் இலட்சியத் துணைவியை இழந்து தன்னந்தனியராகி, உடல் தளர்ந்து தக்கலை, மேட்டுக் கடையில் இருக்கிறார்.

அவரே இறையருள் கவிமணி, டாக்டர் கா. அப்துல்கபூர் எம்.ஏ. அன்று இளம் வாலிபராக, துடிதுடிப்புடன் பேனா முனையில் வாழ்ந்த காலத்தில் கிளிக்கான ஓர் அபூர்வமான நிழற்படம் இங்கே கண்களுக்கு விருந்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமக்கு அருளப்பட்ட வேதத்தில் தற்பாதுகாப்புக்காக 'காப்பு' வாக்கியங்கள் உண்டு. சரியான சந்தர்ப்பங்களில் அவற்றினை உபயோகிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

பஸ்மலா என்ற பிஸ்மில்லாவையே எடுத்துக்கொள்வோம்.

❋ 21 தடவைகள் இரவு உறங்கப்போகுமுன்னர் ஓதிவிட்டுத் தூங்கினால் மௌத்து என்ற நிச்சயமான இறப்பைத் தவிர வேறு எதுவும் அணுகாது அவர் பாதுகாக்கப்படுவார்.

❋ திருக்குர்ஆனில்கடைசியாகஉள்ள''குல்''எனத்தொடங்கும் மூன்று ஸூராக்களும் பாதுகாப்பு அரண்களே! ஷைத்தானுடைய தீமைகள், சூனியக்காரர்களுடைய தீங்குகள் அணுகா.

❋ ஒருவர் உறங்கச் செல்லுமுன் ஸூரா கலாஸ், ஸூரா பலக், ஸூரா நாஸ் ஆகிய மூன்று சூராக்களையும் ஓதி தன் உடல் முழுதும் ஊதிக்கொள்ளவும். மௌத்தைத்தவிர மற்றெல்லா ஆபத்துக்களி லிருந்தும் அவை காக்கும் - என்பது நபிகள் நாயகம் (ஸல்) அருளியது.

❋ ''அல்-குறைஷ்'' பாதுகாப்புக்குரிய இன்னொரு முக்கிய ஸூரா. வீடு, உடைமைகள் ஆகியவற்றின் பாதுகாப்புக்கு இந்த ஸூரா விசேஷம். ஆயத்துல் குர்ஸியுடன் அல்-குறைஷியையும் ஓதிவிட்டு ஒருவர் இல்லத்திலிருந்து வெளியூர் புறப்பட்டால் அவருடைய சொத்துக்களுக்கு பாதுகாப்பு கிடைக்க அல்லாஹ் அருளுகிறான்.

❋ பிரயாண ஆபத்துக்களைத் தவிர்க்க ஸூரா குறைஷ் ஓதிக் கொள்ளவேண்டும்.

❋ ஸூரா யாஸீன் இன்னொரு முக்கியமான கேடயம். காலையில் ஓதுபவருக்கு மாலை வரை பாதுகாப்பும், மாலையில் ஓதுபவருக்கு விடியற்காலை வரை பாதுகாப்பும் கிடைக்கும். →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ ஸூரா அஷ்-ஷுஃரொவின் முதல் மூன்று வசனங்களையும் தினமும் ஓதிவர அவை எம்மைப் பாதுகாக்க வல்லவை.

❋ ஜும்ஆ முடிந்ததும், ஸூரா ஃபாத்திஹா, ஸூரா இக்லாஸ், ஸூரா ஃபலக், ஸூரா நாஸ் ஏழு தடவைகள் ஓதிமுடிந்தால் ஒருவரது இல்லம், குடும்பம், செல்வம் அனைத்தும் அல்லாஹ்வினால் பாதுக்காக்கப்படும் என இப்னு அபிஸ்ஸைப் (ரலி) குறிப்பிட்டுள்ளார்கள்.

❋ இலட்சியத்தம்பதிகள் அலி(ரலி), பாத்திமா நாயகி இருவருக்கும், 33 முறைகள் ஸுப்ஹானல்லாஹ்வும், அல்ஹம் துலில்லாஹ்வும், அல் லாஹு அக்பரும் கையிலே ஊதி, உடம்பிலே தடவிக்கொண்டு உறங்கச்செல்லுமாறு நபி(ஸல்) அவர்கள் கட்டளை யிட்டார்கள். இப்படிச் செய்வதால் நோய்ப்பாதுகாப்பு கிடைக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், மூன்றாம், ஒன்பதாம், ஐம்பதாம் வசனங்களும் வெகு முக்கியமான இறைகாப்பு கேடயங்களே!

❋ ஆயத்துல் குர்ஸி!

இதை எழுதும்பொழுதும் நினைகுந்தோறும் உள்ளமெல்லாம் உவகை கொள்கிறது.

ஒரு சொந்த அனுபவம்:

எனது அபிமான வாசகிகளுள் ஒருவரான திருமதி குரைஷா அவர்கள் குவைத்திலிருந்து வந்து ஓர் ஆயத்துல்குர்ஸி பிரேமை வரவேற்பறையில் வைத்துச் சென்றார்கள். அதுவரையில் அதன் மகிமை தெரியாத பாவி நான்! இன்று ஆண்டுகள் பலவாகிவிட்டன. அதன் சிறப்பையும் மகிமையையும் என 'குருவிக்கூட்டில் உள்ள அனை வருமே அடைந்தோம்! தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

அப்படிப்பட்ட ஆயத்துல் குர்ஸியைப் பர்துகாப்பில் சிகரம் என்றே சொல்லலாம்.

அதனை யார் ஓதி வருகிறார்களோ அவர்களை அது பாதுகாத்துக் கொள்கிறது.

அல்லாஹ்வே அவற்றின் மூலம் பாதுகாப்புத் தேடுமாறு எம்மைத் தூண்டுகிறான்.

இன்னுமின்னும் நிறைய உண்டு. இந்தச் சிறிய 'டைஜஸ்' டில் அடக்கி 'டைஜஸ்ட்' செய்துகொள்வது கடினம், கடினம்!

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை மன்னித்து, இறுதியாக எழுதும் ஒன்றை நாள்தோறும் சொல்லப் பழகுவோம்!

அது - ஸலவாத்து!

''நபி (ஸல்) அவர்கள் மீது தினமும் ஓர் எண்ணிக்கையான ஸலவாத்து சொல்லிக் கொள்ளத் தீர்மானித்து ஐவேளைத் தொழுகைக்கு அடுத்து பதினொரு முறைகள் ஸலவாத்தை வழமையாக்கிக் கொண்டால் எதிர்பாராத நன்மைகளையும், பாதுகாப்பையும் பெறுவோம் என இலங்கை, முதுபெரும் எழுத்தாளர் 'கன்ஸுல் உலூம்' முக்தார் ஏ. முஹம்மது ஹாஜியார் எனக்கு அறிவுறுத்தினார்கள்.

கிட்டத்தட்ட இதே போன்ற ஒரு வேண்டுகோள் 'மணிச்சுடர்' நாளேட்டிலும் அவ்வப்பொழுது வந்து கொண்டிருக்கிறது இப்படி:

ஸலவாத்து சகல பிரச்சினைகளுக்கும் நிவாரணி.
இது அனுபவ உண்மை. அதிகமாக நாயகம் (ஸல)
அவர்களின் மீது ஸலவாதது சொல்லுங்கள்.
சுலைஹா டவாஸ
த.பெ.எண்:22,
மதுரை-1.

இந்த விளம்பரத்தின் பின்னணியில் இருப்பவர், மேற்படி டவர்ஸின் நிறுவனரும், எனது இளமைக்கால இனிய நண்பருமான எம்.எஸ்.முகம்மதுமர்சூக் ஹாஜியார் அவர்கள். ஸலவாத்தின் மகிமையை அனுபவபூர்வமாக உணர்ந்தவர்.

அவர்தம் வேண்டுகோளை காணிக்கையாக்குகிறேன் அபிமானிகளுக்கு!.

**உயிருடன் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல பூமி!**

அல்-குர்அனில் 77:26 வசன விளக்க உரை இப்படி அமைந்திருக்கிறது:

இந்தப்பூமி உயிருடன் இருப்பவர்களுக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. மரணித்தவர்களும் இப்பூமியின் வயிற்றில் தான் இருக்கின்றனர்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்ப்படத் தகவல்....

சாதாரணமாகப் பார்த்தால் மொகலாயர் காலத்துச் சமாசாரம் போல் தெரிகிறது.

அவர்கள் இப்படியான அமைப்புகளில் (குதுப்) மினார்கள் கட்டியது உண்மைதான்.

ஆனால் உள்ளே சுழலும் ஓட்டலும், சிற்றுண்டிச் சாலைகளும், தோட்டமும் அமைத்துப் பிரமிக்கச் செய்ய வில்லை.

இதற்காகவே குவைத் போகலாம்.

கடல் மட்டத்திலிருந்து 82 மீட்டர் உயரத்தில் இரு டவர்களும், 123 மீட்டர் உயரத்தில் இன்னொன்றும் உருண்டையாய். கறுப்பாய். அத்திப்பழம் போல (அல்லது அன்னாசி போல) தோற்றமளிக்கும் மூன்றும் ஓட்டல்கள் அங்குண்டு.

ஒன்று சுழலும். ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கொருமுறை சுற்றிவர குவைத்தின் அனைத்துப் பகுதிகளையும் பார்க்கலாம். போதாததற்கு ஓர் அதிசயமான தோட்டமும். இது, மூன்று ஒட்டல்களையும் இணைக்கும் பாலமாகவும் வேறு செயல்படுகிறது.

படத்தில் ஊசி முனை போல வெள்ளையாகத் தெரிவது தான் சுழல் டவர். குவைத்தின் குடிநீர் சேகரிக்கும் இடமாகவும், மின்சார சேவைகளைக் கண்காணிக்கும் இடமாகவும் செயல்படுகிறது.

இவை அதிகாரபூர்வமாக செயல்பட ஆரம்பித்து பதினேழு ஆண்டுகள். (1.3.1979)

### ஒல்லி உடம்பா?

ரொம்பவும் ஒல்லியாக மெலிந்திருந்தாலும் சரியில்லை.

தாய்மார்கள் தங்கள் பெண் பிள்ளைகள் குறித்து கவலைப் படுவதில் நமது கவலையும் சேரத்தான் வேண்டும்!

ஆருயிர்த் துணைவி ஆயிஷா (ரலி) அவர்களுக்கு அருமை நபிகளார் (ஸல்) அவர்கள் ஓர் ஆலோசனையைச் சொல்லி பரீட்சிக்கப்பட்டி ருக்கிறது!

குளிர்ச்சியான வெள்ளரிப் பிஞ்சும், உஷ்ணமான பேரீச்சம் பழமும் உண்டால் அது ஒரு நோய் நிவாரணி மட்டுமல்ல, பருக்கவும் வைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பாடா! கருணாமணாளன் பெற்றார் பாராட்டு

ஆனந்தப் பெருமூச்சு விட வேண்டும்.

சகல இஸ்லாமிய இதழ்களிலும், குமுதம் – கலைமகள் – மாலைமதி போன்ற இதழ்களிலும் நூற்றுக்கணக்கான சிறுகதைகளை எழுதியும், இன்னும் எழுதிக்கொண்டுமிருக்கிற 'எழுத்தாள இயந்திரம்' **என்.எம்.அப்துர் ரவூப் ஆகிய 'கருணாமணாளன்'** அவர்களை ஒரு வழியாக 1994ல் பாராட்டி விட்டார்கள்.

அதுவும் அவர் வாழும் நெல்லையிலேயே.

அறுபதைத் தாண்டி இளைஞராக ஓடிக் கொண்டிருக்கும அன்பர், தனது பதினைந்தாவது வயதிலேயே பேனா முனைக்கு வந்து விட்டவர். நாற்பத்தைந்து ஆண்டுகளாக எழுத்துப்பணி.

ஆழ்வார் திருநகரியைப் பிறப்பிடமாகக் கொண்டு, பாளையங்கோட்டையில் ஏதோவொரு சிறிய வேலையிருக்கிறார். அது அவர் குடும்பத்திற்கு சோறுபோட, இவரோ சோறு தண்ணீர் இல்லாமல் அந்த விடுதியின் ஒரு மூலையில் எழுத்து ... எழுத்து.

அவர் இன்னும் கொஞ்சம் நன்றாக வாழ்ந்துவிட நாமெல்லாம் ஏதாவது செய்தும் ஆக வேண்டும்.

காதைக் கிட்ட கொண்டு வாருங்கள். அவருக்கு அவருடைய சொந்த மாவட்டத்தில் பாராட்டு என்று ஒன்று கிடைத்ததே முதன் முதலாக 25.9.94 அன்றுதான். பொற்கிழி. விருது எல்லாம் இனியே! இன்ஷா அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் திருச்சி

திருச்சிராப்பள்ளியிலேயே 'பள்ளி' இருக்கிறது. எனவே பள்ளி வாசல்கள் பல. 'சோழவள நாடு சோறுடைத்து' என்ற பாடல் புகழ் பெற்ற திருபூமி.

ஆறகாடு நவாப் முஹம்மதலி ஆண்ட பூமி.

தமிழ் வளர்த்த பிச்சை இபுறாஹிம் புலவர் வாழ்ந்த நகர். குணங்குடி மஸ்தான் சாகிபும் நடை போட்டதுண்டு.

நாட்டிற்கு நற்பணி புரிந்த நத்ஹர்வலி நாதர் முகாம் அமைத்த இடம்

முஸ்லிம் போர்வீரர்கள் உலாவிய வீதிகள் பல உண்டு.

மாப்பிள்ளை மாவீரர்களை மடியிலே (காஜாமலை) வைத்து மகிழும் நகர்.

''ஹைதர்'' என்ற ஓர் உருதூ கவிஞனையும் பெற்றெடுத்தது திருச்சி.

கல்விக்காக உயிர் கொடுத்த முர்துஜா ஹஜ்ரத் பிறந்து வளர்ந்த இடமும் இதுவே.

'திருச்சி கண்ட சீதக்காதி' என இந்து, கிறிஸ்தவ மக்களும் போற்றிய ந.மு.காஜாமியான் (இன்றைய ஜமால் முகம்மது கல்லூரிக்கு 120 ஏக்கர் நிலதானம் செய்த பெருந்தகை) புகழுடம்பு பெற்றதும் இங்கேயே.

இப்பொழுது நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் பன்னூலாசிரியர் திருச்சி ரசூலும், 'நர்கிஸ்' மாதர் இதழ் நிறுவனரும், பிரதம ஆசிரியருமான தூத்துக்குடி முஸ்தபா ஹுசைனும் சங்கலியாண்டபுரத்திலும் அதற்கண்மிய மல்லிகைபுரத்திலும் இருக்கிறார்கள்.

அத்தோடு ஒரு நூறு முஸ்லிம் செல்வந்தர்களும் உள்ளனர். அவர்கள் நினைத்தால் சமூகத்தின் எந்த சேவைக்கும் துணை நிற்கலாம். நிற்கிறார்கள் சிலர்!

நான் அறிந்ததைத் தெரிவித்திருக்கிறேன். தெரியாதவை எத்தனையோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்துச் சிந்திக்க...



பக்தாத் நகரத்தில் வாழ்ந்த ஒரு மனிதர் சிக்கனமாக வாழ்வதில் பெயர் பெற்றவர். ஒருநாள் அவர் தொழுகைக்காக பள்ளிவாசல் நோக்கிப் போகும்போது வழியில் ஏதோ ஞாபகம் வரவே வீட்டை நோக்கித் திரும்பி வந்தார். வந்தவர் கதவைத் தட்டி மனைவியை அழைத்தார். மனைவி உள்ளேயிருந்து கதவைத் திறக்க ஆயத்தமானார். அதை அறிந்த அந்த மனிதர், 'வேண்டாம், வேண்டாம் கதவைத் திறக்காதே! நீ அடிக்கடி கதவைத் திறந்தால் தாழ்ப்பாள் தேய்ந்துவிடும்'' என்றார்.

அதைக்கேட்ட மனைவி, ''அப்படியானால் உங்கள் காலில் உள்ள செருப்பு தேயமாட்டாதா?'' என வினவினாள். அந்த மனிதரோ 'நீ அதைப்பற்றிக் கவலைப்படாதே! அது எனது கக்கத்தில் பத்திரமாக இருக்கிறது!' என்றார்.

எழுநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஷேக் சஅதியின் கதைக் கருவூலத்திலிருந்து.

* * * * *

குடிகாரன் ஒருவன் நன்றாகக் குடித்துவிட்டு, ஒரு ஆட்டோ ரிக்ஷாக்காரனிடம் தன்னிடம் தன்னை ஒர குறிப்பிட்ட இடத்துக்கு கொண்டு விடச் சொன்னான். ஆட்டோரிக்ஷாக்காரன் வரமறுத்தான். காரணம் அவன் எந்த இடத்துக்குப் போகவேண்டுமென்று சொன்னானோ அதே இடத்தில் தான் அவன் நின்றான். ஆனால், குடிகாரன் மீண்டும் பலவந்தமாக வற்புறுத்தவே அவனை வண்டியில் ஏற்றிவிட்டு, இஞ்சினை மட்டும் ஸ்டாட் செய்தான் டிரைவர். கியர் ஆக்ஸிலேட்டர் எதையும் போடவில்லை. ஆட்டோ அதே இடத்தில் தான் நின்றது. இஞ்சின் மட்டும் ஓடிக்கொண்டிருந்தது. பிறகு இஞ்சினை நிறுத்திவிட்டு குடிகாரனை இறங்கச் சொன்னான். இறங்கி, காசைக் கொடுத்துவிட்டு குடிகாரன், ''இனிமேல் இவ்வளவு வேகமாகப் போகாதே'' என்றான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லா தெருவிளக்கு வெளிச்சத்தில், எதையோ தேடிக் கொண்டிருந்தார். அவர் மீது அனுதாபம் கொண்ட சிலர் 'எங்கு தொலைத்தீர் முல்லா'! எனக் கேட்க எரிச்சலோடு இருந்த முல்லா, 'வீட்டில்' என்றார். 'வீட்டில் தொலைத்தீர் என்றால் இங்கு ஏன் தேடுகின்றீர்' என்று கேட்டபோது முல்லா அமைதியாகச் சொன்னார்; ''வீட்டில் வெளிச்சம் இல்லை; இங்கு-தான் வெளிச்சம் உள்ளது!' என்றார்.

இந்த 'முல்லா' பற்றி இன்னொரு பக்கத்தில் விபரமாக அறிந்து கொள்க.

* * * * *

இஸ்லாமிய கலீபாக்களில் ஒருவரான ஹஜ்ரத் அலி அவர்களிடம் ஒரு யூதன் ஓடோடி வந்தான். அப்பொழுது ஹஜ்ரத் அவர்கள் தொழுகைக்காகப் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

''மக்கள் தலைவ! ஒரு சந்தேகம். இஸ்லாம் ஒரு பகுத்தறிவு மதம் என்கிறீர்கள். அதே சமயத்தில் எல்லாவற்றையும் 'விதி' என்ற ஒன்று தனது அமைப்புகளில் அடங்கியிருப்பதாகவும் நம்புகிறீர்கள். இது முரண்பாடால்லவா? விதி என்றால் என்ன? பகுத்தறிவு என்றால் என்ன? விளக்கம் தாருங்கள்'' என்று கேட்டான் வந்த யூதன்.

ஹஜ்ரத் அவர்கள், ''இதற்குத்தானா இவ்வளவு அவசரமாக ஓடிவந்தாய்? தொழுதுவிட்டு வந்து பதில் சொல்லுகிறேன்'' என்றார்கள். யூதன் இசையவில்லை. ''தந்திரமாகத் தப்பிக்கவா பார்க்கிறீர்கள் இப்பொழுதே பதில் சொல்லுங்கள்'' என்றான்.

ஹஜ்ரத் அலி அவர்கள் ''சரி, வலது காலைத் தூக்கு'' என்றார்கள். யூதன் தனது வலது காலைத் தூக்கியபடி நின்றான்.

''சரி, இப்பொழுது நீ தூக்கிய காலைக் கீழிறக்காமலே இடது காலையும் தூக்கு'' எனறார்கள்.

''அது எப்படி முடியும்? முடியாதே'' என்றான் யூதன். ''உன்னால் ஒற்றைக் காலை மட்டுமே தூக்க முடிந்தது. அதுதான் உனது பகுத்தறிவு. மற்றொரு காலைத் தூக்காமல் திண்டாடுகிறாயே அதுதான் விதி.'' என்று கூறிவிட்டு ஹஜரத் அலி அவர்கள் நடையைத் தொடர்ந்தார்கள்.

* * * * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸித்ரத் எனும் இலந்தை!

இலந்தை பட்டி தொட்டி எல்லாம் பரவலாகத் தெரிந்த பெயர். இலந்தைப் பழத்தைப் பற்றியோ சொல்லவே வேண்டாம்.

'ஸித்ரத்' - இதன் அறபுச் சொல்.

அது சாதாரணமானதல்ல. அல்-குர்ஆனிலேயே அழகிய முக்கியத்துவம். குறா அந்-நஜ்ம் 13-16 வசனங்கள் தெரிந்தோர் 'ஸித்ரதுல் முந்தஹா' என்ற இலந்தை மரத்தையும், "அதன் சமீபத்திலேயே 'ஜன்னத்துல் மஃவா' என்ற சுவர்க்கம் இருக்கின்றது" எனச்சொல்லப்பட்டுள்ள தகவலையும் நினைவு கொள்வர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏழுவான் கடந்து விண்ணேகிய பொழுது சுவர்க்கத்திற்கு அணித்தாய் நின்ற அந்த மரத்தினேயே சென்றடைந்தார்கள்!

அது உஷ்ணப்பிரதேச மரம். தண்டு-வேர்-இலை-காய்-பட்டை அனைத்துமே, மனித இனத்திற்குப் பயன் அளிக்க உண்டானவை. சித்த வைத்தியத்தில் நிறைய.

பூரான், நட்டுவக்காலி, தேள் போன்றவற்றினால் விஷமேறியவர்கள் இலந்தை இலையை பன்னீர் விட்டரைத்து கடிவாயில் தடவ குணம், குணம்!

கை, கால் போன்ற உறுப்புகளில் வீக்கம் ஏற்பட்டாலும் இலந்தை இலைச் சாற்றைப்பூசி குணம் காணலாம்.

கிருமிகளை அழித்தொழிக்க இலந்தை இலைச் சாற்றை தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

சில ஊர்களில் மையத்துக்களைக் குளிப்பாட்டிய பின்னர் அதன் சாறு கலந்த தண்ணீரைத் தெளிப்பது கிருமிகள் உற்பத்தியாகும் வாய்ப்பைக் குறைக்கத்தான்!

அனைத்தையும்விட ஒரு சங்கதி - ஸித்ரத் என்னும் இலந்தை இலை மூலம் மகப்பேற்றுக்கு வழி செய்யலாம் என்பதே! ஒரு சித்த வைத்தியரைப்பிடித்து விசாரியுங்கள். விளக்கம் கிடைக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த 'வேந்தர்'

## ஆட்டுத்தோலில் துயில் கொள்ள விரும்பினார்!

நல்ல சொகுசான மெத்தை இல்லாவிட்டால் நல்லுறக்கம் இல்லை நமக்கு. கட்டில் கிடைக்கும்வரை கால்களைக் கட்டிப்பிடித்து குந்திக்கிடக்கும் பிறவிகள் நாம்.

1400 ஆண்டுகளுக்கு முன் ஒரு 'வேந்தர்'. ஆனால் அறபு நாட்டின் 'முடிசூடா மன்னர்'.

அவருக்கு ஆட்டுத்தோலிலேயே படுத்துத் துயில்கொள்ள படு ஆசை. அந்தத்தோலுக்கு அடியிலே ஈச்சமரத்து நார்கள் நிரப்பப்பட்டிருக் கும்.

## ஒரே குடும்பத்தில் கவிமணிகள் பலர்

அந்த ஊரில் அந்தக் குடும்பத்தில் முஹம்மது சாலிஹு ஆலிம் அவர்கள் மட்டுமல்ல புலவர்.

பாருங்கள். மாஹும் ஆலிம் புலவரது ஒரு மகனார் (இளையவர்) அகமது சம்சுதீன், 'ஆலிம் செல்வ'னாக நம் மத்தியில்!

தந்தையாரை அச்சொட்டாக உரித்தெடுத்து ஹதீஜத்து சஞ்சீதாவும் கவிஞரே.

'வாப்பா – மகள்' இருவருடைய கவிதைத் தொகுப்புகளையும் தனித்தனியே மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்டுள்ளது.

ஆலிம் புலவரது மூத்த மகனார் டாக்டர் அல்ஹாஜ் ஷெய்கு நூர்தீன் கவிதைப் பக்கம் போகாவிட்டாலும், தன்னருமைச் செல்விகளை (ஸாலிஹத்து ஹசீபா – ஃபாத்திமா ஹஃபீசா) பாடல் இயற்றிப் பாருங்கள் என ஊக்குவித்து வருகிறார்.

அதேபோல, இன்னொரு மகனாரான அல்ஹாஜ் ஹுசைன் அப்துல் காதரும் தன் செல்வி ஹதீஜத்து பஜீலாவை கவிஞராக்கி மகிழ்ந்துள்ளார்.

இப்படி அந்த ஊரில் பெண் புலவர்கள் அதிகமாகிக் கொண்டே போகிறார்கள். ஒரு காலத்தில் ஸுபிப் பெண் கவிஞர் செய்யது ஆசியா உம்மாவைத் தந்த ஊரல்லவா அது! நடக்கத்தான் செய்யும்.

கீழக்கரை ஊரின் பெயர் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை அவரதுதுணை ... ருள் ஒருவரே பதிந்து வைத்துள்ளார்.

ஏன் இப்படி என்றால் சாதாரண ஒரு தொழிலாளி, ஓர் ஏழை, எவ்வாறான ஒரு படுக்கையில் படுத்துறங்க முடியுமோ அப்படியே தானும் படுக்க ஆசை என்ற விளக்கம் வைத்திருந்தார்கள்.

''ஒருமுறை நான் அவர்கள் சமூகம் போயிருந்தேன். அப்பொழுது அவர்கள் ஒரு பாயில் துயின்று கொண்டிருந்தார்கள். அப்பாய் அழுத்திய அடையாளங்கள் அன்னாரின் திருமேனியில் பதிந்திருந்தன. அதைக்கண்ட எனக்கு அழுகை வந்துவிட்டது. ''ஏன் அழுகிறீர்?'' என என்னைக் கேட்டபொழுது, ''உரோமாபுரி மாமன்னர்களும், பாரசீக அரசர்களும் விலை உயர்ந்த பட்டு மெத்தைகளில் படுத்துறங்க, தாங்களோ சாதாரண இந்தப்பாயில் படுத்து உறங்குகிறீர்களே'' என்று பதிலளித்தேன். அப்பொழுது அவர்கள் சொன்ன பதில், ''இதற்காக அழவேண்டியதில்லை. இவ்வுலகம் அவர்களுடையது. எமக்கு மறு உலகம் உண்டு''. எனக் கூறினார்கள் என்கிறார் இப்னு மஸ்ஊது(ரலி) அவர்கள்.

நான் எந்த 'வேந்தரை' விவரித்தேன் எனப்புரிந்திருக்கும் அபிமானிகளுக்கு. மேற்கொண்டும் விவரம் அவசியமில்லை என முழுமனத்துடன் நம்புகின்றேன்!.

### அத்தாவும வாப்பாவும்

தமிழகத்தின் சில பகுதி முஸ்லிம்கள் தந்தையை ''அத்தா'' என்பர். இது துருக்கி மொழி வழிவந்தது.

''வாப்பா'' என்பது அறபு ''அபா'' என்பதிலிருந்து மருவியது. 'பாவா'வும் அப்படியே.

### செல்வம்-கல்வி:

-அது, நபிமார்களிடமிருந்து நாம் பெற்ற வாரிசுச் சொத்து செல்வமோ பணக்காரர் களிடமிருந்து கிடைத்தது

- அதற்குக் கப்றுக்குள் செல்ல இயலும். செல்வமோ தன்னை வைத்திருப்பவர் மரித்ததும் உலகத்திலேயே தங்கி விடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவலை, பெருங்கவலை!

## தஞ்சைச்சீமை ஒருத்திக்கு......

தஞ்சை மாவட்டத்தில் தர்காக்களுக்குப் பஞ்சமே இல்லை. தடுக்கி விழும் இடமெல்லாம் தர்காக்கள்! தர்காக்கள்!

அல்லாஹ்வின் நேசர்களான அந்த நாதாக்கள் எப்படி வாழ்ந்தார்களோ அப்படி நாமும் வாழ்ந்து காட்டவேண்டும் என்பதை நினைக்காமல், ஒரு தர்காவில் விசேஷம் என்றால் போதும்.

போட்டிப்போட்டுக்கொண்டு கூட்டம் கூட்டமாகப் புறப்பட்டு விடுகிறார்கள் தாய்மார்கள்! கூட்டம் அலை மோதுகிறது!.

பிற மதத்தவர்கள் எவற்றையெல்லாம் தங்களின் ஆலயங்களில் விழா என்ற பெயரில் நடத்தி வருகின்றார்களோ அவற்றை அப்படி அப்படியே நம்மவர்களும் நடத்துகிறார்கள். பெயர் மட்டுந்தான் கொஞ்சம் வித்தியாசம். செயல்முறையில் எந்த வேறுபாடும் கிடையாது.

'கப்ரை ஸியாரத் செய்கின்ற பெண்களை அல்லாஹ் சபிப்பானாக' என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த ஹதீஸை பல இமாம்கள் ரிவாயத் செய்திருப்பதாக மிஷ்காத் என்ற கிரந்தத்தில் காண்கின்றோம்.

அல்லாஹ்வின் சாபம் உங்களுக்கு வேண்டுமா, தாய்மார்களே? அல்லது அவனது அருள் வேண்டுமா?

அவ்லியாக்களின் துஆவைப் பெறச்செல்கிறோம் என்று நினைத்துக்கொண்டு அல்லாஹ்வின் சாபத்தை அல்லவா பெற்றுத் திரும்புகின்றீர்கள் அன்னையரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி, மூன்று ஆண்டுகளுக்கு முன் (1.3.92) ஒரு சிறுமி அய்யம்பேட்டை-சக்கராப்பள்ளி 13வது அல்-குர்ஆன் மாநாட்டில் ஆர்த்தெழுந்தாள். என் காதார நேரில் கேட்டேன். அந்த அற்புதப்பிரசங்கி செல்வி நுஸ்ரத் ஹீனா:

அவள் உரைகேட்டு அன்னையர் திருந்தினார்களா? இப்பொழுது 1996ல் நிலைமை எப்படி? ஊஹூம்! 'சமரசம்' - டிச.16-31' 95 இதழில் காணப்படும் தகவலின் படி, ஒரு தர்காவில் தஞ்சை மாவட்ட 'ஆச்சிகள்' அனைவரும் தங்கம் அள்ளிச் சூடி வந்திருந்தனராம்!.

## அல்-அக்ஸாவுக்கு அபாயம், அபாயம்!

அபாயம் இன்று நேற்றா?

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தொடர்நாவல்!

கலீபா உமர் (ரழி) அவர்களின் காலத்தில் பைத்துல் முகத்தஸ் முஸ்லிம்களின் ஆட்சியில் வந்தது. பின்னர் சிலுவை வீரர்கள் ஹிஜ்ரி 490ல் கைப்பற்றினர். 588-ல் ஒரு சுல்தான் ஸலாஹுத்தீன் மீட்டார்.

கி.பி. 1967 வரை முஸ்லிம்களின் கையில் இருந்தது.

அப்புறம் யூதர்கள் கைப்பிடிக்குள். 1969-ல் தீ!

தெரியாதது இது: இந்த யூத எஹூதிகள் இருக்கிறார்களே, அவர்களுடைய முக்கியப் பொழுதுபோக்கு: எதையாவது எங்கேயாவது தோண்டி, புதைபொருள் ஆராய்ச்சி என்று சொல்லிக் கொள்வது!

அந்தவகையில் அல்-அக்ஸா மஸ்ஜிதைச் சுற்றிலும், அதற்கு அடியிலும் தீவிரமான தோண்டுதல்! இது பலகாலமாக!

இதனால் அஸ்திவாரத்தின் பலம் போய் விடுமோ என இப்பொழுது அஞ்சப்படுகிறது.

பலத்த எதிர்ப்பு உருவாகியிருந்தாலும், தோண்டி, தோண்டி மஸ்ஜிதை ஆட்டம் காண வைப்பதில் முனைப்பு!

பலஸ்தீனத்துச் சகோதரர்கள் பதைத்துப் போய் இருக்கிறார்கள்.

(ஓர் அடிக்குறிப்பு: இதை நான் எழுத்தில் பதிப்பது 1996 ஜனவரியில். கணனியில் பெப்ரவரியில். நீங்கள் படிப்பது மார்ச்சில். இந்த இடைப்பட்ட காலத்தில் ஏதாவது நல்ல செய்தி பெற துஆக்கள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைத்தீவு நாளேடு!
## மொழியின் சாயலைக் கண்டு பிடியுங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'அஜ்வஹ்' பழம் தெரியுமா?

கொழும்பில் எனது நீண்டநாள் வாசக அபிமானி அல்ஹாஜ் எம்.எம். ஃபாயிக். தற்சமயம் எங்கள் குடும்ப நண்பர். முதல் முஸ்லிம் தினசரியான **'இஸ்லாம் மித்திரன்'** பரம்பரையைச் சேர்ந்தவர். இவர் மக்கா - மதீனா போகும் பொழுதெல்லாம் என்னை நினைக்காதிருப்பதில்லை. ஏதாவது அபூர்வப் பொருள் கொண்டு வராமலுமிருப்பதில்லை.

அப்படி கடந்தாண்டில் அஜூஹ் பழம் கொண்டுவந்தார்.

மிரண்டு விடாதீர்கள்: பேரீச்சம் பழமே!

அவர் கிலோ கணக்கில் கொண்டு வரவில்லை. இரண்டே இரண்டு!

ருசித்தபொழுது இதுவரையில் தெரியாத ஒருசுவை தெரிந்தது.

''இது, பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் விரும்பியது சொர்க்கத்தினுடையது. விஷத்துக்கும் மாற்று உண்டு'' என்றார் ஃபாயிக் ஹாஜி.

''கேளுங்கள் இதை! ஒருவர் அஜூஹ் வகைப் பேரீச்சையில் ஏழு காய்களை காலையில் உண்டால் அன்று முழுதும் விஷம் ஏறாது. எந்த மந்திர தந்திர சக்தியும் செல்லுபடியாகாது'' என மேலும் தகவல்.

இது மர்ஹூம் ஆர்.பி.எம். கனி தொகுத்த ஒரு நூலிலும் இருக்கிறது. பணிவோடு நினைப்பூட்டினேன். ஏற்றார்.

இனி, ஹஜ்ஜுக்குப் போகிறவர்கள் அஜூஹ் பழத்தைத்தேடி வாங்குங்கள். ஆனால் அதிகவிலை உள்ளதும் அதுதான்.

பொதுவாக, கண்நோய் கண்டவர்கள் தின்னக்கூடாதென நபி (ஸல்) எச்சரித்துள்ளார்கள். அதேநேரத்தில் அதிதிகளை அவர்கள் உபசரிப்பது ஏழு பழங்கள் வழங்கி. மதீனாவில் காய்க்கும் ஏழு பேரீச்சங்காய்களை விதையுடன் இடித்துத்தின்றால் நெஞ்சுவலிக்கு நல்லது என்பதும் அவர்கள்தம் ஆலோசனை.

இன்று, மதீனாப்பழங்களை மிஞ்ச எதுவுமில்லை. அங்கு மட்டும் இருபத்திரண்டு வகைகள் உள்ளனவாம்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது வழக்கமொன்றுக்கு அமெரிக்காவில் மௌசு!

முஸ்லிம் சகோதரர்கள் மத்தியில் அவர்கள் இளவயதினருக்குச் செய்யும் ஒரு கடமை இருக்கிறது.

அதைக் 'சுத்னா' என்பர். 'சுன்னத்துச்செய்தல்' என்றும் சொல்வர். 'விருத்தசேதனம்' எனவும் நல்ல தமிழைப் பயன்படுத்திக் குறிப்பிடுவர்.

இவ்விடயம் உடல் உறுப்பு சம்பந்தமானது. அதுவும் 'உயிர் உறுப்பு' என வர்ணிக்கப்படுகின்ற ஆண்களின் மர்ம அவயவத்தில் நடத்தப்படுகின்ற ஒருசிறு சத்திரசிகிச்சை. 10-12 வயது தாண்டி விடுவதற்குள் செய்துவிட வேண்டுமென்பது ஒரு கட்டாயம்.

முஸ்லிம்களின் இந்த நடைமுறை வழக்கத்தை இப்பொழுது படுவேகமாக அமெரிக்கா கைக்கொண்டுள்ளது!

1971-ல் அந்த வல்லரசு கொண்டிருந்த கொள்கைக்கும் இப்பொழுது 25 ஆண்டுகளுக்குப்பிறகு அது நடந்துகொள்வதற்கும் பாரிய வித்தியாசங்கள். சவூதி அரேபிய நெருக்கமும் ஒரு காரணம்.

இந்த விருத்தசேதனமுறையை இளவயது ஆண்பிள்ளைகளுக்குச் செய்துவிடுவதனால், அதிக அபாயத்தையும் அளவற்ற துன்பத்தையும் தரக்கூடிய சிறுநீரக நோய்கள் மற்றும் சிறுநீர்க்குழாயைப் பாதிக்கும் வியாதிகள் முதலியவற்றை பெருமளவுக்குத் தடுத்துவிட முடியும்.

ஓர் ஆய்வில் விருத்தசேதனம் செய்து கொள்ளாத சிறுவர்கள், செய்து கொண்டவர்களைப் பார்க்கிலும் 11 தடவை அதிகமான அளவில் சிறு நீர்க் குழாய் சம்பந்தப்பட்ட நோய்களில் பாதிக்கப்படும் வாய்ப்புடன் இருக்கக் காணப்பட்டார்கள்.

''விருத்த சேதனம் பலத்த மருத்துவ ரீதியான நன்மைகளையும் பலன்களையும் கொண்டுள்ளது'' என ஒரு குழந்தை நல கல்வி நிலையம் எடுத்துக் காட்டுகிறது. பூர்வீக இஸ்ரவேலர் (யூதர்) இதைக் கடைப்பிடித்து பல நன்மைகளை அடைந்தார்கள். உலக முஸ்லிம்கள் நூற்றுக்கு நூறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நின்ற நிலையில் நீர் குடித்தால் நீரிழிவு, நோயும், வயிற்றில் வலியும் ஏற்படுமென வைத்தியர்க்ள பலரும் ஆய்ந்து கண்ட முடிவு.

ஆனால் நீரிழிவு, நோய்க்காரர்களுக்கு இதை உணர்த்தும் வைத்தியர்கள் ரொம்பக் குறைவு.

மேலும், நின்றவாறு தண்ணீர் அருந்துவதால் இரைப்பையும், நரம்புகளும் பலஹீனம் அடையுமெனப் பலரும் ( மருத்துவர்கள் ) அபிப்ராயப்படுகின்றனர்.

ஆனால் அவர்கள் இப்படியெல்லாம் அபிப்ராயப்படுவதற்கு முன்பேயே இஸ்லாம், நபி (ஸல்) அவர்கள் மூலமாகவும், மற்றும் லுக்மான் ஹக்கீம், இமாம் கஸ்ஸாலி (ரஹ்) ஆகிய பல பெரியவர்கள் மூலமாகவும் தண்ணீர் பற்றிய பல அறிவுறுத்தல்களை அள்ளி வழங்கியுள்ளன.

''என்றும் உடல் நலத்துடன் இருக்க என்ன செய்ய வேண்டும்?'' என லுக்மான் ஹகீமிடம் அவர் புதல்வர் கேட்டபோது, ''எப்பொழுதும் வெந்நீரைக்குடி. குளிர்ந்த நீரிலேயே குளி'' என்று பதில் வந்தது.

உணவுடன் தண்ணீர் குடிப்பதைவிட உணவு ஜீரணித்த பின் குடிப்பதே மிகவும் நல்லது என ஷைகுரயீஸ் என்பாரும்

உணவு உண்ணுமுன் தண்ணீர் குடிப்பதால் இரைப்பையின் உஷ்ணம் அதிகரித்து உடலைபருக்க வைத்துவிடும் என வேறு முஸ்லிம் வைத்தியர்களும்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு, உண்ணுகையில் இடையில் தண்ணீர் குடிப்பது உடலுக்குக்கெடுதி. உணவு உண்டபின் தூக்கத்தில் எழுந்து தண்ணீர் குடித்தால் உடலுக்கு இயற்கையாகத் தேவைப்படும் உஷ்ணம் தணிந்துவிடும். குளித்தவுடன் தண்ணீர் குடிக்கக்கூடாது. பழங்களைத் தின்றபின் தண்ணீர்குடிப்பதால் நாக்கில் காயம் ஏற்படும் – என இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களும் எடுத்துக்காட்டியுள்ளனர்.

தண்ணீர்பாத்திரங்களைத் திறந்து வைக்கக்கூடாது என்றும் கட்டளையிட்டிருக்கிறார்கள் நபி பெருமானார் (ஸல்) அவர்கள்.

''ஒவ்வொரு ஆண்டிலும் ஓர் இரவில் ஒரு கொடிய நோய் இறங்குகிறது. அது ஏதாவதொரு பாத்திரத்தில் அவசியம் விழுந்தே தீருகிறது. திறந்திருக்கும் தண்ணீர்ப் பாத்திரம் நல்ல வசதியாக அமைகிறது'' என்பது அவர்களுடைய அற்புதமான தகவல்.

அதுசரி! தண்ணீர் பருகுவதில் நபிகளார் (ஸல்) அனுஷ்டித்த முறைகள் என்னென்ன?

நீர் அருந்தும் போது, இடையிடையே நிறுத்தி,மூச்சை வெளியே விட்டு, விட்டு நீர் அருந்தும் வழக்கமுடையவர்களாக விருந்தனர். ஒரே முறையில் தண்ணீரைக் குடிக்காமல், இரண்டு அல்லது மூன்று மிடராக இடை விட்டுக் குடிப்பார்கள். அவ்வாறு பருகும் போது, சுவாசத்தை வெளியே விட்டுக் கொள்வார்.

நீரருந்தும் போது நபிகள் நாயகமவர்கள், மூன்று முறை சுவாசம் விட்டுக் கொள்வர். இவ்வாறு நீர் பருகுவது இரம்மியமானதாகவும் தாகத்தை நன்கு தீர்ப்பதாகவும் இருக்கின்றது என்று அன்னார் கூறுவர் - என அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் அறியத் தருகிறார்கள்.

நாம் வெளியே விடும் சுவாசத்தில் கரியமலவாயு கலந்திருப்பதால், அதனைப் பருகும் நீரில் விடுவது ஆபத்தானது என்பது மருத்துவர் கருத்து, சுவாசத்தை வெளியே விட்டு மிடர் மிடராக பானங்கள் அருந்துவதே சரி .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமிரேட்டில் கன்னிப் பெண்கள் அதிகரிப்பு!

ஐக்கிய அரபு எமிரேட்டில் பெண் வீட்டார் 32 லட்சத்துக்கும் அதிகமாக வரதட்சணை கேட்பதால் ஆண்கள் பலர் வெளிநாட்டில் பெண் பார்த்து திருமணம் செய்து கொண்டு வருகின்றனர்.

இதனால் உள்ளூர்ப் பெண்கள் பலர் கன்னிகளாகவே காலம் கடத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடர்ந்தால் அரபு நாட்டிலுள்ள சில இனங்கள் மறைந்து விடும் அபாயம் உள்ளது என்பதை உணர்ந்த அந்நாட்டு அரசு வரதட்சணை கொடுக்க முடியாத ஆண்களுக்காக 93ம் ஆண்டில் திருமண நிதியை ஏற்படுத்தியது.

தற்போது இங்கு வரதட்சணை விகிதம் அதிகரித்துள்ளது. திருமண செலவுகளும் அதிகரித்துள்ளன.

பெரும்பாலான திருமண வரவேற்புகள் பெரிய ஓட்டல்களில் நடைபெறுகின்றன. திருமண விருந்தின்போது ஒவ்வொருவருக்கும் பரிமாறப்படும் உணவு வகைகளுக்கு 450 ரூபாய் முதல் ஆயிரத்து 600 ரூபாய் வரை செலவாகிறது. ஒவ்வொரு திருமணத்துக்கும் குறைந்தது 500 பேராவது வருகிறார்கள். இதனால் திருமணச் செலவுகள் பல லட்சங்களைத் தாண்டுகின்றன.

இதை புரிந்த ஐக்கிய அரபு எமிரேட் அதிபர் திருமண நிதியை இரண்டு மடங்காக உயர்த்தியுள்ளார்.

(எப்படி தலைகீழாககிப் பார்த்தாலும் கன்னிப் பெண்கள் கரைசேர எங்கேயும் முடியாது போலிருக்கிறதே!)

## அற்புதமான ஆலோசனைகள் நான்கு!

- வீட்டில் வாகிஆஸூறா ஓதின் வறுமை ஓடிவிடும்.
- இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் அலிப்லாம் ஸஜ்தா தபாரகல்லதீ ஸூராக்களையும் தினமும் யாஸீனையும் ஓதி வருவீர்களாக!
- ஆண்கள் தப்பித் தவறியேனும் தங்கம் அணிந்து விடாதீர்கள்! தங்கம் அணிந்த உடம்புகள் சுவனத்தின் வாடையை காணவே காணாது!
- ஹஜ் விதியானவர்கள் எக்காரணம் கொண்டும் அதனைத் தள்ளிப் போடாதீர்கள்! ஆபத்துக்கள் மூன்றுண்டு. பொருள் குன்றிவிடலாம். தேக ஆரோக்கியம் நீங்கிவிடலாம். உயிரே பிரிந்து விடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்று முதிய புத்தக நிலையங்கள்

- சென்னை மாநகரில் ஒரு **ஷாகுல் ஹமீதிய்யா!**
- திருநெல்வேலியில் ஒரு **முன்னேற்றம்!**
- மதுரையில் ஒரு **குர்ஆனிய்யா!**

மூன்றுமே முதுமையான முஸ்லிம் புத்தக நிலையங்கள் தமிழகத்தில்.

ஷாகுல் ஹமீதிய்யாவின் ஸ்தாபிதம் 1900! இன்னும் நூற்றாண்டுகாண நான்கே ஆண்டுகள் தான். இப்பொழுது நிறுவனத்தை நடத்தும் பட்டதாரிப் பேரனார் அதனை கோலாகலமாக நடத்த நாள் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இன்ஷா அல்லாஹ்.

முன்னேற்றம் புக் டிப்போவின் ஆண்டைக் கண்டு பிடிக்க நேரமில்லாது போய் விட்டது. இருந்தாலும் என்ன, நிறுவனர் 'ஜமாஅத்துல் உலமா' ஆசிரியர், மௌலவி மீ.இ.மு. அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிப் அவர்களது முதிய வயதுதான் அதற்கும்!

குர்ஆனிய்யா புக் டிப்போவுக்கு அறுபத்தோறாவது வயது. என்றாலும், அதன் சகோதரர்களுக்கு 'நெருப்பு சுட்டெரித்தாலும் நெஞ்சுநிமிர்த்தி நடைபோட்டவண்ணம்.!

திருச்சி, ரசூல் நியூஸ் ஏஜன்சியையும், தஞ்சை, காஜியார் புக் டிப்போவையும் நாம மறக்கமுடியாது. அவற்றுக்கும் வரலாறு இருக்கிறது.

அல்லாஹ், அவர்களது சேவைகளை அங்கீகரிப்பானாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவே உயரிய பண்பு!

நம்மில் பலர் தாங்கள் கூறியது தவறு என்பதை நன்றாக உணர்ந்த பிறகுகூட அதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். தாங்கள் சொன்னதுதான் சரி என்பதை நிலைநாட்ட முயலுவார்கள்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களது உயரிய பண்புக்கு ஈடுமில்லை, இணையுமில்லை! இங்கே ஒரு சம்பவம்:

முஹம்மது நபி (சல்) அவர்களிடம் அஸ்ஹாபி(தோழர்) ஒருவர், ''என்னுடைய ஈச்ச மரம் ரொம்ப நாளாகக் காய்க்கவே இல்லை. நன்றாய்க் காய்க்கும் ஈச்ச மரத்தின் பட்டைகளை வெட்டி வந்து இந்தக் காய்க்காத மரத்துடன் இணைத்துக் கட்டி வைத்தால் நன்றாய்க் காய்க்கும் என்கிறார்களே, சரிதானா அது?'' என்று கேட்டார்.

அதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள், 'அப்படி இருக்காது' என்று சொல்லிவிட்டு, 'வேண்டுமானால் அதுபோல் செய்து பாருங்களேன்,' என்று கூறினார்கள்.

பிறகு அவர், அதே போல் செய்து பார்த்ததில் காய்க்காமலிருந்த அவருடைய அந்த ஈச்ச மரமும் நன்றாகக் காய்க்க ஆரம்பித்து விட்டதாம். இந்த விஷயத்தை அண்ணல் நபி அவர்களிடம் தெரிவித்தபோது, அதை அவர்கள் கொஞ்சங்கூட ஆட்சேபிக்காமல், 'இந்த விஷயம் எனக்குத் தெரியாமல் போனது என் தவறுதான்'' என உடனே ஒத்துக் கொண்டு விட்டார்கள்!.

## மஹர் - இப்படி இருந்த காலமும் உண்டு

ஈராக்கின் ஆளுனராக இருந்த அப்துல் ஹமீத், சேகரிக்கப்பட்ட ஸகாத் பணத்தை உரியவருக் கெல்லாம் நியாயப்படி பங்கு வைத்தார்கள். அப்பொழுதும் மேலதிகமாக பணம் மீதியாகி விட்டது. அதனை என்ன செய்வதென கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்களிடம் ஆலோசனை கேட்ட பொழுது கிடைத்த பதில்:

''மஹர் கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஆண்களைத் தேடிப்பிடித்து அவர்களிடம் கொடுத்து விடுங்கள்''.

ஆதாரம்: கிதாபுல் அம்வால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதங்கள் அனைத்திலும்...

*"ஏதஸ் மின்னந்தசே மிலேச்ச*
*ஆச்சர்ய ஸமன் வித*
*மகாமத' இதிக்கி யாத"*

- வியாசரின் பவிஷ்ய புராணம்.

*ஈஷமான உமஸ்மிறுத... மாமஹே*

- அதர்வண வேதம்

*அனஸவந்தா ஸக்பதிர் மாமஹே*

- ரிக்வேதம்

"நான் போகிறது உங்களுக்கு பயன்படுவதா யிருக்கும்; நான் போகாதிருந்தால் தேற்றரவாளர் உங்களிடத்தில் வாரார். நான் போவேனாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்"

- யோவான்

"'வேத நூலானது கல்வி அறிவற்ற அவருக்கு அளிக்கப்பட்டு ஓதுவீராக!' என்று கூறப்பட எனக்கு ஓதத் தெரியாதே என்று அவர் கூறுவார்."

- ஏசாயா

"என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன். நான் அவருக்கு கற்பிப்பதை எல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார்"

உபாகமம் (மூசா நபி அலை)

### அல்லாஹ் - இந்த இரண்டிலும்!

தொல்காப்பியத்திலும் "எல்" என்னும் சொல்லால் அல்லா குறிக்கப்படுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். பைபிளில் 'எல்லோஹிம்' என்று கூறப்பட்டுள்ளது. 'அல்லேலோ' என்னும் வார்த்தையும் 'அல்லா' எனும் சொல்லின் மரூஉதான் என்று பைபிள் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகப்பின் மறுபக்கப் பெருமை!

அல்-குர்ஆனின் அதிசயப்பிரதிகள் சிலவற்றுடன் முகப்பின் மறுபக்கம் காட்சி அளிக்கிறது.

அவை, அங்கே பார்வையிலிருப்பது இந்த நூலுக்கு ஒரு பெருமை.

இப்பொழுதெல்லாம் நாள்தோறும் உலக இதழ்களில் அதிசயமான அல்-குர்ஆன் பிரதிகள் அவரிடமும் இவரிடமும் இருக்கின்றன என்ற செய்திகள் படத்துடனே ஆதார பூர்வமாகவே வருகின்றன.

இப்படி வேறெதற்கும் தகவல்கள் அடிக்கடி வருவதில்லை.

சிங்காரச் சீனத்தில் ஒரு வயோதிப விவசாய மூதாட்டியிடம், உலகின் சின்னஞ்சிறு திருமறை இருப்பதாக இரண்டரை ஆண்டுகளுக்குமுன் 26.7.93ல் சீன இதழொன்றே செய்தி போட்டிருந்தது!

அந்த அன்னை, யாங்கி நகரத்து முஸ்லிம் சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர். அவர் பாதுகாத்தது 2.7 சென்டிமீட்டர் நீளமும், 1.3. சென்டிமீட்டர் அகலமும், ஒரு சென்றி மீட்டர் கனமும் கொண்டது. முழுக்குர்ஆனும் அடக்கம். மொத்த நிறை 4.9 கிராம்கள்.

இச்செய்திபோல் சுவீடனிலிருந்தும் ஒரு தகவல்.

அதுவும் 2.7 சென்றிமீட்டர் நீளமுடையயதே! அவரும் தன்னுடையதே உலகின் சிறிய குர்ஆன் எனக்கூறிக்கொண்டார். சவூதியில் விலையை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார். விற்றாரா என்பதற்கு இன்னும் செய்தி வரவில்லை.

நம்ம சிவகாசியில் இருக்கிற சையது சுலைமான் என்கிற அரசு மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் கூட தன் பங்குக்கு ஒரு தகவல் வைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரிடமும் 2.7 செ.மீ. உயரமும், 1.8 செ.மீ அகலமும் கொண்ட குர்ஆன் ஒன்று உள்ளதாம். "ராணி" சஞ்சிகையிலும் படத்துடன் செய்தி வந்தது. கனம் எவ்வளவு என்பது குறிப்பிடப்படவில்லை.

ஆனால், சிவகாசிக்காரரைத் தோற்கடிக்கும் தகவலை ஒரு சென்னைவாசி வைத்திருப்பதாக ஓர் அறபு நாளேட்டில் படத்துடன் செய்தி.

(நமது முகப்பின் மறுபக்கத்தில் இரண்டாவது படமாக உள்ளது)

அவர் பொக்கிஷமாகப் பாதுகாக்கும் அல்-குர் ஆன் ஒரு செ.மீ.க்கும் குறைவான பருமன் உடையதாம்.

இந்தத் தகவலைக் கேள்விப்பட்டார் துபையிலிருக்கிற நமது மலையாளக் கரையோர மனிதர் ஒருவர். வளைகுடா இதழ்களில் பரபரப்புச் செய்தி கொடுத்தார். படமும் போடவைத்தார்.

(அதுவே முதல் படம்)

விரோதிகள் ஆயிரம்
நினைத்தென்ன ஆகும்?
அவன் எதை நாடுகிறேனோ
அதுதான் நடக்கும்!
- அல்லாமா இக்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வங்கியில் வேலை செய்யும் அந்தக் கோளத்து முஹம்மத் ராஃபியிடம் இருக்கும் குர்ஆன் 3.4 செ.மீ நீளம் 2.3 செ.மீ அகலம். ஆனால் கனமோ 07செ.மீ மட்டுமே. இருபது ஆண்டுகளுக்கு முன் தனது பள்ளித் தோழன் மூலமாக மலபாரில் கிடைத்ததாம். (இந்தியாவுக்குள் இஸ்லாம் நடைபோட்டது இப்பக்கத்தில் இருந்து தான் என்பதைக் கவனித்தில் கொள்வோம்).

அவர் அப்படித் தெரிவிக்க, இலங்கையில், உலப்பனை என்ற ஊரைச் சேர்ந்த அபூ உஷாமா என்ற வாசகர் ஒருவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதத்தில், தன்னிடம் ஒரு அங்குல அகலம், ஒன்னரை அங்குல அகலம், ஒன்றரை அங்குல உயரம் உடைய சிறிய திருமறை இருப்பதாகக் குறிப்பிட்டு வண்ண நிழற்படம் ஒன்றையும் அனுப்பினார். அதில் அவர் ஒரு பொருளை பூதக்கண்ணாடியால் பார்ப்பது உண்மை. ஆனால் அல்-குர்ஆன் தானா என்பது தெளிவாக இல்லை. ஆகவே அப்படம் இங்கு பிரசுரமாகவில்லை.

இப்படி தகவல்கள் அனைத்துமே சின்னஞ்சிறு குர்ஆன்களுக்கு மட்டுந்தானா என்றால் அப்படியும் இல்லை. →




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகப் பாரமுள்ள, கனமான திருமறைகளின் தகவல்களும் உண்டு.

பாகிஸ்தானைச் சேர்ந்த கையெழுத்துக்கலை நிபுணர் ஒருவர் திருக்குர்ஆன் பிரதியொன்றை கையால் எழுதித் தயாரித்திருக்கிறார். இதுவே உலகில் மிகவும் கனமான திருக்குர்ஆன் பிரதி. மொத்த எடை 1500 கிலோ. இதை எழுத இரண்டாண்டுகள் ஆயின. ஒன்றரை இலட்சம் செலவாகியுள்ளது. இந்தச் சாதனையைச் செய்தவர் ஹாஜி பசீர்.

பாகிஸ்தான் செல்லக் கிடைத்தவர்கள் பைசாலாபாத் அருங்காட்சியகத்தில் (மியூசியம்) இதனைக் கண்டு பரவசப்படலாம்.

இந்தத் தகவலை என் 'லைட்ரீடிங்' முதல் பாகத்திலும் இடம்பெறச் செய்ததுண்டு.

அதே நேரத்தில், 'மணிவிளக்கு' 1988, நவம்பர்-டிசம்பர் (ஹிஜ்ரி 1409 - ரபியுல் ஆகிர்) 8ம் பக்கத்தில் படத்துடன் வந்த செய்தியின்படி எட்டு லட்சம் டாலர்களுக்கு லண்டனிலுள்ள ஏலக் கம்பெனி ஏலத்துக்குக் கொண்டுவந்த அதிகக் கவனமுள்ள புராதன குர்ஆன் உண்டு. தூக்குவதற்கு இரண்டு ஆட்களுக்கு மேல் வேண்டும். சரியான எடை தெரிவிக்கப்படவில்லை. ஆகவே பாகிஸ்தான் குர்ஆனைவிட பாரம் கூடியதா என்பது கேள்விக்குறி.

கடைசியாக - கடந்த ஆண்டில் ஏலம் போன ஓர் அபூர்வத் திருமறை பற்றிச் சொல்லி இந்த 'டைஜஸ்ட்' முகப்பின் மறுபக்கப் பெருமையை முடித்துக் கொள்கிறேன்.

தளபதி தாரீக் கேள்விப்பட்டிருப்பீர்கள். தென்பகுதி ஸ்பெயினை (வடமேற்கு ஆப்பிரிக்கா) வெற்றி கொண்டவர். அறபுக்கள் ஆட்சியை சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு நிலைபெறச் செய்தவர்.

அங்கே இஸ்லாமிய அரசின் இறுதிப் பொழுதுகளில் - 13ம் நூற்றாண்டில் அந்த லூசியப் பகுதியில் அந்த அருமையிலும் அருமையான அல்-குர்ஆன் பிரதி 151 பக்கங்களில் ஒரே தொகுதியாக தயாரிக்கப்பட்டது.

அதுவும் எதில்? மென்மை மிக்க ஆட்டுத்தோலில், அழகிய அறபு எழுத்தணியில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் திருமறை பெரிய அளவானது. (360 x 340 மி.மீ)

கண்கவர் சித்திர வேலைப்பாடும் கொண்டது. ஒவ்வொரு பக்கத்தையும் பார்த்து அனுபவிக்க பல பொழுதுகள் வேண்டும். வண்ணக் கலவைகள் வாரி இறைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய அருமையிலும் அருமையான அல்-குர்ஆன் எழுத்தணிப் பிரதியை 1995 ஏப்ரல் 26 ஆம் தேதி ஏலத்திற்கு விட்டார்கள். ஏகப்பட்ட போட்டி. தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்பாத ஒருவர் செலுத்திய தொகை எவ்வளவு என்றால் அசந்து போய் விடுவீர்கள்.

நானும் அசந்து, அதிர்ச்சியடைந்த நிலையில் அபிமானிகளுக்குத் தெரிவிக்கின்றேன்!

**655, 280 அமெரிக்க டாலர்கள். அதாவது 408, 500 ஸ்டேர்லிங் பவுண்ட்கள்!.**

## அற்புத அறேபியர்

சந்தேகமேயில்லை. அவர்கள் அற்புத மனிதர்களாக இல்லாவிட்டால் 7ம் நூற்றாண்டிலேயே இஸ்லாமியச்சுடர் இந்தியாவில் ஒளிவீசியிருக்க இயலாது.

அவர்கள் கடல்பயணத்தில் வல்லவர்கள். பருவகாலக் காற்றை திசைக்காட்டியாக வைத்தே எந்த நாட்டையும் அடைந்து விடுவார்கள்.

16ம் நூற்றாண்டில் வாஸ் கோடாகாமா இந்தியாவில் கால் வைக்க அறேபிய மாலுமியும் இந்தியப்பருவகாலம் காற்றுமாம்!

'மான்சூன்' (பருவக்காற்று) என்ற வார்த்தையே 'முஅஸ்ஸம்' என்ற அறேபிய மொழியிலிருந்தே ஏற்பட்டது!.

## பழிக்குரிய பத்துப்பேர்

அண்ணல் நபி (சல்) அவர்கள், பத்துப் பேர்களை முனிவு (லஃனத்) செய்தார்கள்.

1. மதுவைக் காய்ச்சுபவர்.
2. அதைக் காய்ச்சுவதற்கு உதவி செய்பவர்.
3. அதைக் குடிப்பவர்.
4. அதனைப் புகட்டுபவர்.
5. அதை எடுத்துச் செல்பவர்.
6. அதனை எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்பவர்.
7. அதனை விற்பவர்.
8. அதனை வாங்குபவர்.
9. அதைப் பரிசாகப் பெறுபவர்.
10. அதனை விற்று உண்பவர்.

அறிவிப்பவர், ஹலரத், அனஸ் (ரலி),

நூல்: திர்மதீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடை பெறும் நேரம்...

இந்த 'டைஜஸ்'டின் இறுதிப்பக்கங்களில் பார்வையைச் செலுத்திக் கொண்டிருக்கும் அபிமானிகளிடமிருந்து விடைபெறும் நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

என்ன சேதி நல்ல செய்தியாக அமைய முடியும்?

இருக்கிறது ஒன்று!

'உங்களின் கரங்களை இறுகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்'

- இந்த வரிகள் அல்-குர் ஆனையும் ஹதீஸையும் அறிந்தவர்களுக்கு புதியதொன்றல்ல.

இன்று நாம் முஸ்லிம் உலகை சற்றுநோக்குவோமானால், நூறு கோடி மக்களையும், பெறுமதியான இயற்கை வளங்களையும், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் முஸ்லிம் உலகம் கொண்டிருக்கிறது. இருந்தும் நாம் பிரிந்து வாழ்ந்து பலமிழந்திருக்கின்றோம். நாம் இராணுவ ரீதியாக மட்டுமன்றி பொதுசனத் தொடர்பு சாதனங்கள் மூலமாகவும், கலாசார, பொருளாதார, உள ரீதியாகவும் அன்றாடம் தாக்கப்படுகின்றோம். நாம் தொடர்ந்தும் குறுகிய நோக்கில் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

நம் சின்னஞ்சிறு வயதில் பாகிஸ்தான் உருவாக்கப்பட்ட போது, ஆஹா! 'உலகில் இன்னும் ஒரு முஸ்லிம் நாடு!'' என அகமகிழ்ந்தோம்! ஆனால், இன்று கராச்சி வீதிகளிலும் ஏனைய நகரங்களிலும் நாம் காணும் காட்சிகள் அம்மகிழ்ச்சியைத் தவிடுபொடியாக்கி தலைகுனிவைத் தந்துகொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்பிரிக்க பிலாலும், ரோமானிய ஸுஹைபும் பாரசீக சல்மானும்தாம் ''இஸ்லாத்தின் புதல்வர்கள்'' என்று சொல்லும் நிலையை பெருமானார் அவர்கள் ஏற்படுத்தினார்கள். ஆனால் இன்று இவற்றை மறந்து அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறாக இன ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் நாம் பிரிந்து நிற்கின்றோம்.

நாம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றோம் என்பதே நமக்குத் தெரியவில்லை.

இவற்றையெல்லம் உணர்ந்து தான், ஈரான் ஒவ்வொரு ஆண்டும் மீலாத் காலத்தில் 'ஒற்றுமை வாரம்' எனப் பிரகடனப்படுத்தி நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறது. நபி(ஸல்) பிறந்த நாள் கொண்டாட்டம் அங்கு ஒற்றுமைக் கொண்டாட்டமாக நடக்கிறது.

சுமார் பன்னிரண்டு வருடங்களாக இப்படி, 'ஒற்றுமை வாரம்' கொண்டாடப்படுகிறது. முஸ்லிம்களின் ஒற்றுமையே இன்றைய முஸ்லிம்களின் முதல் தேவை என்பது காலத்தின் கட்டாயமாகிறது.

இந்த 'முஸ்லிம் டைஜஸ்ட்' கருக்கொண்ட பொழுது, இதை உணர்த்த எதைச் செய்வது என்று நினைத்ததுதான் தாமதம்! இலங்கையின் ஈரானிய தூதுவ கலாசாரப் பிரிவு அன்பர்களைத் துணைபுரிய இறைவன் ஏவினான்! அவர்கள் அனுப்பியிருந்த 'தூது' சஞ்சிகைகளில் பலதகவல்களைக் கண்டேன். அருமையான படங்களைப் பார்த்தேன். அதில் ஒன்றே முகப்பை அலங்கரிக்கிறது.

அல்ஹம்து லில்லாஹ்.

பிரிந்து வாழாமல் இணைந்து வாழ்வோம்.

நான் விடைபெறுகிறேன்.

இறைவன் அருள் இருப்பின் மீண்டும் சந்திப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org